உதயன்

சுடர் 30 கதிர் 288 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 24, வியாழக்கிழமை 10.09.2015

## சீனி, உருளைக் கிழங்கின் இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு, செப்.10
இறக்குமதி செய்யப்படும் சீனி மற்றும் உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ கிராம் சீனிக்கான வரி 12 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்குக்கான வரி 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ஆயினும் சீனியின் நிர்ணய விலையில் மாற்றம் ஏற்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த வரி அதிகரிப்பு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்ததாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.
உள்ளூர் உற்பத்திகளை ஊக்கப்படுத்தும் வகையில் இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குகளின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பக்கம் 24.....

## பரவிப்பாஞ்சான் பகுதியில் விரைவில் மீள்குடியமர்வு

கிளிநொச்சி, செப். 10
கிளிநொச்சி மாவட்டத்தின் பரவிப்பாஞ்சான் மற்றும் இரணைதீவு கிராமங்களில் விரைவில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் என மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
இது குறித்து மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,
இறுதிப் போரின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் குறிப்பிட்ட சில கிராமங்களின் ஒரு சில பகுதிகள் இன்றுவரை மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்ட இடங்களான பரவிப்பாஞ்சானில் 36 குடும்பங்களின் காணிகளும், இரணைதீவில் அனுமதி மறுக்கப்பட்ட கிராமத்தின் முழுமையான பிரதேசங்களும் விரைவில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக் கப்படவுள்ளன.

பக்கம் 24.....

## பதவிகளை மாற்றிய பிரதி அமைச்சர்கள்

கொழும்பு, செப். 10
தேசிய அரசின் பிரதியமைச்சர்களாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இரு பிரதியமைச்சர்கள் தமது பதவிகளை மாற்றிக் கொண்டுள்ளனர்.
சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதியமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நிமல் லான்ஸாவும், உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சராக பதவியேற்றுக்கொண்ட அருந்திக்க பெர்னாண்டோவும் தங்களுடைய அமைச்சுப் பதவிகளை மாற்றிக்கொண்டுள்ளனர்.
இதற்கமைவாக, உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சராக நிமல் லான்ஸாவும், சுற்றுலாத் துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதியமைச்சராக அருந்திக பெர்னாண்டோவும் பணியாற்றவுள்ளனர். (த-வ)

# 5 ஆண்டுகள் அசையாது தேசிய அரசு

### ஜனாதிபதி மைத்திரிபால நேற்றுச் சூளுரை



கொழும்பு, செப்ரெம்பர் 10
அரசைக் கவிழ்ப்பதற்குப் பலர் எதிர்பார்த்துள்ளபோதும், இன்னும் 5 ஆண்டுகளுக்கு தேசிய அரசை யாராலும் அசைக்கமுடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.
அங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,
ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா

பக்கம் 24.....

## மலிக், பைஸர், விஜிதமுனி அமைச்சர்களாக நியமனம்



கொழும்பு, செப்.10
தேசிய அரசின் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களாக மேலும் மூவர் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.
இதில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மலிக் சமரவிக்கிரம சர்வதேச வர்த்தக மற்றும் அபிவிருத்தி திட்டமிடல் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் பைஸர் முஸ்தபா உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சராகவும், விஜித் விஜிதமுனி சொய்ஸா நீர்ப்பாசன அமைச்சராகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில்

பக்கம் 24.....

## சம்பிக்க,விஜயதாஸ அரசமைப்பு பேரவைக்கு

கொழும்பு, செப்.10
அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக அரசமைப்புப் பேரவையை நிறுவுவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தமது பிரதிநிதிகளின் பெயர்களைப் பரிந்துரைத்துள்ள னர்.
இதற்கமைய 10 உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புப் பேரவையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நேரடியாக உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவேண்டும்.
இதற்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் பெயரையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவின் பெயரையும் பரிந்துரைத்துள்ளனர்.
இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தமது பிரதிநிதியின் பெயரை முன்மொழிந்தவுடன் 6 உறுப்பினர்கள் தெரிவாவர். மற்றும் ஜே.வி.பி. சார்பில் விஜிதஹேரத்தின் பெயர் கட்சியினால் பரிந்துரை செய்யப்பட்டது.
இவர்களைத் தவிர 3 [illegible] சமூக உறுப்பினர்களும் அர[illegible]மைப்புச் சபைக்[illegible] உள்வாங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-வ)

## கூட்டமைப்பு,ஜே.வி.பி. ஏற்கும் வகையில் தீர்வு

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில், மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்;.

பக்கம் 24.....


## தலைமன்னார்- இராமேஸ்வரம் பாலம் குறித்து மோடி ஆராய்வு

புதுடில்லி, செப்.10
இலங்கையின் தலைமன்னாரையும் தமிழ்நாட்டின் இராமேஸ் வரத்தையும் தரை வழியாக இணைக்கும் பாலத்தை அமைக்கும் திட்டம் தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பொருளாதார நிபுணர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களுடன் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தியுள்ளார்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் இந்தியாவின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பாக, பெரும் தொழில் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், வங்கிகளின் அதிகாரிகள், பொருளாதார நிபுணர்கள், அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை ஒன்றை நடத்தினார்.
இந்தக் கூட்டத்தில், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் தரைவழி இணைப்புப் பாலத்தை அமைப்பது தொடர்பாக

பக்கம் 24.....

## 19 இராஜாங்க, 21 பிரதி அமைச்சர்கள் நியமனம்





கொழும்பு, செப். 10
தேசிய அரசின் புதிய பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.
கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 19 இராஜாங்க அமைச்சர்களுக்கும், 21 பிரதி அமைச்சர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 21 பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 16 அமைச்சுக்களுக்கும், சிறியகட்சிகளுக்கு 4 அமைச்சுகளுக்கும் நியமனக் கடிதங்கள்

பக்கம் 24.....

## ஜெனிவா உறுப்பு நாடுகளுக்கு இனப்படுகொலைத் தீர்மானம்

### வடக்கு மாகாண முதல்வரின் கையெழுத்துடன்

யாழ்ப்பாணம், செப். 10
வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைத் தீர்மானம் மற்றும் சர்வதேச விசாரணை கோரும் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகள், முதலமைச்சரின் கையெழுத்துடன், ஜெனிவாவுக் குச் செல்லும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில், தமிழ்த் தேசியக்

பக்கம் 24.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி ஆணையாளர் பதவியிலிருந்து விலக முடிவு

## அரசியல் கட்சிகளின் தலையீட்டால் தொடர்ந்து சேவை செய்யமுடியாது எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்ட கட்சிகளின் தலையீடுகளால் தொடர்ந்தும் உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகிக்க முடியாது என்று தெரிவித்துள்ள, தற்போதைய உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன், இதன் காரணமாக பதவி விலகத் தீர்மானித்துள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா நகர சபையில் இடம்பெற்றுவரும் ஊழியர்களின் போராட்டம் மற்றும் அந்த நகர சபையில் பணியாற்றும் பிரதம எழுதுநரின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா நகர சபையின் ஊழியர்கள் கடந்த சில தினங்களாக பணிப்புறக்கணிப்பு மற்றும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன் வவுனியா நகர சபைக்குச் சென்றிருந்தார். இதன் போது, நகர சபையின் செயலாளர் மற்றும் பிரதம எழுதுநருடன் சந்திப்பில் ஈடுபட்டிருந்தார். இந்தச் சந்திப்பில் உள்ளூராட்சி ஆணையாளர் தன்னை அவதூறாகப் பேசியதாக பிரதம எழுதுநர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், சுகாதாரத் திணைக்களத்தில் 13 வருடமாக பணியாற்றிய நான், நகரசபைக்கு அண்மையில் இடமாற்றம் பெற்று வந்திருந்தேன். எனக்கு பிரதம முகாமைத்துவ உதவியாளர் பதவி அங்கு தரப்பட்டிருந்தது.

இதன் போது நகரசபை செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அலுவலக உத்தியோகத்தர், நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் எல்லோரும் சேர்ந்து நகரசபை சிற்றூழியர்களின் சம்பளம் பிரச்சனையாக உள்ளது. எனவே அதனை சரி செய்யுமாறு எனக்கு பணி தரப்பட்டிருந்தது.

அதனை நான் ஆராய்ந்த போது அனைவருக்கும் சம்பளத்தினை குறைத்து செய்யப்பட்டு வந்தது தெரியவந்தது. அந்த வேளையில் வடக்கு மாகாண பிரதம செயலாளாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது. ஒருவர் எடுத்த சம்பளத்தை குறைக்க கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி அவ் ஆவணங்களை வைத்து செயலாளருடன் கதைத்து உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து வந்திருந்த சேவைக் கால அறிக்கையையும் வைத்து 2004 சம்பள மாற்று வீதத்தையும் வைத்து அவர்களின் சம்பளத்தை குறைக்காமல் கணிப்பிடும் வகையில் கொடுத் திருந்தேன்.

அதன் பின்னர் நிர்வாக உத்தியோகத்தர் சரிபார்த்து, செயலாளர் அங்கீகாரம் செய்து, கணக்காளரிடம் கொடுத்த போது இவ்வாறு சம்பளம் கொடுக்க முடியாது, இவ்வாறு செய்வது பிழை என்று தெரிவித்தார். இதன் போது நான், இல்லை, இது சரி என வாதாடியிருந்தேன். அவர் அவ்வாறு கொடுக்க முடியாது என்று மீண்டும் தெரிவித்தார். இதனால் நான் அவ் விடயத்தைக் கைவிட்டேன்.

அதன் பின்னர் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து நிர்வாக உத்தியோகத்தர் உட்பட மூன்று பேர் கொண்ட குழுவொன்று வந்து வேறு சுற்றறிக்கை அனுப்புகின்றோம் அதன் பிரகாரம் சம்பள வேலையை செய்யுமாறு தெரிவித்தார்கள். இதனையடுத்து இரண்டு வாரத்தின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை 11 மணிக்கு பின்னர் தொலைநகலில் சுற்றறிக்கை வந்திருந்தது.

எனினும் நான் விடுமுறையில் சென்றிருந்தேன். இவ் வேளையில் சிற்றூழியர்கள் 7 ஆம் திகதியில் இருந்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை நான் அறிந்திருக்கவில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை (நேற்று முன் தினம்) நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு என்னை வருமாறு அழைத்திருந்தார். அவரின் பணிப்புரைக்கமைய எனது விடுமுறையை இரத்து செய்து அலுவலகத்திற்கு சென்று சுற்றறிக்கையை வாசித்துக் கொண்டிருந்த போது உள்ளூராட்சி ஆணையாளர் அங்கு வந்து என்னை அவதூறா கப் பேசினார்.

இதன் போது என்னை, கேட்போர் கூடத்திற்கு அழைத்து சென்று தகாத வார்த்தைகளால் பேசி, எந்த அரசியல்வாதியை பிடித்து செய்தாய் என்று தொடங்கி சொல்ல முடியாத மிக மிக கேவலமாக என்னை பல அதிகாரிகளுக்கு முன் வயதானவர் என்றும் பார்க்காமல் பேசினார்.

அதன் பின்னர் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டவர்களிடம் சென்று என்னாலேயே இந்தப் பிழை ஏற்பட்டது எனவும் உள்ளூராட்சி ஆணையாளருடன் கதைக்குமாறு தெரிவிக்குமாறு சொன்னார். அதன் பிரகாரம் நான் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டவர்களிடம் சென்று தெரிவித்திருந்தேன். 33 வருட அரச பணிக்காலத்தில் இவ்வாறான ஓர் அவமானத்தை நான் கேட்டதில்லை. நான் இறந்து விடலாம் என்றே எண்ணுகின்றேன். எனினும் எனது கணவருக்காக உயிருடன் இருக்கின்றேன் என்று தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பாக, உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதனிடம் கேட்ட போது, அதிகாரி செய்த தவறைச் சுட்டிக் காட்டிப் பேசியது உண்மை. அது என்னுடன் சென்ற அதிகாரிகளோடும் அங்குள்ள அதிகாரிகளோடும் தனி அறையிலேயே நடந்தது.

தான் செய்ததுதான் சரி என்றும், எங்களால் விளங்கப்படுத்திய போதிலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் தான் செய்தது சரியென்று விடாப்பிடியாக பிரதம எழுதுநர் நின்றார். அதன் பின்னர், வேறு மாவட்டத்துக்கு இடமாற்றும் சூழ்நிலை ஏற்படும் என்று விளக்கிப் பேசிய பின்னர்தான், பிழையை ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து நகர சபைச் செயலாளருடனும், இந்தப் பிரச்சினையை உருவாக்கிய சபையின் பிரதம எழுதுநரையும் சென்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டவர்களுக்கு விளங்கப்படுத்துமாறு கூறியதுடன் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர், செயலாளர் என்னுடன் கதைப்பதற்கு உள் வருமாறு அழைத்திருந்தேன்.

குறித்த பிரதம எழுதுநர் வெளியில் சென்று, தன்னை அச்சுறுத்தியதாகவும், இந்தச் சம்பளம் உங்களது சரியான சம்பளம் என்று கூறி, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மீண்டும் தூண்டி விட்டார். என்னுடன் வந்து கதைப்பதற்கு தயாரில்லை. விரும்பினால் என்னை, தங்கள் இருக்கும் இடத்தில் வந்து கதைக்குமாறு பணித்ததுடன், ஊடங்கள் முன்னிலையில் வைத்து கதைக்க வேண்டும் என்று நிபந்தனையை போராட்டக்காரர்கள் விதித்தனர்.

அரச நிர்வாகத்தில், உத்தியோகத்தர்களின் பிரச்சினை தீர்ப்பது தொடர்பிலான கலந்துரையாடலின் போது ஊடகங்கள் சமுகத்தில் கதைப்பது, விதிமுறைகளை மீறிய செயற்படாகும். ஆகவே நான் உடன்படவில்லை. இவர்களின் சம்பள ஏற்றத்திலேயோ, சம்பள முரண்பாட்டைத் தீர்பதிலோ, எமது குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரையில் எந்த விதமான மாற்றமும் இல்லை. அதனை அவர்களுக்கு விளங்கப்படுத்துவதை விட்டு பிழையான தகவல்களைக் கொடுத்து அவர்களை மீண்டும் மீண்டும் தூண்டி பிரச்சினை உருவாக்கியுள்ளார் பிரதம எழுதுநர்.

இதனை விட ஏற்கனவே 41 பேருக்கு சரியான சம்பளம் வழங்கப்பட்டது. அதனை அவர்களின் தனிப்பட்ட கோவைகளிலிருந்து, அவற்றை கழற்றி எடுத்து அத்தனை பேருக்கும் தவறான சம்பளத்தை வழங்கியுள்ளார்.

நான் உங்களைப் பேசுவது, பொய்யான சம்பள மாற்றத்தைச் செய்துள்ளீர்கள். அந்த உத்தியோகத்தர்களை ஏன் தூண்டுகின்றீர்கள். எந்த அரசியல் வாதியின் பின்னணியில் இப்படிச் செய்கின்றீர்கள் என்று கேட்டது உண்மை. ஏனைய குற்றச்சாட்டுக்களை மறுக்கின்றேன்.

உண்ணாவிரதத்துக்கான காரணம் தொடர்பில் போராட்டம் நடத்தியவர்களிடம் கேட்டேன். இதன் போது ஆத்திரமூட்டும் வகையில் செயற்பட்டதுடன், அலட்சியப் போக்கில் அவர்கள் செயற்பட்டமையால், நான் அங்கிருந்து அகன்று வாகனத்தில் ஏற முற்பட்டேன். அப்போது எனது வாகனத்தை அவர்கள் தாக்கினர். தொழிற்சங்கத் தலைவர் என்னுடன் முரண்பட்டார். இதனை அங்கிருந்த ஒருவர் கைத்தொலைபேசியில் வீடியோ எடுத்தார். தொழிற் சங்கத் தலைவரை மன்னியுங்கள். இந்த விடயத்தை விடுங்கள் என்று சொல்லி அவரது வீடியோ எடுக்கும் நடவடிக்கையை கைவிடுமாறு கோரினேன். தற்போது அதனை நான் தாக்கியதாக தெரிவித்துள்ளார்கள்.

உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு வந்து 5 மாத அனுபவத்தில் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்ட கட்சிகளின் தலையீடுகளும், தொடர்ந்து ஊழலில் ஈடுபட்ட இந்த அதிகாரிகளை எந்த அதிகாரி வந்தாலும் திருத்த முடியாது என்பதும் மிக வேதனைக்குரிய விடயம். அதனால் நான் இந்தப் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளேன். தர்மம் என்றும் நிலைத்திருக்கும். மக்கள் பணியை தொடர்ந்து செய்வேன் - என்றார். (ற-5,402)

## வவு.நகர சபை ஊழியர்களுடன் சிவசக்தி ஆனந்தன் எம்.பி பேச்சு



வவுனியா, செப்.10

வவுனியா நகர சபை ஊழியர்களின் அடிப்படை சம்பளம் குறைப்புத் தொடர்பான உணவு தவிர்ப்புப் போராட்டம் 3ஆவது நாளாக நேற்றும் நடைபெற்ற நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

நாடாளுன்ற உறுப்பினர் நகர சபை ஊழியர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் நகர சபை செயலாளருடனும் பேச்சு நடத்தியுள்ளார். அதன் பின்னர் தெழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்து நகர சபை செயலாளர், கணக்காளர் உட்பட அனைவருடனும் பேச்சு நடத்தி உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று சிலரது கோவைகளைப் பரிசீலனை செய்து அவர்களுடைய மிகுதி சரிபார்த்து அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துவதாக நகர சபையின் அதிகாரிகள் கூறினர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சங்க உறுப்பினர்கள் நிலுவைகள், கொடுப்பனவுகள் என்பன எமது கையில்கிடைக்கும் வரை தமது உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தனர். (ற)

## கசிப்புடன் கைதானோருக்கு கடூழிய சிறைத் தண்டனை

### மோட்டார் சைக்கிளும் அரசுடைமையாக்கப்பட்டது

9 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஒரு வருட கடூழியச் சிறையும், இரண்டரை லட்சம் ரூபா அபராதமும் விதித்த கிளிநொச்சி நீதிமன்று அவர்களது பல லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை அரசுடைமை யாக்குமாறும் நேற்றுத் தீர்ப்பளித்தது.

கிளிநொச்சி நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

தர்மபுரம் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த இருவரையும் பொலி ஸார் சந்தேகத்தில் மறித்துச் சோதனையிட்டபோது அவர்களிடம் 9 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டது. அதையடுத்து குறித்த இரு வரையும் கைது செய்தனர்.

அவர்களுக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. குறித்த நபர்களை முதலில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அதன் பின்னர் அது தொடர்பான விசாரணைக்காக வழக்குநீதிமன்றில் எடுக்கப்பட்ட போது குற்றத்தை ஏற்றுக் கொண்டதனையடுத்து அவர்க ளுக்கு நேற்றுத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்படி ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் இரண்டரை லட்சம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. தவிர அவர்கள் இரு வருக்கும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்தது நீதிமன்று. அவர்கள் கசிப்பை எடுத் துச் சென்ற பல லட்சம் ரூபா பெறு மதியான மோட்டார் சைக்கிளை யும் அரசுடைமை யாக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ற-4,ரி3)

## புனித மரத்தை சுற்றியமைக்கப்பட்ட அத்திபாரம் விசமிகளால் உடைப்பு

### வற்றாப்பளை ஆலய நிர்வாகத்தினர் பொலிஸில் முறைப்பாடு

முள்ளியவளை மூன்றாம் கட்டை வற்றாப்பளை சந்தியில் கோவில் நிர்வாகத்தின் பராமரிப்பில் நிற்கும் புனித மரமாகிய பனிச்சை மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட பாதுகாப்பு அத்திபாரம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளது.

வற்றப்பளைப் பொங்கலையொட்டி காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து சிலாவத்தைக்கு தீர்த்தம் எடுக்கச் செல்லும்போது மூன்றாம் கட்டைச் சந்தியிலுள்ள பனிச்சை மரத்தின் நிழலின் கீழ் தீர்த்தக் குடத்தினை இறக்கி வைத்து பக்தர்கள் இளைப்பாறிச் செல்வது வழமையாகும்.

இந்த மரத்தின் கிளைகள் அண்மையில் இனந்தெரியாதோரால் வெட்டப்பட்டிருந்தன. அதன் பின்னர் ஆலய நிர்வாகத்தினர் இந்த மரத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலியமைக்க அத்திபாரமிட்டிருந்தனர். அந்த அத்திபாரமும் தற்போது இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட் டுள்ளது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் பொ.குகதாசன் தெரிவித்தார். (ற-102)

## பெரும்போக செய்கைக்கான விதை நெல் பெறுவதில் ஆர்வம்

யாழ். குடாநாட்டில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கென விவசாயிகள் விதை நெல்லை கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

குடாநாட்டு விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தால் விநியோகப்படும் விதை நெல்லை விவசாயிகள் முண்டியடித்து பெற்றுச் செல்கின்றனர். இதுவரைக்கும் ஆயிரத்து ஐநூறு புசல் விதை நெல்லை சங்கம் விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளது.

பீ.ஜீ.406 இனத்தைச் சேர்ந்த இந்த விதை நெல்லை ஏற்கனவே சங்கம் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்திருந்தது.

கிட்டத்தட்ட மூவாயிரம் புசல் விதை நெல் இந்தமுறை கொள்வனவு செய்யப்பட்டதாக சங்கத்தில் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தால் பாதிப்பில்லை

## உறுதிபடத் தெரிவிக்கின்றார் யாழ்.மாவட்ட அரச அதிபர்



யாழ்ப்பாணம், செப்.10

யாழ். மாவட்டத்தில் குடிதண்ணீரின் தரம் வேகமாக மாற்றமடைந்து வருகின்றது. அத்துடன் குடி தண்ணீரின் அளவும் குறைந்து வருகின்றது என்று குறிப்பிட்டுள்ள யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இவற்றைக் கருத்தில் கொண்டு குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே தாளையடியில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

அந்தத் திட்டத்திட்டத்தின் மூலம் குறித்த பகுதி மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் குடிதண்ணீரின் தரம் மற்றும் குடிதண்ணீரின் அளவு என்பவற்றில் பெரும் பிரச்சினை காணப்படுகின்றது. எமக்குக் கிடைக்கும் நிலத்தடி நீரின் அளவும் குறைவடைந்து செல்கின்றது. இந்த நிலைமை தொடர்வதால் எதிர்காலத்தில் குடிதண்ணீருக்குப் பெரும் பிரச்சினை ஏற்படும். – என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக – மக்களுக்கு குடி தண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன்பிரகாரமே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கடல்நீரை நன்னீராக்கும் வேலைத் திட்டம் ஒன்றை மருதங்கேணி, தாளையடியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

இந்தத் திட்டத்துக்கு அந்தப் பகுதியில் உள்ள மக்களில் ஒரு பகுதியினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம் குறித்த பகுதிக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் இந்தத் திட்டம் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து வந்துள்ள அதிகாரிகளால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தால் ஏற்படும் சாதக, பாதக விடயங்களை அவர்கள் ஆராய்கின்றனர். இந்தத் திட்டம் மூலம் குறித்த பகுதி மக்களுக்கு பாதக நிலைமை ஏற்படுமாயின் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கைவிடுவார்கள். மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நோக்கமாகும்– என்றும் அரச அதிபர் தெரி வித்தார்.

கடலுக்குக் கீழாக நீர்க்குழாய்களைக் கொண்டு செல்ல வேண்டி ஏற்படும். அந்தப் பணி நடைபெறும் போது மட்டுமே அந்தப் பகுதி மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். அதற்கான நட்டஈட்டை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.– என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ற–106)

# இன்று ஆரம்பமாகின்றது நுளம்புக் கட்டுபாட்டு வாரம்

## சுகாதார,பாதுகாப்பு அதிகாரிகள் வீடுகளுக்கு வருவர்

யாழ்ப்பாணம், செப்.10

நாட்டிலிருந்து நுளம்புகளை முழுமையாக அகற்றி தொற்றுநோய்கள் ஏற்படாமல் மக்கள் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு தேசிய நுளம்புக் கட்டுப் பாட்டு வாரம் இன்று முதல் நடைமுறைப் படுத்தப் படுகின்றது.

இன்று ஆரம்பமாகும் இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவி வரும் பொதுப் பிரச்சினைகளுள் நுளம்புகளால் ஏற்படும் தொற்றுநோய்களும் முக்கிய இடம் வகிக்கின்றன என சுகாதார சேவைகள் பொதுப் பணிப்பாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

நுளம்புகளை நாட்டிலிருந்து முற்றாக அழிக்கும் பொருட்டு சுகாதார அமைச்சு, ஏனைய அமைச்சுக்களுடனும் நிறுவனங்களுடனும் இணைந்து பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன் படையினரும் பொலிஸாரும் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும் தற்போது நுளம்புகளின் பரவலாக்கம் அதிகரித்துள்ளது. எனவே அவற்றினை அழிக்கும் பொருட்டே இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இந்தக் கட்டுப்பாட்டு வாரத்தினுள் அனைத்து சுகாதார உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு அதி காரிகளும் அனைத்து வீடுகள், நிறுவனங்களுக்கும் சென்று நுளம்பு பர வும் இடங்களை கண் டறிந்து அவற்றுக்கான தகுந்த நடவ டிக்கைகளை எடுக்க வேண்டுமென பணிப் புரை விடுக்கப்பட் டுள்ளது. அவ்வாறு ஏதாவது நுளம்பு பர வும் இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு மிடத்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் படும்.– என்றார்.

அத்துடன் வீடுகள், நிறுவனங்களுக்கு வருகை தரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பொதுமக்கள் தங்களது பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் ஜனவரி மாதத்திலிருந்து சுமார் 19 ஆயிரத்து 888 வழக்குகள் நுளம்புகள் தொடர்பான தொற்றுநோய் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்து 426 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தகவல் தெரிவித்துள்ளது. (ற–வ)

# மலவாயிலில் கஞ்சாவுடன் இளைஞர் கைது

வலி.வடக்கு, செப்.10

மல வாயிலில் கஞ்சாவை மறைத்து வைத்திருந்த ஒருவர் யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஸ்ரீகஜன் தலைமையில் கொட்டடிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவேளை சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரைச் சோதனையிட்டபோது அவரது மலவாயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 249 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ற–86)

# சுற்றுலாத்துறை விடுதி, பயிற்சி நிலையம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப்.10

வடக்கு மாகாணத்துக்கான சுற்றுலாத்துறை விடுதி மற்றும் பயிற்சி நிலையம் என்பன நேற்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், உலக கனடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எஸ்தர் மைலநொடஸ் மற்றும் வடமாகாண சுற்றுலாத் துறை அமையத்தின் தலைவர் ரி.திலகராஜ் ஆகியோரால் திறக்கப்பட்டன.

வடமாகாண சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் பொருட்டு யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கு சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் எனும் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்பட்டது.

உலக கனடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் அமைப்பின் யாழ்.மாவட்ட அலுவலகம், வடமாகாண சுற்றுலாத் துறை சம்மேளனத்துடன் இணைந்து குறித்த க்ற்கை நெறியை ஆரம்பித்துள்ளது. (ற–ரி2,ரி5)



# யாழ்.நீதிமன்ற தாக்குதல்: 21 பேருக்கு மறியல் நீடிப்பு

## 3 பேருக்குப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், செப் 10

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு மறிய லில் உள்ள 24 பேரில் 3 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதிவான் மன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டது.

நீதிமன்ற தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய மூன்று வழக்குகள் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டன.

இவ்வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். கடந்த தவணை ஆவணங்களுடன் சத்தியக் கூற்றை அணைத்திருந்த மூவருக்கு நீதவான் பெ.சிவகுமார் பிணை வழங்கினார்.

18 வயதுக்குட்பட்ட மாணவன் என்ற வகையிலும், மருத்துவ காரணங்களுக்காகவும் குறித்த சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. ஒவ்வொரு சந்தேகநபரும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதி யான மூன்று ஆட்பிணையாளிகளின் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடுமாறும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் பிணை நிபந்தனை இரத்துச் செய்யப்பட்டு வழக்கு முடியும்வரையும் விளக்கமறியலில் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையுடனும் பிணை வழங்கப் பட்டது. ஏனைய் சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவுறாததால் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது.

ஏனைய 21 நபர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கம றியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ற–4,86,103,106)

# போதையில் சாரத்தியம்: சாரதி அனுமதி பத்திரம் ரத்து

கிளிநொச்சி, செப்.10

மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு ஒருமாதக் கடூழிய சிறையும், 7 ஆயிரத்து 500ரூபா அபராதமும் விதித்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று ஒருவருட காலத்துக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தையும் இரத்துச் செய்துள்ளது.

நீதிமன்றில் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மாவட்ட நீதிவான் எம்.ஐ.வாஹாப்தீன் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார். (ற–ரி3)

# யாழில் மீள்குடியமர்த்தப்பட்டோரை சந்தித்தனர் உலக வங்கி அதிகாரிகள்

## அவர்களின் தேவைகள் தொடர்பான விவரங்களைச் சேகரித்தனர்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்களின் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்காக உலக வங்கி அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

யாழ்.மாவட்ட செயலகத்[illegible] பாட்டில் அண்மையில் மக்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்ட இடங்களுக்குச் சென்று அவர்கள் நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

பளை வீமன்காமம், வறுத்தலை விளான், வளலாய் ஆகிய இடங்களுக்கே அவர்கள் நேரில் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.

[illegible] ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் அவர்கள் மக்களிடம் நேரடியாகக் கேட்டறிந்துள்ளனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான தொழில் வாய்ப்புகள் தொடர்பான விவரங்கள், மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் அரசால் வழங்கப் பட்ட உதவிகள், தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பான விவரங்களையும் அவர்கள் சேகரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–106)

# கட்டுத் துப்பாக்கி வெடித்து ஒருவர் காயம்

வவுனியா, செப். 10

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கட்டுத் துப்பாக்கி வெடித்து ஒருவர் காயமடைந்துள்ளார்.

சிதம்பரபுரம், கல்நாட்டினகுளம் பகுதியைச் சேர்ந்த விஜியகுமார் நேசகுமார் (வயது–26) என்பவரே காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்த விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த பெரும்போக நெல்லை தனியாருக்கு விற்க முடிவு

## களஞ்சியசாலைகளின் பற்றாக்குறையை அடுத்து நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை

கொழும்பு, செப்.10

கடந்த பெரும்போகத்தின்போது கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 30 ஆயிரம் மெற்றிக்தொன் சம்பா நெல்லை தனியாருக்கு விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. விலைமனுக் கோரல் நடைமுறையின் கீழ் குறித்த நெல் விற்பனை செய்யப்படவுள்ளது என்று சபையின் தலைவர் எம்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

களஞ்சியசாலைகளின் பற்றாக்குறை தற்போது பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அதற்குத் தீர்வு காணும் வகையில் நெல் சந்தைப்படுத்தல் சபை இந்த நடவடிக்கை முன்னெடுத்துள்ளது.

அதேவேளை, வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்கள் உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் அரசின் நிர்ணய விலையின் கீழ் நெல் கொள்வனவு செய்யப்படும் நடைமுறை முறையாக நடைபெறுவதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆயினும் களஞ்சிய சாலை வசதி இன்மையால் அதிகளவான நெல் லைக் கொள்வனவு செய்ய முடியா துள்ளது என்று அதிகாரிகள் கூறு கின்றனர்.

அதேவேளை, நெல் கொள்வனவு நடவடிக்கைளை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அண்மைக் காலமாக விவசாயிகள் கோரி வருவதுடன், சில இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் மேற்கொண்டிருந்தனர். (ற)

# சத்துருக்கொண்டான் படுகொலை 25 ஆவது நினைவு தினம் நேற்று

25 ஆண்டுகளுக் முன்னர் 184 பொது மக்கள் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட சத்துருக்கொண்டான் படுகொலையின் நினைவு தினம் நேற்று நினைவு கூரப்பட்டது.

சத்துருக்கொண்டானில் நினைவு கூரல் நிகழ்வுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் நினைவுகூரலை நடத்த முற்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே முறுகல் சிலை ஏற்பட்டது.

உயிரிழந்தவர்களின் நினைவாக கொக்குவிலில் அமைக்கப்பட் டுள்ள நினைவுத்தூபி முன்பாக நினைவு கூரல் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்த முற்பட்டபோது இவ்வாறான நிகழ்வுக்கு நீதிமன்று தடை விதித்துள்ளது என்று தெரிவித்த பொலிஸார், பொதுமக்கள் கூடும் இடங்களில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறும் போது மக்களுக்கும் அண்டிய சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படாது தடுக்கவே இத்தடை விதிக்கட்டுள்ளது என்ற நீதிமன்ற உத்தரவை பொலிஸார் வாசித்துக் காட்டினர்.

நீதிமன்ற உத்தரவை ஏற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலயத்தில் 'நாங்கள் சுடர் ஏற்றுவோம். அதைத் தடுக்க முடியாது' எனத் தெரிவித்து கொக்குவில் வீரமா காளியம்மன் ஆலயத்தில் 24 ஆண்டுகளை நினைவு கூர்ந்து 24 அகல் விளக்குகளை ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அதிபரும், சத்துருக்கொண்டான் கண்ணகியம்மன் ஆலய தலைவருமான க.சிவக்கொழுந்து:-

சத்துருக்கொண்டானில் 1990ஆம் ஆண்டுகாலப்பகுதியில் உயிரிழந்த உறவினர்களை நினைவு கூரும் நிகழ்வை நடத்துவதற்கு நீதிமன்று தடைவிதித்துள்ளது என்று தெரிவித்தனர். அதனால் நினைவு தின நிகழ்வுகள் சத்துருக்கொண்டான் கண்ணகியம்மன் ஆலயத்தில் நடத்தப்பட்டன.- என்றார்.

உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நடத்தப்படும் நிகழ்வைத் தடுத்தமையானது அடிப்படை மனித உரிமை மீறல். இந்த நாட்டில் தமிழர்களை அடக்கு முறைக்குள் வைத்திருக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை - என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மட்டக்களப்பு பொலிஸ் தலைமை பொறுப்பதிகாரி ஹெட்டியாராய்ச்சி:-

முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்ளப்பட்டமை காரணமாகவே நீதிமன்றின் ஊடாக இந்த நிகழ்வினை தடைசெய்தோம். எதிர்வரும் காலங்களில் முன்னறிவித்தல் பெற்று நிகழ்வுகளை நடத்தலாம்.- என்றார்.

நினைவு கூரல் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பா.அரியநேத்திரன்:-

மட்டக்களப்பு மாவட்டத்திலே பல படுகொலைகள் நடந்தேறி இருக்கின்றன. இந்தப் படுகொலை களில் தமிழ் மக்கள் வகைதொகையின்றி சிங்கள இராணுவத்தினரால் துடிக்கத் துடிக்க படுகொலை செய்யப்பட்டு கிடங்குகளில் உயிருடன் போட்டு எரித்த வரலாறுகளே அதிகம். அவர்களின் நினைவாகக்கூட ஒரு சுடரினை ஏற்றி உயிர்நீத்த தமிழ்மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு முடியாத நிலையிலே இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். - என்றார். (ற-10)

# கணேசபுரம் பிரதான வீதிக்கு வீதி விளக்கு பொருத்த ஏற்பாடு



வவுனியா, செப்.10

வவுனியா, மன்னார் வீதியில் அமைந்துள்ள கணேசபுரம் பகுதியில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என அந்தப் பகுதி மக்கள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். அதையடுத்து அமைச்சரின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து பிரதான வீதிக்குமின்விளக்குகள்பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கணேசபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடை பெற்றது. கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச சபையின் செயலாளர் விஜயதாஸ், கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் விஜயதாஸ், தலைவர் நடேசன் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(ற)



*புதுக்குடியிருப்புப் பகுதியில் முல்லைத்தீவு இராணுக் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கட்டப்பட்ட இரு வீடுகள் நேற்று பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டன. கணவரை இழந்தவரும், ஊனமுற்ற வருமான ஒரு பெண்ணுக்கும், பெற்றோரை இழந்தவரும், இராணுவத்தில் இணைந்துள்ள ஒரு பெண்ணுக்குமே இந்த வீடுகள் வழங்கப்பட்டன. அவற்றை கட்டளை அதிகாரி பி.ஈ.யு.எஸ்.விதானகே உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். (ற-402)*

## பாவனைக்கு உதவாத உணவு விற்பனை: 6 வர்த்தகர்கள் கைது

மட்டக்களப்பு, செப்.10

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் மற்றும் பழவகைகளை விற்பனை செய்து வந்த ஆறு வர்த்தகர்கள் பொதுச் சுகாதார அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெருமளவிலான பாவனைக்குதவாத உணவுப்பொருள்கள் மற்றும் உணவுத் தயாரிப்பிற்கு பயன்படுத்தி வந்த பாத்திரங்கள் என்பனவும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மாணிக்கம் உதயகுமாரின் பணிப்புரையின் கீழ், மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல விடுதிகள், உணவு விடுதிகள், பழக்கடைகள், சிற்றுண்டி சாலைகள் என்பன திடீர் சுற்றிவளைப்பு மூலம் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது பழுதடைந்த, அழுகிய பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்த 6 வர்த்தக நிலையங்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் பெருமளவு சமையல் பாத்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பாவனைக்குதவாத உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் அழிக்கப்பட்டன என்று மாநகர சபை பிரதான பொது சுகாதார பரிசோதகர் நேசதுரை தேவநேசன் தெரிவித்துள்ளார். (ற-10)



# எமக்கு நீதி கிடைக்கவில்லை

மட்டக்களப்பு, செப்.10

படுகொலைச் சம்பவம் நடந்து 25 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை அதற்கான நீதி கிடைக்கவில்லை என மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் இலங்கை இராணுவத்துக்குத் தொடர்பு இருப்பதாக பல்வேறு விசாரணைகளின் போது தங்களால் சாட்சியங்கள் அளிக்கப்பட்ட போதும் ஒரு தொகை இழப்பீட்டையும் இறப்புச் சான்றிதழையும் மட்டும்தான் தங்களால் பெற முடிந்தது என்று அவர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

1990ம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதி மாலை 5 மணியளவில் இராணுவ உயரதிகாரியின் விசாரணைக்கு எனக் கூறி அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவத்தின் போது குறித்த முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் அவ்வேளை 19 வயதான கந்தசாமி கிருஷ்ணகுமார் மட்டுமே கூரிய ஆயுதத்தினாலான வெட்டுக் காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார். ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு. பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையிலும் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் சாட்சியமளித்தனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். (ற-10)

# பெரும்போக விவசாய கூட்டத்தை புறக்கணித்த மட்டு. விவசாயிகள்

## தமது பிரச்சினை குறித்து அரச அதிபர் உறுதிமொழி தரவேண்டும் எனத் தெரிவித்து

மட்டக்களப்பு, செப்.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக விவசாயச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற நிலையில், விவசாயிகளில் ஒரு சாரார் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர். மாவட்ட அரச அதிபரின் பிரதிநிதியாக மாவட்ட மேலதிக அரச அதிபர் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த நிலையில் தமது பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபரே கேட்டறிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்தே குறித்த விவசாயிகள் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.

ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதர் தலைமையில் ஆரம்பமான இக்கூட்டத்துக்கு அரச அதிபரின் பிரதிநிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். கிரிதரன் கலந்துகொண்டிருந்தார். எனினும், தாங்கள் நீண்டகாலமாக எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தரும் உறுதி மொழிகளை அரச அதிபரே வழங்க வேண்டும் என்று தெரிவித்து குறித்த விவசாயிகள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

கடந்த முறை ஏற்பட்ட வெள்ளத்தின் போது தகர்ந்து போய் திருத்தம் செய்யப்படாது கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற மாவடி ஓடைப் பாலம் திருத்தம் செய்யப்பட வேண்டும். மேய்ச்சல் தரைப் பிரச்சினையும் பெரும்பான்மைச் சமூக அத்துமீறிகளின் குடியேற்றமும் நிறுத்தப்பட வேண்டும். காட்டு யானைகளின் தொல்லைகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க அதிகாரிகள் தவறி விட்டனர் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை மாவடி ஓடைப் பாலத்தை திருத்தும் பணிகளைச் செய்யாமல் அலட்சியப் போக்குடன் நடந்து கொள்ளும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அதிகாரிகள் அதற்குப் பதில் கூற வேண்டும். ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளிகள் என மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். கிரிதரன் எச்சரித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சர் கே. துரை ராஜசிங்கம், மற்றும் சகல திணைக் களங்களின் அதிகாரிகள். கரடியாறு பொலிஸ் பொறுப்பதி காரி சி. மஹலேகம் உள்ளிட்ட இன்னும் பலரும் விவசாயிகளும் கலந்து கொண்டனர்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறின் எதிர்ப்பு நடவடிக்கை

## அரசை எச்சரிக்கின்றார் சோபித தேரர்

கொழும்பு, செப்.10
அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதுபோனால் மீண்டும் மக்களுடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்போம் என்று நீதியானசமூகத்துக்கானதேசிய வேலைத் திட்டத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.
தேசியஅமைப்புகளின்ஒன்றியம்நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தேச பக்தி தேசிய செயற்றிட்டத்தின்செயலாளரும், தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் செயலாளருமான வசந்த பண்டார தெரிவித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையிலேயே சோபித தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டுப் பணத்தில் செயற்படும் சோபித தேரர் நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான சமூக சேவை அமைப்புகளைப் பொய்யாகச் சோடித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து ஜனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைப்பதற்கான உடன்படிக்கையைச் செய்தார். தற்போது இது தொடர்பில் அனைவரும் வாயடைத்துப் போயுள்ளனர் என்று வசந்த பண்டார குற்றஞ்சாட்டியிருந்தார்.
இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள சோபித தேரர், எவருக்கும் எந்தவொரு விடயத்தைப் பற்றியும் விமர்சனம் செய்யும் உரிமை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (ற)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஈ.சரவணபவனுக்குக் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருகோணமலையில் ஆதரவாளர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்திக் கௌரவித்தனர். (ற-40)

## சிறுபான்மையினரை நேசிக்கும் ஒருவராக ஜனாதிபதி திகழ்கிறார்

**ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு**



அம்பாறை, செப்.10
முஸ்லிம்கள் மீது மிகுந்த கரிசனை கொண்டவராகவும், இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களையும் நேசிக்கின்ற ஒருவராகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணப்படுகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.
சிகரம் ஜும்ஆ பள்ளிவாசலுக்கான புதியகட்டடத்துக்கு அடிக்கல் நடும்வைபவம், பள்ளிவாசல் தலைவர் எம்.தாஹீர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு அடிக்கல் நட்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களையும் நேசிக்கின்ற ஒருவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளங்குகிறார். நான் இந்தப் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும், இறைவன் தேசியப் பட்டியல் மூலம் மீண்டும் என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளான். இதை வைத்து தொடர்ந்து என்னால் முடிந்த அபிவிருத்திப் புணிகளை மேற்கொள்வேன்.
நான் இந்த சிகரம் கிராமத்துக்குப் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்து வருகின்றேன். போராலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட இந்தச் சிகரம் கிராம மக்கள் வீட்டு வசதியின்றித் தற்காலிக கொட்டில்களில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள்.
அவர்களுக்கு நாங்கள் ஒவ்வொருவருக்கும் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக் கொடுத்து மிகப் பெரிய உதவியைச் செய்தோம். இன்று அவர்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். நாங்கள் இவற்றையெல்லாம் வாக்குகளை எதிர்ப்பார்த்து, அரசியலுக்காகச் செய்யவில்லை. இறைவன் தந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு உதவுவதே எமது நோக்கம் – என்றார்.
குறித்த பள்ளிவாசலானது, சிறிலங்கா ஹிறா பவுண்டேசன் நிறுவனத்தினால் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ் புல்லாஹ்வின் முயற்சியின் பேரில் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. (ற)

## பாலிதவுக்கு அமைச்சுப் பதவி வழங்கக் கோரிப் போராட்டம்


கொழும்பு, செப்.10
புத்தளம் மாவட்டத்தைப் பிரநிதித்துவப்படுத்தும் பாலித ரங்கே பண்டாரவுக்கு அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட வேண்டும் என்று கோரி சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.
பிரதேசத்தின் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் இணைந்து சிலாபத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
தேர்தலில் வெற்றியீட்டினால் புத்தளம் பிரதேசத்துக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும் என்று பிரதமர் தெரிவித்திருந்தார் என்றும்–ஆயினும் அமைச்சுப் பதவி வழங்கலில் புத்தளம் மாவட்டம் புறக்கணிக்கப்படுகின்றது என்றும் – போராட்டத்திலாடுபட்டவர்கள்தெரிவித்துள்ளனர்.
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளதுடன், விருப்பு வாக்குகள் அடிப்படையில் பாலித ரங்கே பண்டார முன்னிலையில் உள்ளார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
தேசிய அரசு இன்னமும் 5 அமைச்சர்களை நியமிப்பதற்கு அனுமதித்துள்ளது. அதனால் பாலிதவுக்கு அமைச்சுப் பதவியொன்றை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## மன்னாரில் பல கிராமங்களில் செல்வம் எம்.பிக்கு வரவேற்பு

மன்னார், செப்.10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மன்னாரில் உள்ள பல்வேறு கிராமங்களில் வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.



மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறுதோப்பு, துள்ளுக்குடியிருப்பு, கவயன் குடியிருப்பு, பாலிவிலுப் பாட்டம் குடியிருப்பு, கீளி யன் குடியிருப்பு, பருத்திப்பண்ணை, கட்டுக்காரன் குடியிருப்பு, பூவார் குடியிருப்பு, நடுக்குடா ஆகிய கிராமங்களில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.
நடைபெற்ற முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்து வெற்றிபெற உதவிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த கிராமங்களுக்குச் சென்ற போதே அங்கு வரவேற்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளது.
பங்குத் தந்தையர்கள்,கிராம மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)



## 23 ஆம் திருவிழா

### சரவணப் பொய்கை மைந்தனுக்கு

சரவணப் பொய்கை மைந்தனுக்கு
சப்பறத் திருவிழா எடுத்தோம்!

சிவ சங்கரன் மகனுக்கு பாதச்
சலங்கைகள் அணிந்தோம்

சலசல வென்றணிந்து வீதியுலாவி
சண்முகனே நீ வர வேண்டும்

சந்தக் கவிகள் நாம் பாட வேண்டும்– பல
சங்கடங்கள் நீ தீர்த்திட வேண்டுமே சரவணனே!
சப்பறம் பார்க்கவே ஓடி வாருங்கள்,
சஞ்சலம் யாவுமே ஓடிப் போகுமே,
எப்பிறப்பிலும் இதைக் காண முடியாது,
எண்ணியவை யாவும் கைகூடுமே

சத்தியம் ஒன்றுதான் சாகித்தியமே அது
சாதனை செய்யப் பலித்திடுமே நிதம்
பக்தியெம் மனதில் ஓங்கிட ஓங்கிடப்
பார்த்துப் பசியாறவே சப்பறம் பார்.

அரியாலையூர்,
மிஷாந்தி செல்வராஜா.

### யாவரும் வாழ நலன் தருவாய்

சப்பறத்தினிலே நீயமர்ந்து
சலனமெல்லாம் தணிப்பாய் – திருத்
தணிகை வாழ் முருகா! –சிவ
சங்கரனின் மகனே– நிதமும்
சங்கமிக்கும் மகனே–நிதமும்
சங்கமிக்கும் உன் வதனம் கண்டு
சந்தோசமாக யாவரும் வாழ நலன் தருவாய்
நல்லை வாழ் நல்லைக் கந்தனே!

### "சப்பைரதமேறும் நல்லூர் முருகா"

நல்லூர் பதிதனில் மேவும் முருகா!
ஐங்கரன் தம்பியே ஆறுமுகா!
நற்றமிழ் போற்றும் வேல் முருகா!
நல்லருள், நல்வாழ்வு தருகின்ற முருகா!
நாற்றிசையும் பத்தர்கள் உன் நாமம் இசைக்க
அடியவர்களுக்கு அருள் மழை பொழிந்திட,
சப்பைரதமேற வருகிறான் நல்லூர் முருகன்

நயினை விசு – இராசநாயகம்.

### செங்கோலின் அரசாட்சி நல்லூரில்

உன் வடிவை விவரிக்க வார்த்தைகள் போதாதையா
என் அழகு என் அழகு மெய் சிலிர்க்கிறது
கடவுளாய் எம் இனத்தின் அடியாயமாய்
சீர்மிகு நிலமதில் அருளாட்சி செய்கின்ற செவ்வேளே
உந்தன் செங்கோலின் பொருள் அரசாட்சி நல்குமையா

சிவஸ்ரீ க.ஜெயராமக் குருக்கள்,
வளலாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருளை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட்டு, வெற்றி காண் பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். உறவினர்கள் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் செயல்பட்டு, நற் பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர்.

**கடகம்:** புதிய வாய்ப்பு மூலம் வளர்ச்சிக்கு வழிகாண் பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை, வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**சிங்கம்:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். இலாபம் சுமாராகலாம். நண்பர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படித்து சிறப்படைவர்.

**கன்னி:** சமூகப் பணி புரிவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனைகளைப் படைப்பீர் கள். இலாபம் கூடும். பெண்கள் மனம்போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** உங்களின் எண்ணத்தில் புதுமை நிறைந்திருக் கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** குடும்ப பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் உண்டாகும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**தனுசு:** உறவினர்களின் ஆதரவைக் கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். விஷப்பிராணிகளிடம் இருந்து விலகியிருப்பது நல்லது. மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.

**மகரம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு உண்டாகும். விருந்து, விழாவில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள்.

**கும்பம்:** உறவினர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

**மீனம்:** கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி விலகி இலாபம் அதிகரிக்கும். மனைவியின் செயற்பாட்டால் பெருமை கொள்வீர்கள். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.



## ஐந்தாவது முறையாக இணைந்த இணை

விக்ரம் பிரபு தமிழ் சினிமாவுக்கு கதாநாயகனாக அறிமுகமான கும்கி படத்திற்கு இசையமைத்தவர் டி.இமான். இந்தப் படத்தில் இவருடைய இசையில் அமைந்த பாடல்கள் அனைத்தும் பெரிய அளவில் வெற்றியடைந்தன.

இதைத் தொடர்ந்து இக்கூட்டணி, சிகரம் தொடு, வெள்ளக்கார துரை ஆகிய படங்களிலும் தொடர்ந்து வெற்றியடைந்தன. இருவரும் இணைந்தாலே அந்தப் படங்களின் பாடல்கள் பெரிய அளவில் வெற்றி பெறும் என்ற கணிப்பிலேயே விக்ரம் பிரபு நடிக்கும் படங் களுக்கெல்லாம் டி.இமான் இசையமைப்பாளராக ஒப்பந்தமாகி வந்தார்.

அந்த வரிசையில் தற்போது விக்ரம் பிரபு ஜி.என். ஆர்.குமாரவேலன் இயக்கத்தில் நடித்து முடித்துள்ள 'வாகா' படத்துக்கும் டி.இமான்தான் இசையமைத் துள்ளார். அடுத்து விக்ரம் பிரபு நடிக்கவிருக்கும் 'வீர சிவாஜி' படத்துக்கும் டி.இமானே இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ளார். 'தகராறு' படத்தை இயக்கிய கணேஷ் விநாயக் இயக்கத்தில் ஷாம்லி ஜோடியாக நடிக்கும் இந்தப்படம் விக்ரம் பிரபுவும் டி.இமானும் இணையும் ஐந்தாவது படமாகும். விக்ரம் பிரபு நடித்துள்ள 7 படங்களில் 5 படங்களுக்கு டி.இமானே இசையமைப்பாளராக பணியாற்றியுள்ளார்.



தவளை போன்று தெரியும் இந்த உருவம் உண்மையான தவளை அல்ல... ஜோனேஸ் ஸ்டோடர் என்னும் கலைஞரால் ஐந்து மனிதர்களைக் கொண்டு அவர்களின் உடலில் வரையப்பட்ட அழகிய ஓவியம்..

## பேஸ் புக்கில் பிடித்தவை...



தைரியம் இருந்தா வெளிய வாங்கடா அயோக்கிய ராஸ்கல்களா !





நடுக்கடலில் பறவைகள் இளைப்பாறுமிடம்! அனைத்துக்கும் முன்னேற்பாட்டுடன்தான் இந்த உலகம் படைக்கப்பட்டுள்ளது!!



கணினியின் மூதாதை... நாங்களும் மோடெர்ன்தான்



வெங்காயம் விக்கிற விலைக்கு இது தேவையா மக்களே..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்செய்கையாளர்கள் பதிவுகளைச் செய்யுமாறு அறிவுறுத்து

மல்லாவி, செப்.10

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறிய, பெரிய நீர்ப்பாசனங்களின் கீழும், மானாவாரியாகவும் 2015/2016ஆம் ஆண்டுக்குரிய காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளை கமக்கார அமைப்புக்களிடம் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு துணுக்காய் கமநல சேவை நிலையத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

2015/2016 காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள துணுக்காய், துணுக்காய் 'டி' வாய்க்கால், மல்லாவி, கல்விளான், உயிலங்குளம், தென்னியன்குளம், கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம், பழையமுறிகண்டிக்குளம், புத்து வெட்டுவான், ஐயன்கன் குளம், தேறாங்கண்டல், ஆலங்குளம், யோகபுரம் மேற்கு, யோகபுரம் மத்தி, யோகபுரம் கிழக்கு, பாரதிநகர், புகழேந்திநகர், அனிஞ் சியன் குளம், திருநகர் ஆகிய கமக்கார அமைப்புக்களின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ள வயற் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் கமக்கார அமைப்புக்களில் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பதாக பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குத்தகைக் காணிகளைப் பெற்று நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதத்துடன் கமக் கார அமைப்புக்களிடமுள்ள குத்தகைச் செய்கையாளர் தொடர்பான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி கமக்கார அமைப்புக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் பதிவுகள் எவையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் பதிவுகள் மேற்கொள்ளாதவர்களுக்கு உரமானியங்கள் வழங்க முடியாத நிலை ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் கால தாமதமின்றி விரைவாகத் தமது பதிவுகளை கமக்கார அமைப்புக்களிடம் மேற்கொள்ளவேண்டும் என்று துணுக்காய் கமநலசேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(ற)


**தேவை**

யாழ். மாநகர எல்லைக்குள் வாகனத் தரிப்பிடம் (கார்) தேவை.

**தொடர்பு: 077 990 6760**

**உதவியாளர் தேவை**

சங்கானைப் பகுதியில் உள்ள 04 உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஓர் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 077 711 2074**

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் பெரிய Hall, ஐந்து அறைகள், சமையல்அறை இணைந்த குளியல் அறை, பிரத்தியேக குளியல் அறை வாகனத் தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 077 900 7481**

**பஸ் விற்பனைக்கு**

BABY ROSA 28 SEATS FULL A/C, P/S MIN RE/CONDITION (ENGINE & BODY) 62- 66xx Medical Campus. Service இற்கு பாவிக்கப்பட்டது.

077 712 6857 ,077 712 6860


# அதிபர் வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, செப்.10

தென்மராட்சி கல்வி வலயத்தில் ... பாடசாலைகளுக்கு தகைமையுள்ள வர்களிடமிருந்து வலயக் கல்வி அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கொடிகாமம் போக்கட்டி அ.த.க. பாடசாலை, சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களுக்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமை பாற்றும் இலங்கை அதிபர் சேவை 11, 111 இலங்கை ஆசிரியர் சேவை 1, 2-1 ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப் பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (ற-9)


**தவறிவிட்டது**

கனகரட்ணம் சிவகுமார் என்பவருடைய தே.அ அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி வரிப்பத்திரம் என்பன சுண்டுக்குளி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்

**தொடர்பு: 077 3200 727**
**077 724 2427**

**காணி விற்பனைக்குண்டு**

மீசாலை மேற்கு, மீசாலை பங்களாறோட்டில் உள்ள 40 தென்னை மரங்களுடன் வருமானம் உள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**காணி,வீடு விற்பனைக்குண்டு**

மீசாலை வடக்கு வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள 4பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. பாவித்த ஓடுகள், மரங்கள் விற்பனைக்குண்டு.

**தொடர்பு:**
**077 917 1362 , 077 597 7210**

**வேலைவாய்ப்பு**

**சமையல் உதவியாளர்**



விண்ணப்பிக்க விரும்புவோர்

**13.09.2015** காலை 9.00 தொடக்கம் 11.00 மணிவரை

ஞாயிற்றுக்கிழமை நேரில் வரவும்.

**Bastian Hotel**

No. 37, 11, Kandy Road, Jaffna. Tel - 021 222 2605


## வேலணை பிரதேச சபை
## முக்கிய அறிவித்தல்
### சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய பெருவிழா - 2015

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய பெருவிழா 10.09.2015 - 19.09.2015 வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இக்காலப்பகுதியில் ஆலயத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்கள் மற்றும் தற்காலிக வியாபாரம் செய்பவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

* துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஏனைய வாகனங்களை வாகனத் தரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தரித்து அவற்றுக்கான பாதுகாப்பு கட்டணங்களைச் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும்.
* தற்காலிக வியாபார நிலையங்கள் எமது சபையால் 15.09.2015 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 02.00 மணிக்கு கேள்வி மூலம் வழங்கப்படும். கேள்வி கோருபவர்கள் கோரப்படும் கேள்வித்தொகை முழுவதையும் சபையின் தலைமை அலுவலகத்தில் உடன் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.
* உணவுப்பண்டங்களை கையாளும் வியாபாரிகள் தங்களது உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்கனவே பெற்ற நிரந்தர வியாபார அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
* சுகாதார வைத்திய அதிகாரியினால் உணவு கையாளுபவர்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொருவரினதும் சான்றிதழ் பிரதி உறுதிப்படுத்தப்பட்டு தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* வியாபார நிலைய உரிமையாளர், ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் தேசிய அடையாள அட்டையின் பிரதி உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* மேலும் உற்சவ காலத்தில் பொது ஒழுங்கு விதிகளையும் சுகாதாரத்தையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மு.இராஜகோபால்
செயலாளர், வேலணை பிரதேச சபை
தலைமை அலுவலகம் வேலணை.

09.09.2015

# Vamadeva Memorial Tennis Court

Was donated to J/ St. Patrick`s College

by

**Mr. V. Thiagendran**

Founder, Thiyahie Charitable Trust

In dedicated memory of his beloved father

**Mr. C. Vamadeva**

And blessed open by

**Rt. Rev. Dr. Thomas Savundaranayagam**

Bishop of Jaffna

On 10th September 2015

**"entrance arcade"** For J/ St. Patrick`s College was built and donated

by

**Mr. V. Thiagendran**

Founder, **Thiyahie Charitable Trust**

On 10th September 2015

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் (TCT) முப்பது இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் (St.Patrick's College,Jaffna) அமைக்கப்பட்ட **வாமதேவா ஞாபகார்த்த டெனிஸ் விளையாட்டரங்கு, நுழைவாயில்** ஆகியன வைபவ ரீதியாக இன்று (10.09.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி **தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை** அவர்களால் திறந்துவைக்கப்பட இருக்கின்றது.

## உதவித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு

நல்லூர், யாழ்ப்பாண பிரதேச செயலகங்களிலுள்ள யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவிலிருந்து மிகவும் வசதிகுறைந்த 50 குடும்பங்களுக்கு மாதாந்தம் இராண்டாயிரம் ரூபா (2000/-) வழங்கும் நிகழ்வு

**எமது நிறுவனத்தில் (TCT)** இன்று (10.09.2015) வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெற இருக்கின்றது.

அத்துடன் மிகவும் வசதி குறைந்த குடும்பங்களை சேர்ந்த 100 பாடசாலை மாணவர்களுக்கும் **மாதாந்தம் 500/-** உதவித்தொகை வழங்கப்பட இருக்கின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**தியாகி அறக்கொடை நிறுவனம் (TCT)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் கொலைச் சம்பவம்: ஒருவர் கைது

திருகோணமலை, செப்.10

மூதூர், ஜின்னா நகர் பகுதியில் சுட்டுக் கொல்லப் பட்ட சுல்தான் முகம்மது இக்ராமின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ஹயாத்து முஹம்மது நாசிக்கீன் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சுட்டுக் கொல்லப்பட்டவரின் மைத்துனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார். குறித்த சந்தேகநபரை பின் தொடர்ந்த பொலிஸார் செவ்வாய்க்கிழமை மாலை ஜனாஸா நல்லடக்கம் இடம்பெற்றதன் பின்பு மையவாடியின் அருகில் வைத்து கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-10)

## திருமுறைக் கச்சேரி

யாழ்ப்பாணம், செப்.10

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் நிகழ்வில் இன்று திருமுறைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

பி.ப 6.45 மணிமுதல் 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் தேவார இசைமணி மதுரை குமாரராமசந்திரன் ஓதுவாரின் திருமுறைக் கச்சேரி நடைபெறவுள்ளது. நிகழ்வில் அணி செய்கலைஞர்களாக வயலினை கே.பத்மநாதனும், மிருதங்கத்தை சி.மகேந்திரனும், தபேலாவை சதாவேல்மாறனும் முகர்சிங்கை எஸ்.விமலசங்கரும் கையாளவுள்ளனர். (ற-10)

## அன்னதானம்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ். மாநகர சபையின் நீர் வேலைப்பகுதியின் கலியுகவரதன் இந்து மன்றம், நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்கவுள்ளது. உற்சவத்தின் தேர், தீர்த்த தினங்களில் குறித்த அன்னதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மங்கயர்க்கரசி பாடசாலையில் நடைபெறும் இந்த அன்னதான நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கலியுகவரதன் இந்து மன்றத் தின் தலைவர் து.இராஜன் கேட்டுள்ளார். (ற-ரி4)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் சேமன் அம்பலவாணர் ஆனந்தராசா (கிளி)



மண்ணில் 31.07.1943

விண்ணில் 12.08.2015

நித்தமும் நினைத்தபடி நீள்துயரில் தவித்தபடி
எத்திசையும் உங்கள் முகம் தெரிந்தபடி
உங்களை நினைத்து ஏங்கி அழுதபடி வாழ்கின்றோம்
எங்குள்ளீர்கள்? எமைவிட்டு ஏன் பிரிந்தீர்கள்?
உங்கள் சிரித்த முகமும் சீர்கொண்ட பார்வையும்
ஆணுக்குரிய அத்தனை அழகும் தந்த ஆண்டவனே
பொறுக்காது அரவணைத்துக்கொண்டானோ உங்கள் காதலினால்
எமைவிட்டுப் பிரிந்த உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம், பத்திரிகை, கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (10.09.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வி லும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி, களபூமி, காரைநகர். (82696) (14.15)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய் மண்ணில் 18.05.1981

தெய்வமாய் விண்ணில் 10.09.2010

அமரர் இராசரத்தினம் செந்தில்பிரகாஸ்

ஆண்டுகள் ஐந்து ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத உன் நினைவுகளும்
என்றும் எம்மை வாட்டுகின்றன
காலன் உன்னை விட்டு வைக்கவில்லை
விதி என்றபெயரில் வீதியில் விளையாடி விட்டான்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர். 077 220 9634

# துயர் பகிர்கின்றோம்

Dr.பூ.உ.ரோமகேஸ்வரன்

(முன்னாள் பணிப்பாளர், சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளராக கடமையாற்றிவரும், சித்த ஆயுள்வேத பரம்பரைக்குரியவருமான அமரர் Dr.பூ.உ.ரோமகேஸ்வரன் அவர்கள் 28.08.2015 அன்று அமரத்துவம் அடைந்ததனை நினைத்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பானது அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்லாது எமது சுதேச மருத்துவத்துறைக்கும் பேரிழப்பாகும். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது திணைக்களத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாகாண ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
சுதேச மருத்துவத் திணைக்களம்,
வடமாகாணம்.

(C18662)(14.15)

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 12 1938

மறைவு 10 09 1990

அமரர் பொன்னு சோமநாதன்

(பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

ஆண்டுகள் இருபத்தைந்து ஆனதப்பா.....!
அகலவில்லை உங்கள் பிரிவின் சோகம்
மறையவில்லை உங்கள் நினைவின் பாசம்
இன்பத்திலும் துன்பத்திலும் எனை வளர்த்தெடுத்து
நல்வழி காட்டி எனை உயர்த்தி வைத்தீர்......!
ஆண்டுகள் பல கடந்தாலும் இறுதிவரை
உங்கள் நினைவுகள் தொடரும் அப்பா.....!

ஆனைக்கோட்டை. ஜேர்மனி.

நீங்காத நினைவுகளுடன்.....
சுரேஸ்(மகன்), மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(82857)(14.15)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



விஜயரட்ணம் சுதாகரன்

பிறப்பு 1978.11.13

இறப்பு 2014.08.23

குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப் பாரினில் எமை பரிதவிக்கவிட்டுச் சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

வடலித்தோட்டம், மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



யாழ் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 45/2 விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் உயர்திரு சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)

வையகத்தில் 12.07.1943

விண்ணகத்தில் 13.09.2012

திதி- ஆவணி திரயோதசி தேய்பிறை(10.09.2015)

மூன்று ஆண்டுகள் என்ன முந்நூறு ஆண்டுகள் ஆனாலும் மறந்திடாது எங்கள் நினைவுகள்......

இல.45/2 "சாத்திரியார் தோட்டம்", விசுவமடு.

பாசமுடன் குடும்பத்தினர்.

(C18659) (14,15)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத்
தோற்றி பெறுபேறுகளுக்காக
காத்திருக்கும்
மாணவர்களும்
விண்ணப்பிக்கலாம்.

UGC APPROVED

# SLIIT

COMPUTING | BUSINESS | ENGINEERING

FACULTY OF ENGINEERING



## BSc Engineering (Hons) Degrees

புதிய
மாணவர்களுக்கான
அனுமதி
2015/ 2016

**Specializing in :**
- Civil Engineering
- Electrical & Electronic Engineering
- Materials Engineering
- Mechanical Engineering
- Mechanical Engineering (Mechatronics)

4 YEAR DEGREE

## SLIIT OPEN DAY
19 September 2015 - 9.00 am Onwards
@ SLIIT Campuses & Centres

### நினைவுபடுத்தும் திகதிகள

| | |
|---|---|
| Open Day | : 2015 செப்ரெம்பர் 19 |
| விண்ணப்ப முடிவுத்திகதி | : 2015 செப்ரெம்பர் 25 |
| நுண்ணறிவு சோதனை | : 2015 அக்டோபர் 11 |
| ஆமைவிடம | : கொழும்பு, மாலபே, கண்டி, குருநாகல், காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் |
| மொழி மூலம் | : ஆங்கிலம், சிங்களம், தமிழ் |

### விஞ்ஞான இளமாணி பொறியியல் (சிறப்பு) பட்டங்களுக்கான நுழைவு தகமைகள்

இலங்கை / இலண்டன் க.பொத.த உயர்தரப் பரீட்சையில் கணிதம் அல்லது பௌதீகவியலில் திறமைச் சித்தி உள்ளடங்கலாக கணிதத்துறையில் 3 சித்திகள் அத்துடன ஒரே தடவையில் இததொநி இனால் நடாத்தப்படும் நுண்ணறிவுப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

### ஏன், SLIIT தேர்வு?

- பாடவிதானங்கள் இலங்கை பொறியியாளர் நிறுவகத்தின் தேவைப்பாடுகளுகிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.
- இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திலுள்ள மேற்படி துறைகளில் வெளிநாட்டு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவு செய்வதற்கான வாய்ப்பினை மாணவர்கள் கொண்டுள்ளார்கள்.
- அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா அல்லது கனடாவிலுள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் பங்காளி பல்கலைக்கழகங்களில் ஒன்றில் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவு செய்வதற்கான வாய்ப்பு.
- கலைக் கூட வசதிகள் ஒரே இடத்தில் கிடைக்கக்கூடியதாக இருத்தல்.
- 25 இற்கு மேற்பட்ட கலாநிதி பட்டங்களைப் பெற்றுள்ள கல்விசார் பதவியினரைக் கொண்டிருக்கும் தகைமை வாய்ந்த கல்வியாளர் குழு.

### விண்ணப்பிப்பது எவ்வாறு

| | | |
|---|---|---|
| Option 1 | Apply online www.sliit.lk/apply | Register Online |
| Option 2 | Download the Application from www.sliit.lk | Send the duly filled Application form to Manager Academic Affairs SLIIT, BoC Merchant Tower, St. Michael's Road, Colombo 03 |
| Option 3 | Obtain the Application from any of our Campuses or Centres | |
| Option 4 | Send the Apllication Request Form | |

THE ASSOCIATION OF COMMONWEALTH UNIVERSITIES
MEMBER
INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES

**HOTLINE:**
**230 1904, 754 4801**

BoC Merchant Tower, # 28, St. Michael's Road, Colombo 03
T: 011 230 1904 / W: www.sliit.lk / E: info@sliit.lk

### APPLICATION REQUEST FORM
(Option 4 Only)

NAME WITH INITIALS :......................................
CONTACT NUMBER :.................... Email:....................
POSTAL ADDRESS :......................................
APTITUDE TEST CENTRE :......................................
APTITUDE TEST MEDIUM :......................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்றத்தின் ஊர்திப் பவனிக்கான போட்டி

## விவரங்கள் பிரதேச செயலகங்களில்

திருமறைக் கலாமன்றத்தின் பொன் விழா நிகழ்வுகள் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. அதை முன்னிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி மாலையில் நடைபவனி ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்தப் பவனியின் முக்கிய விடயமாக தமிழரின் கலை, கலாசார, இலக்கிய, பாரம்பரிய விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் ஊர்திப் பவனியும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஊர்திப்பவனியை சிறப்பிக்கும் வகையில் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் கலை, கலாசார மன்றங்கள், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றன என்றும்– இந்தப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை எனவும் திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது.

போட்டிக்கான விதி முறைகள் உட்பட விதி முறைகள் விவரங்கள் அனைத்தும் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் குறித்த பிரதேச செயலக பிரிவுகளுக்குள் உள்ளடங்கும் – இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அமைப்புக்கள் மேற்படி விவரங்களை பிரதேச செயலகங்களில் பார்வையிட முடியும் எனவும்திருமறைக் கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (ற–10)

## மரண அறிவித்தல்

### வஸ்தியாம்பிள்ளை யோசவ்நாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



பிறப்பு 31.06.1951 இறப்பு 08.09.2015

இளவாலை, கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ் பண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை யோசவ்நாயகம் 08.09.2015 செவ்வாய்க் கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை மற்றும் றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிஸ்ரர் சோபியா, லூர்துநாயகி (பெல்) ஆகியோரின் சகோதரனும் திரேசபெலினின் (பேபி) அன்புக் கணவரும் விவிட் நிரோசனின் பாசமிகு தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
பண்டியன்தாழ்வு.

## மரண அறிவித்தல்

### கந்தவனம் சிவநாயகம் (சுன்னாகம் கிழக்கு)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தவனம் சிவநாயகம் 08.09.2015 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தவனம் -தங்கம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தையா- இலட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் மரு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் பரணீ தரனின் (பொறியியலாளர் UK) அன்புத் தந்தையும் வைதேகி யின் (B.M.S. UK) பர்சமிகு மாமனாரும் அரன், நரேன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சின்னமணி (பபா),சியோமதி(மதி- சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதர னும். தங்கேஸ்வரன் ,தவராஜசிங்கம், காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை, பாலசுப்பிரமணியம்,கனக இரத்தினம் பரமேஸ்வரி, சிவராசா மற்றும் தவேஸ்வரி, சந்திர சேகரம்,குணசேகரம் ஆகி யோரின் அன்பு மைத்துனரும் சதீபன், அஜிந்தன், ஆதித்தன்,சுதர்ஜனா (சுமதி), சுகந்தினி,சுபாஜினி ஆகியோரின்அன்புமாமனரும்மகேஸ்வரன் (மாயா), செல்வரத்தினம், தயாபரன்ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயனத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்
077 374 0034 ,077 4646 817

## தேவண்ணாவுக்கு ஓர் கண்ணீர் அஞ்சலி

### இராமலிங்கம் தேவராஜன்



ஓயாமல் உதவிய வலதுகரத்தை
காணாமல் தவிக்கின்றோம்
கடவுளே இனி என்செய்வோம்
கனிவோடு துணையிருந்த
இதயத்தை
காலம்தான் எடுத்து சென்ற தேனோ
கண்ணீரை பரிசாய் தந்ததேனோ.....

உற்ற நண்பனாய் உறவுக்காரனாய்
சுற்றம் சுகம் சேர்க்கும் அனைத்துமாய்
பற்றுவைத்த பாசத்தின் பங்காளனாய்
இற்றைவரை இருந்தவனை இனி
யென்று காண்போம்

அனுதினம் துணையாகி தொழில்
நிலையத்தில்
இனியதோர் உறவாகி வீட்டில்

மனதினில் என்றும் மாசற்ற அன்பில்
மனிதருள் தனித்துவமானவனை இனியென்று காண்போம்.

இன்பதுன்பங்களில் முன்னேயிருந்து
என்றும்பழகும் பாசஉறவாய்
அன்பும் பண்பும் நிறைந்துதவும்
பென்னம் பெரிய நேச சிறகானவனை இனியென்று காண்போம்

வண்ணம் கலந்த நல்லதோர் ஓவியமாய்
வாழ்ந்திருந்த அன்புறவை இனியென்று காண்போம்.....

ஓயாமல் உதவிய வலதுகரத்தை
காணாமல் தவிக்கின்றோம்
கடவுளே இனி என்செய்வோம்.

பிரிவால் துயருறும்
உரிமையாளர்களும், ஊழியர்களும்

**பவானிஸ்ரோர்ஸ், ஸ்ரீ மகா விஷ்ணு,**
**பொன் செல்வ மகால், கஜமுகா ரேடர்ஸ்.**


## கிருஸ்ணா அடகு சேவை

பதிவு இல. J/DS/BR/472

* மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு (31.08.2014) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி (15.10.2015) முன்பு மீட்கவும்.
* மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10.2015 ஆம் திகதி ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தரு கின்றோம்.
* மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு 31.03.2015 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர்மாதம் 15 ஆம் திகதி 15.10.2015 இற்கு முன்னர் மீட்கவும், மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதிப் பணத்தை கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10.2015 ஆம் திகதி அன்று ஏலத்தில் விற்கப்படும். என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் A.S.Surendran

இல.370, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311

இல. 09 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5046

(கி.7819) (13.15)


## தெய்வீக சுக அனுபவம் IV

### கலை நிகழ்வும் பயிற்சிப்பட்டறையும் - 2015

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், யாழ் இந்திய துணைத்தூதரகமும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்துவரும் தெய்வீக சுக அனுபவம் IV நிகழ்வின் பயிற்சிப் பட்டறை, ஆற்றுகை 2015.09.10, 2015.09.11 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் தென்னிந்திய பிரபல வீணை வாத்தியத்துறையில் தேர்ச்சி பெற்ற ஸ்ரீமதி ரேவதி கிருஷ்ணா அவர்களும் அவருடன் இணைந்த குழுவும் வழங்கும் வீணை இசைக்கச்சேரியும், உரும்பிராய் கலைக்கோயில் நாட்டிய நிறுவனத்தின் ஆடற் கலைஞர்கள் வழங்கும் நாட்டியாஞ்சலி ஆற்றுகையும் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் இசை, நடன ஆர்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பயிற்சிப்பட்டறை, ஆற்றுகையின் விவரம் வருமாறு:**

| திகதி | நிகழ்வு | இடம் | காலம் |
|---|---|---|---|
| 10.09.2015 | கலை நிகழ்வு (வீணை இசைக்கச்சேரி | நெல்லியடி மத்திய கல்லூரி | மாலை 05.00 |
| 11.09.2015 | பயிற்சிப்பட்டறை | யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம் | காலை 09.00 |
| 11.09.2015 | கலை நிகழ்ச்சிகள் (வீணை இசைக்கச்சேரி, நாட்டியாஞ்சலி) | சங்கிலியன் தோப்பு | மாலை 06.00 |

இ.இரவீந்திரன் (செயலாளர்)
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம்.

(கி.18651) (13.15)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி மாணிக்கவாசகர்

(மண்டை தீவு - 8)



மண்டைதீவினைப் பிறப்பிடமாகவும் இலக்கம் - 70, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியினை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி மாணிக்கவாசகர் 09.09.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான காசிநாதர் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காத்திகேசு - நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சத்தியசீலன், சத்தியா, ரூபா (ரூபி), அகிலசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து, லிங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகந்தி, பாலகிருஸ்ணன், கமலநாதன், மதிவதனா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவயோகம், ஞானபூங்கோதை மற்றும் அழகம்மா, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் மேனகன், ததுசன், றொசானா, சயானா, கோகிகன், அசோக்,சங்கீதன், லக்சிகா, சாருகான், அஞ்சனா, நிருசனா, மரிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்துமயானத்துக்கு பிற்பகல் 2.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.70, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

தகவல் :- குடும்பத்தினர்.
077 881 7624

(82908)(14.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசற்.ரி.ஈ அறிமுகம் செய்யும் அகஸன் எலைட் ஸ்மார்ட் கைபேசி



பல்வேறுநிறுவனங்களுக்குபோட்டியாகமொபைல் சாதனங்களை உருவாக்கும் இசற் ரி.ஈ. நிறுவனம் அகஸன் எலைட் எனும் ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. ஒக்டா கோர் குவால்கொம்சினப்ட்ராகன் 810 புரொஸஸரினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கைபேசி 5.5 அங்குல அளவு, 1920 X 1080 பிக்ஸல் ரிஸலூசன் தொடுதிரையைக் கொண்டுள்ளது டன் பிரதான நினைவகமாக 3 ஜி.பி.ரம் மற்றும் 32 ஜி.பி. சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, 3000 மெகா அம்பியர் மின்கலம் என்பவற்றையும்உள்ளடக்கியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கைபேசியின் விலையானது 428 யூரோக்கள் ஆகும்.



# அதிக வினைத்திறன் வாய்ந்த டிஜிட்டல் கமெரா

உள்ளங்கையில் அடங்கக்கூடிய ஸ்மார்ட் கைபேசிகளில் பல்வேறு வினைத்திறன்கள் மற்றும் துல்லியம் வாய்ந்த கமராக்கள் இணைக்கப்படுவது அனைவரும் அறிந்ததே. தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி இவ்வாறிருக்கையில் அமெரிக்காவின் எரிசக்தித் துறை உலகிலேயே அதிக வினைத்திறன் வாய்ந்த டிஜிட்டல் கமராவை உருவாக்கும் பணியில் இறங்கியுள் ளது. 3.2 ஜிகா பிக்சல்களை உடைய இக் கமெரா வடிவமைக்கப்பட்டதன் பின்னர் தற்போது சிலி யிலுள்ள லார்ஜ் சினொப்டிக் சேர்வே டெலிஸ் கோப்(எல்.எஸ். எஸ்.ரி) எனும் தொலைகாட்டிக்கு இணையாக செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 3.2 ஜிகா பிக்சல் என்பது தற்போர்து பாவனையிலுள்ள ஒரு மெகாபிக்சல் கமராவைப் போன்று 3200 மடங்கு அதிக வினைத்திறன் உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை – இந்தக் கமெராவானது 2022 ஆம் ஆண்டில் இருந்து தனது செயற்பாட்டை ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சம்சுங்கின் புதிய அப்பிரிக்கேஷன்

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் ஸ்மார்ட் கைபேசிகளைக் கொண்டே அதிகளவான மனித செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வசதி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதற்காக அன்றாடம் பல்வேறு அப்பிளிக்கேஷன்கள் உருவாக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக சம்சுங் நிறுவனம் சிலீப்சென்ஸ் எனும் புதிய அப்பிளிக்கேஷனை உருவாக்கியுள்ளது. இந்த அப்பிளிக்கேஷன் இரவு நேரங்களில் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கையில் நித்திரைக்குச் செல்லும் நேரங்களை அறிந்து குறித்த நேரத்தில் தொலைக்காட்சிப் பெட்டியை தானாகவே நிறுத்திக்கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது மொத்தமாக நித்திரை செய்யும் நேரம், தூக்கத்தின் திறன், நித்திரை செல்ல எடுக்கும் நேரம், நித்திரையில் இருந்து விழிக்கும் தடவைகள்,



படுக்கையை விட்டு அகலும் தடவைகள், கண்ணின் அசைவுகள் மற்றும் ஆழ்நித்திரையின் சதவீதம் என்ற 7 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டியை நிறுத்துவதற்கான நேரத்தை துல்லியமாகக் கணிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.









யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்றுப் பாடசாலை மாணவர்களால் கலாசார நிகழ்வுகளுடனான நடைபவனி நடத்தப்பட்டது.

பாடசாலை முன்றிலில் இருந்து ஆரம்பமான – கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் மாணவர்களின் கண்கவர் நடைபவனியில் கரகாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், காவடி என்பன இடம்பெற்றிருந்தன.

நடைபவனி தட்டாதெருச் சந்தியூடாக காங்கேசன்துறை வீதியை அடைந்து யாழ். வண்ணார் பண்ணை சிவன் ஆலயச் சந்தியை அடைந்து – கன்னாதிட்டி வீதி வழியாகபிறவுண் வீதியை அடைந்து – பாடசாலையைச் சென்றடைந்தது. (ற–101–7)





## மிளகாய்த் தூள் தூவி சங்கிலி அறுப்பு

வீட்டிலிருந்த பெண்ணொருவரின் முகத்தில் மிளகாய்த்தூளை வீசி அவரது கழுத் தில் இருந்த ஆறரைப் பவுண் சங் கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக் குடி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பெண்ணின் முகத்தில் மிளகாய் தூளைத் தூவிவிட்டுச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் என்று களுவாஞ்சிக்குடிபொலிஸில்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## குப்பைகளை பசளையாக்கும் திட்டம் பசறையில்

பசறை, செப்.10

குப்பைகளைக் கொண்டு பசளை தயாரிக்கும் வேலைத்திட்டம் பசறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பசறை பிரதேச செயலாளர் அஜந்தா தீபிகா தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்துக்கென 6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் குப்பைகளைக் கொண்டு கொம்பஸ்ட் பசளை தயாரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். பசறைப் பகுதியிலிருந்து நாளாந்தம் பெருமளவிலான குப்பைகள் மீதும்பிட்டிய என்ற இடத்துக்கு கொண்டுசெல்லப்படுகின்றன. அதனை, சிறந்த முகாமைத்துவத்தின்கீழ் முன்னிலைப்படுத்தி, பசளை தயாரிக்கும் இந்தத் திட்டம், விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய அகதிகளுக்கு உதவாத வளைகுடா



டமாஸ்கஸ்,செப். 10
சிரிய அகதிகளுக்கு மேலும் உதவுவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆராய்ந்து வருகின்றன. ஐரோப்பிய மக்களிடமும் அதற்கான நாட்டம் அதிகளவில் காணப்படுகின்றது. ஆனால், பல வருடங்களாக போர் உக்கிரமாக நடந்துவரும் சிரியாவின் அண்டையிலுள்ள வளைகுடா நாடுகள் ஆறும், தம்மிடம் மிகுந்த செல்வம் இருந்தும், வெள்ளமென வரும் அகதிகளை ஏற்க மறுத்து வருகின்றன. வளைகுடா நாடுகள் சிரிய நாட்டவர்களைத் தமது நாடுகளுக்குள் அனுமதித்திருந்தாலும் அவர்களைக் குடியேற்றப் பணியாளர்களாக மட்டுமே உள்வாங்கியுள்ளன.

பெருமளவிலான அகதிகள் ஒரே நேரத்தில் செல்லும் போது, அவர்களுக்கு வேலை கொடுக்க நிறுவனங்களோ, அவர்களை ஆதரிக்கும் தனி நபர்களோ இல்லாத சூழலில் அப்படிப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களை எப்படித் தமது நாட்டுக்குள் உள்வாங்குவது என்பது குறித்து இந்த வளைகுடா நாடுகளிடம் தெளிவான, வரையறுக்கப்பட்ட கொள்கைகள் எவையும் இல்லை.

தத்தமது எல்லைகளுக்குள் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மை குறித்து வளைகுடா நாடுகளுக்கு இருக்கும் கவலைகளும் இதற்கு ஒரு காரணம். அது மட்டுமல்லாமல், இந்த நாடுகளின் சமூக அடையாளம் மற்றும் வளை குடா நாடுகளின் குடிமகன் என்பதை அந்த நாடுகள் எப்படி பார்க்கின்றன என்பனவும் ஒரு காரணம் ஆகும். அத்துடன், ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான சிரியர்கள் வருவது வளைகுடா நாடுகள் இயங்குவதற்கு அவசியமானதாகக் கருதப்படும் சிக்கலான குடிமக்கள் சமநிலையைப் புரட்டிப்போட்டு விடுமோ எனும் அச்சமும் காணப்படுகிறது. வளைகுடா நாடுகளுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு முழுநேர வேலை இருந்தால் மட்டுமே அங்கே தங்க அனுமதிக்கப்படுவார்கள். அந்த வேலைக்கான பணி நியமனக் காலம் முடிந்ததும், அந்த வெளிநாட்டுப் பணியாளர்கள் தங்களின் சொந்த நாடுகளுக்குத் திரும்பவேண்டும். எனவே வெளிநாட்டவர் வேலையில்லாமல் வளைகுடா நாடுகளில் தங்கியிருக்க முடியாது. இந்த அணுகுமுறையில் தான் வளைகுடா நாடுகள் செயற்படுகின்றன. அதாவது பெருமளவிலான உடல் உழைப்புத் தொழிலாளிகள் மற்றும் பல்வேறு துறைசார் நிபுணர்களைத் தொடர்ந்து தற்காலிகமாக வேலைக்கு அமர்த்திக் கொள்வதன் மூலம், வளைகுடா நாட்டின் அரபிக் குடிமக்கள் தத்தமது நாடுகளில் தமது மேலாதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள். எனவே, இந்த அகதிகள் பிரச்சினை தொடர்பாக மேற்குலக நாட்டு ராஜதந்திரிகளின் கோரிக்கைகள் அனைத்துமே கேளாக்காதுகளை நோக்கிய கோரிக்கைகளாக மட்டுமே முடியக் கூடும். (ஐ–ரி4)

# இந்தியா - பாக். எல்லைப் பிரச்சினை பாதுகாப்பு அதிகாரிகள் இன்று சந்திப்பு



புதுடில்லி,செப்.10
இந்தியா மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு இன்று நடைபெறவுள்ளது. இந்தச் சூழலில் நேற்றும் எல்லையில் பாகிஸ்தான் அடாவடியாக தாக்குதல் நடத்தியது. காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் போர் நிறுத்த ஒப்பந்தங்களைக் காற்றில் விட்டு விட்டு தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்திய இராணுவ நிலைகள் மீதும், எல்லையோரக் கிராமங்களைக் குறிவைத்தும் பாகிஸ்தான் அட்டூழியமாகத் தாக்கி வருகிறது. இதனால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் வருகின்றனர். இந்தச் சூழலில் இந்தியா பாகிஸ்தான் இடையிலான இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு இன்று நடைபெறவுள்ளது. கடந்த மாதம் இரு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பேச்சு நடத்தத் திட்டமிட்டனர். காஷ்மீர் பிரிவினைவாதிகளுடன் பாகிஸ்தான் பேச முயன்றதை இந்தியா கண்டித்தது. இதையடுத்து பாகிஸ்தான் பேச்சை நிறுத்தியது. இந்த நிலையில் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் இன்று பேச்சு நடக்கவுள்ளது. இந்தப் பேச்சில் பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரி உமர் பரூக் புர்கி தலைமையில் 16 பேர் கொண்ட குழுவும், இந்தியத் தரப்பில் எல்லைப் பாதுகாப்பு படைத் தலைவர் தேவேந்திரகுமார் தலைமையில் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.


போர் நிறுத்த ஒப்பந்தம், எல்லையில் அத்துமீறல், குஜராத்தில் உள்ள கட்ச் வளைகுடா பகுதியில் கடத்தல், ஊடுருவல் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து அதில் விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



பிரிட்டனில் 54 சிறிய சுழல் மின்விசிறிகளைப்பயன்படுத்தி, தனக்கான சிறிய ட்ரோன் விமானத்தை ஓர் இளைஞர் உருவாக்கி அசத்தியுள்ளார். சிறிய விமானத்தில் அந்த இளைஞர் பறக்கும் வீடியோ இணையத் தளத்தில் வெளியாகி, அனைத்து இளைஞர்களிடமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# உலகின் மிகப்பெரிய மயான பூமி

## 60 லட்சம் மனிதர்களின் எலும்பு, மண்டை ஓடுகள் அடுக்கிவைப்பு



பாரிஸ்,செப்.10
பிரான்ஸில் மனித எலும்பு, மண்டை ஓடுகளால் சுவர் போல் அடுக்கப்பட்ட கல்லறை தான் உலகின் மிகப் பெரிய மயான பூமியாக விளங்குகிறது. பிரான்ஸின் தலைநகரான பரீஸில், டென்பெர்ட் றொச்செரியோ என்ற இடத்திலேயே இந்தக் கல்லறை அமைந்துள்ளது, அங்கு ஏறத்தாழ 60 லட்சம் மனித சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன. தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புகளும் மண்டை ஓடுகளும் இதுபோல சீராக நெருங்கஅடுக்கி, சுவர் போல அமைக்கப்பட்டுள்ளது. அந்த அடுக்குகளுக்கு ஊடாகச் சென்று, பார்வையிட வசதியாக குறுகலான பாதையும் இந்த கல்லறைக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மனிதன் தனக்குள் இருக்கும் எலும்புக் கூட்டை வெளியில் பார்க்கும்போது வினோதமாகவே உணர்வான். அதிலும், லட்சக்கணக்கான மனிதர்களின் எலும்புகளை ஒரே இடத்தில் பார்க்க நேர்ந்தால், அவன் மனநிலை எப்படி இருக்கும். அதை ஒருமுறை இங்கு சென்று வந்தால் மட்டு[illegible] முடியும். உலகின் பயங்[illegible] இடங்களில் 13 ஆவது இடத்தில் இந்தப் பரீஸ் கல்லறை உள்ளது. இது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மயானத்தில் இருந்த கல்வெட்டுகளை அகற்றி, அவற்றுக்கு கீழிருந்த எலும்புக்கூடுகளையும் மண்டைஓடுகளையும் தோண்டி எடுத்து, அடுக்கி சீர்படுத்தி பூமிக்கடியில் கல்லறையாக மாற்றியுள்ளனர். இங்கு உள்ள எலும்புகளுக்கு உரிய மனிதர்கள் ஒரே காலகட்டத்தில் இறந்தவர்கள் அல்ல. பல்வேறு காலங்களில், போர்களிலும், இயற்கைச் [illegible] இறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாம்புக்கடிக்கு மருந்துத் தட்டுப்பாடு



லண்டன்,செப்.10
பாம்புக்கடி விஷத்தை முறிக்கும் மருந்துகளின் கையிருப்பு வேகமாகக் குறைந்து வருவதைத் தொடர்ந்து பாம்புக் கடியால் ஏற்படும் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று மெடிசன் சான்ஸ் பிராண்டியர்ஸ் எனும் சர்வதேச மருத்துவத் தொண்டு அமைப்பு எச்சரித் துள்ளது. வருடத்துக்கு ஒரு லட்சம் பேர் பாம்புக்கடியால் உலக அளவில் உயிரிழப்பதாகவும், ஐந்து லட்சம் பேர் தமது அவயவங்களை இழப்பதாக வும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதில் மூன்றில் ஒரு பங்கு இறப்புகள் சஹாரா பாலைவனத்துக்குத் தெற்கே இருக்கும் நாடுகளில் ஏற்படுகின்றன. சஹாராவுக்குத் தெற்கிலுள்ள நாடுகளில் காணப்படும் பாம்புக் கடிக்கு எதிரான வீரியமுள்ள ஒரே விஷமுறிவு மருந்தான வேவ் அப்ரிகியுவின் கையிருப்பு அடுத்த வருடம் ஜுன் மாதத்தில் தீர்ந்துவிடும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தக் குறிப்பிட்ட பாம்பு விஷ முறிவு மருந்தைத் தயாரிக்கும் பிரெஞ்ச் நிறுவனம் இந்த மருந்துத் தயாரிப்பை கடந்த வருடம் நிறுத்திவிட்டது. இந்த மருந்துத் தயாரிப்பு வர்த்தக ரீதியில் தங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதால் இதன் தயாரிப்பை நிறுத்துவதாக அப்போது அந்த நிறுவனம் காரணம் கூறியிருந்தது. அதேசமயம், இந்தக் குறிப்பிட்ட பாம்புக் கடிக்கு வேறு விதமான மருந்துகளும் கிடைக் கின்றன. ஆனால் அவற்றின் தரம் மோசமாக உள்ளதாகவும் குறிப்பிட்ட இந்த பாம்பு விஷத்துக்கு அவை நல்ல பயன் தருவதில்லை என்றும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எனவே குறிப்பிட்ட மருந்தின் தட்டுப்பாட்டைப் போக்குவது எப்படி என்பது தொடர்பில் பிரிட்டனின் லிவர்பூல் வெப்பமண்டல மருத்துவப் பாடசாலையில் தற்போது ஆய்வுகள் நடந்து வருகின்றன. (ஐ–ரி4)

# புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

தென் அமெரிக்காவில் இருக்கும் பிரேசில் நாட்டுக் காடுகளில் உள்ள ஒரு வகை மஞ்சள்நிற விஷக்குளவியின் விஷத்தைக் கொண்டு புற்றுநோயைக் குணப்படுத்தலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த விஷத்தில் இருந்து எடுக்கப்பட்ட புற்றுநோய் தடுப்பு மருந்துகளை அண்மையில் புற்றுநோயாளிகளுக்குக் கொடுத்து மருத்துவர்கள் பரிசோதித்தனர். அந்த மருந்துகள், நோயாளியின் புற்றுநோயால் பாதித்த செல்களை மட்டுமே அழித்தது. ஏனைய செல்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே, இந்த விஷக்குளவியின் விஷத்தை மருந்தாகப் பயன்படுத்தி புற்றுநோயைக் குணமாக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் பிரிந்த உறவுகள் சந்திப்பு



சியோல்,செப்.10
வடகொரியா – தென்கொரியாவுக்கு இடையே நடைபெற்று வரும் போரினால் பிரிந்து வாழும் இரு நாடுகளின் உறவினர்களும் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கப் பெற்றுள்ளது.
தென்கொரியாவில் இருந்து வடகொரியா 1948 ஆம் ஆண்டு பிரிந்தது. 1950 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டுவரை இவ்விரு நாடுகள் இடையே சண்டை நடைபெற்றது. அந்தச் சண்டையைத் தொடர்ந்து இப்போதுவரை அந்த நாடுகள் இடையே எல்லைப் பிரச்சினை தொடர்ந்து வருகிறது. இதனால் இரு நாடுகளில் உள்ள உறவினர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க, தொடர்பு கொண்டு பேசச் தடை விதிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகள் இடையே எப்போதெல்லாம் சற்று இணக்கமான சூழல் நிலவுகிறதோ அப்போது மட்டும் இரு நாடுகளில் உள்ள குடும்பங் கள் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்யப்படுவது வழக்கம்.
அண்மையில் அவ்விரு நாடுகள் இடையே போர்ப்பதற்றம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து நடந்த பேச்சின் போது சமரச உடன்பாடு ஏற்பட்டது. அப்போது போரினால் பிரிந்த குடும்பங்கள் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்வது என்று முடிவானது. அதன்படி, அடுத்த மாதம் போரினால் பிரிந்து, இரு நாடுகளிலும் வாழ்கின்ற குடும்பங்கள் சந்தித்துப் பேசவுள்ளன. இந்தச் சந்திப்பு உணர்வுமயமான ஒன்றாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொடர்ந்து வீடியோ கேம் விளையாடிய சிறுவன் சாவு



மாஸ்கோ,செப்.10
கணினியில் தொடர்ந்து 22 நாள்களாக வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் திடீரென உயிரிழந்துள்ளான்.
ரஷ்யாவின் உச்சாலி நகரைச் சேர்ந்த 17 வயதுடைய ருஸ்டம் என்ற சிறுவன் கணினியில் கேம் விளையாடுவதில் அதிக ஆர்வம் கொண்டவன். தனிமையில் இருக்கும்போதெல்லாம் மணிக்கணக்கில் விளையாடி பொழுதைக் கழிப்பான்.
இந்த நிலையில், கடந்த மாதம் விபத்தில் அவனது கால் முறிந்தது. குணமடையும் வரை வீட்டில் ஓய்வு எடுக்கும்படி மருத்துவர்கள் பரிந்துரைத்ததால் அவன் படுக்கையை விட்டு நகரவில்லை. வீட்டில் தனது விருப்பமான டிபென்ஸ் ஓப் ஏன்ஷியன்ட்ஸ் வீடியோ கேமை கணினியில் விளையாடத் தொடங்கிய ருஸ்டம், பின்னர் பொழுதுபோகாததால் அந்த விளையாட்டே கதி என இருந்துள்ளான். சாப்பிடும் நேரம் மற்றும் தூங்கும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்க்ளில் வீடியோ கேம் தான். இவ்வாறு தொடர்ந்து 22 நாள்கள் கடந்த நிலையில், அறையில் வீடியோ கேம் விளையாடும் சத்தம் வராமல் இருந்ததால், சந்தேகமடைந்த பெற்றோர் அறைக்குள் சென்று பார்த்தனர். அப்போது, சிறுவன் ருஸ்டம் மயங்கிய நிலையில் படுக்கையில் கிடந்துள்ளான். பெற்றோர் உடனடியாக அவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே அவன் இறந்துவிட்டான். ஒரே இடத்தில் பல நாள்களாக அமர்ந்திருந்ததால் குருதி உறைவு ஏற்பட்டு அவன் உயிரிழந்திருக்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீது கவனமாக இருக்க வேண்டும் என்றும், கணினி முன்பு தனிமையில் அதிக நேரம் இருக்க விடவேண்டாம் எனவும் குழந்தைகள் உரிமை ஆர்வலர்கள் எச்சரித்துள்ளனர். (ஐ)



லண்டனில் உள்ள புகழ்பெற்ற மேடம் துஸ்ஸாட் அருங்காட்சியகத்தில் உள்ள பிரிட்டன் அரசி எலிசபெத் தின் மெழுகுச் சிலைக்கு மெருகேற்றி அலங்கரிக்கும் ஊழியர். (ஐ)

## மத்திய கிழக்கில் புழுதிப் புயல்

லெபனான், சிரியா ஆகிய இரு நாடுகளிலும் பெரும் புழுதிப்புயல் சூழ்ந்துள்ளது. இரு நாடுகளின் தலை நகரங்களான, பெய்ரூட் மற்றும் டமாஸ்கஸ் ஆகிய நகரங்களை ஒரு மஞ்சள் நிற மாசு மண்டலம் சூழ்ந்துள்ளது. அங்குள்ள மக்கள் வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அல்லது வெளியே வர வேண்டிய தேவை நேரிட்டால், அறுவைச் சிகிச்சையின்போது மருத்துவப் பணியாளர்கள் அணியும் முகமூடிகளை அணிந்து செல்லுமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். புழுதிப் புயலில் சிக்கிச் சுமார் 80 பேர் சுவாசப் பிரச்சினை காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிரியாவில் கிளர்ச்சிக் குழுக்களுக்கு எதிராக சிரிய அரசு நடத்தி வந்த வான் தாக்குதல்களும் இந்தப் புழுதிப் புயல் பிரச்சினையால் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இங்கிலாந்து அரச குடும்பத்தை குறிவைத்துள்ள ஐ.எஸ். அமைப்பு

லண்டன், செப்.10
ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்து செயற்பட்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரியாத் கான் மற்றும் ருகுல் ஆமின் ஆகிய இருவரும் அண்மையில் கொலை செய்யப்பட்டனர். இந்த நிலையில், கொலை செய்யப்பட்ட தீவிரவாதிகள் இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தையும், இளவரசர் சார்ள்சையும் கொலை செய்யச் சதித்தீட்டம் தீட்டியிருந்தமை அம்பலமாகியுள்ளது. எதிர்வரும் வரும் 15 ஆம் திகதி ஜப்பானுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றதன் 70 ஆண்டு நினைவு தின விழா அந்த நாட்டில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் இளவரசர் சார்ள்ஸ் உட்பட 100 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர். இந்த விழாவை வெடிகுண்டு வைத்துச் சீர் குலைக்க கொலைச்செய்யப்பட்ட தீவிர வாதிகள் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது.



சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள், உலக அமை திக்கு பெரும் சவாலாக விளங்கி வருகின்றனர். ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 20 ஆயிரம் அகதிகளுக்கு அடைக்கலம் பிரிட்டன் பிரதமர் கமரூன் அறிவிப்பு



லண்டன்,செப்.10
புகழிடம் தேடி வரும் சிரிய நாட்டு அகதிகளை ஏற்றுக் கொள்வதாகப் பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது. சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் நடைபெறும் உள்நாட்டு போர் காரணமாக அந்த நாடுகளில் இருந்து வெளியேறும் மக்கள் ஐரோப்பிய நாடுகளில் குடியேற சட்டத்துக்குப் புறம்பாக கடல் வழிப் பயணம் மேற்கொள்கின்றனர்.
தங்க இடமில்லாமல் தவிக்கும் அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்க ஆஸ்திரியா, ஜேர்மனி, பின்லாந்து போன்ற நாடுகள் முன்வந்துள்ளன. இந்த வரிசையில் பிரிட்டனும் சிரியா அகதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதாக அறிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் அகதிகளுக்கு அடைக்கலம் தருவதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார். அகதிகளில் காயம் அடைந்தவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பான விரிவான த[illegible]ல்கள் அனைவரிடமும் ஆலோசனை நடத்திய பி[illegible]ர் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் எனத் தெரிவி[illegible]ப்பட்டுள்ளது. (ஐ)

# அகதிகளைப் பகிரும் விவகாரம்; ஐரோப்பிய ஆணையம் சந்திப்பு


பெர்லின்,செப்.10
ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் நுழைந்துள்ள ஒரு லட்சத்து 60 ஆயிரம் அகதிகளை பல்வேறு நாடுகளும் ஏற்பதற்கான சர்ச்சைக்குரிய பிரேரணைகளை முடிவு செய்வதற்காக ஐரோப்பிய ஆணையம் நேற்று ஒன்று கூடியுள்ளது.



அண்மையில் இத்தாலி, கிரேக்கம், ஹங்கேரி போன்ற நாடுகளுக்கு வந்துள்ள அகதிகளை ஏற்க மறுக்கும் ஐரோப்பிய நாடுகள் மீது அபராதம் விதிப்பதற்கு ஆணையம் திட்டமிட்டது.
கிரேக்கத் தீவான லெஸ்போஸில் குவிந்த மேலும் 25 ஆயிரம் அகதிகளைச் சமாளிக்க கூடுதல் பணியாளர்கள் மற்றும் கப்பல்களை கிரேக்க அரசும் ஐ.நா. அகதிகள் உதவி அமைப்பும் அப்பகுதிக்கு அனுப்பின. இதனிடையே செர்பியாவுடனான ஹங்கேரி எல்லையில் வசதிகளற்ற [illegible] முகாம் ஒன்றில் நூற்றுக்[illegible]கான குடியேறிகள் இரவைக்[illegible]துள்ளனர். இதேவேளை, வ[illegible]துக்கு ஐந்து லட்சம் அ[illegible] வரையிலானவர்களுக்கு ஜே[illegible]யால் அடைக்கலம் தர முடியு[illegible] ஜேர்மனியின் துணை அ[illegible] தலைவர் சிக்மார் கேப்ரியல் [illegible]வித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலையை தற்கொலை செய்திட அனைவரும் உழைத்திடுவோம்




மருத்துவர் சி.யமுனாநந்தா

தற்கொலை புரிதல் ஒரு சமூக உளப்பிரச்சினையாக உலகெங்கும் உள்ளது. இது உலகில் இனம், மதம், கலாசாரம், பொருளாதாரம் என்ற வேறுபாடுகளுக்கு ஊடாக, நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 3,200 பேர் தற்கொலை புரிகின்றனர். இதில் சுமார் 2,500 பேர் அளவில் ஆண்கள். அதாவது, தற்கொலை செய்து கொள்வதில் 80 வீதமானோர் ஆண்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் தற்கொலை முயற்சியில் அதிக அளவில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு இறந்தவர்களில் 50 வீதமானோர் தற்கொலைக்காக பீடை, களைநாசினிகளை உபயோகித்து உள் ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்கொலை புரிவோரின் விவரங்கள் அன்றாடம் பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவருகின்றன. யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் ஆண்டுதோறும் சுமார் 1000 பேர் தற்கொலை முயற்சிகளால் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இதில் 90 வீதமானவை பீடைநாசினி, களை நாசினி மற்றும் மருந்துகள் உட்கொள்ளல் என்பன காரணமாக ஏற்படுகின்றன. 5 வீதமான அளவில் தூக்கில் தொங்கல் செயன்முறை காணப்படுகின்றது.

தற்கொலை முயற்சிக்கான காரணங்களை பின்வரும் மாதிரி உரு மூலம் விளக்கலாம்.

தற்கொலைக்கான காரணங்களை 3 தடங்களில் ஆராயலாம்.

தடம் i – உளநோய்களும் பாதகமான சூழலும்

தடம் ii – மது, போதைப்பொருள் பாவனை

தடம் iii – கண உந்தல்கள்

**i உளநோய்களும்,பாதகமான சூழலும்**

நம்பிக்கையீனம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணக்கரு

**ii மதுபாவனை, போதைப்பொருள் பாவனை**

மூளையில் 5 HT நரம்புக்கல இணைப்பு பதார்த்தம் குறைதல்

iii கண உந்தல்கள்

மூன்று தடங்களின் பேறாகத் தற்கொலைக்குத் திட்டமிடல்.

எனவே தற்கொலைக்கான மூன்று தடங்களையும் கட்டுப்படுத்துவதால் தற்கொலை புரிதலை சமூகத்தில் இருந்து அகற்றலாம்.

தடம் i இல் உளநோய்களுக்கான சிகிச்சை, பாதகமான சூழலை, சாதகமான சூழலாக மாற்றல், உளவளத்துணை, ஆற்றுப்படுத்தல் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

தடம் ii இல் சமூக விழிப்பு போதைக்கு எதிரான குறிப்பாக மதுபான துர்பாவனையை கட்டுப்படுத்தல் அடுத்து மருத்துவ சிகிச்சை அவசியம்.

தடம் iii இல் கண உந்துதலால் தற் கொலை புரிதலை தவிர்க்க, நடத்தைச் சிகிச்சை, அபாயகரமான பொருள் களை அருகில் வைத்திருக்காமை போன்ற முறைகளைக் கையாளலாம்.

சமூகவியல் ரீதியில் தற்கொலைகளை அணுகும்போது பொதுவாக இள வயதினர் அதிக அளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். போர், கடல்கோள் என்பன எமது சமூகத்துக்கு நிரந்தர உள ஊனத்தைக் கொடுத்துள்ளபோதும், மக்கள் விறைத்த மண்டையர்களாக வாழக்கற்றுக் கொண்டு விட்டனர். ஆனால் பொருளாதாரச் சுமை, குறிப்பாக கடனாளியாதல், வாழ்வில் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைமைக்கு ஒரு காரணமாக சுமார் 25 – 45வயது வரையான தற்கொலையாளர்களில் காணப்படுகின்றது. ஏன் இந்த வாழ்க்கை, செத்திடலாம் போலிருக்கு என வாழ்பவர்கள் சில வேளைகளில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களாக அமைகின்றனர்.

பதின்ம வயதினரின் தற்கொலை முயற்சிகளுக்கு காதல் உறவுகள், பரீட்சை நெருக்கீடுகள் காரணமாக அமைகின்றன.

சமூகக்கட்டமைப்புகள் சிறப்பாக அமைந்தால் தற்கொலைகளைத் தவிர்க்கலாம். குடும்ப உறவு, பொதுநல உறவுகள் சிறப்பாக அமைதல் வேண்டும். ஆலய விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன உளநெருக்கீடுகளைக் குறைத்து தற்கொலைத் தூண்டலை தவிர்க்கும்.

தனிமையில் வாழ்பவர்கள், கைவிடப்பட்டவர்கள், நாய், பூனை என்பனவற்றை வளர்ப்பதால் அவர்களை தனிமை வாட்டாது. அதேபோல் உறவுகளை இழந்தவர்கள் மரங்களை நட்டு அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றுவதால் அவர்களது கவலைகளை மறக்கலாம். அத்தோடு உடல் இயங்கி வேலை செய்யும்போது மனச்சோர்வு ஏற்படாது. வாழ்வுக்கு அர்த்தம் ஏற்படும். இதனால் தற்கொலைகளைத் தவிர்க்கலாம்.

துக்கத்துக்கான காரணம் ஆசையே. ஆசை என்பது வாழ்வில் முன்னேற அவசியமானது. ஆனால் நிறைவேறாத ஆசைகள் எம்மை விரக்தி நிலைக்கு இட்டுச் செல்லும். ஆனால் எமது விருப்பங்கள் கிடைக்கவில்லையாயின் எல்லாம் இறைவன் சித்தம் என நினைத்து அவ்வாசையைத் துறத்தலே சிறந்தவழி. இதற்கு ஆத்மா பக்குவப்பட்டதாக அமைய வேண்டும். இறைவழிபாடுகள் எம்மை தீயவழியில் செல்லவிடாது, ஓர் உயிரை அழிக்க விடாது. எனவே ஒவ்வொருவரும் தத்தம் சமய கலாசார வழிகளை முறையாகப் பின்பற்றுவதனாலும் தற்கொலைகளைக் குறைக்கலாம்.

தற்கொலைகளைத் தவிர்ப்பதற்கான முதன் நிலை பாதுகாப்பு, சமூக மட்டத்தில் ஏற்படுத்தும் விழிப்புகளாகும். இரண்டாம் நிலை பாதுகாப்பு, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டோருக்கு வைத்தியசாலையில் அளிக்கப்படும் அவசர சிகிச்சைகளாகும். மூன்றாம் நிலைப் பாதுகாப்பு, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டோருக்கான ஆற்றுப்படுத்தலும் சமூக ஆதரவு வழங்கலுமாகும்.

உலக தற்கொலைக்கு எதிரான விழிப்பு நாளான இன்று, எமது சமூகத்தில் தற்கொலை நிகழ்வதை தடுப்பதற்கான சிந்தனையை நாம் ஏற்படுத்தல் வேண்டும். இதனால் பல உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடிவதோடு, அநாவசியமான பொருளாதார இழப்புக் களையும் தவிர்க்கமுடியும்.

தற்கொலையை தற்கொலை செய்திட உழைத்திடுவோம்!

# யாழில் சம்பத் கார்ட்ஸ் முன்னெடுக்கும் 'ரவுண் ஒன் சேல்' ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணத்தில் சம்பத் கார்ட்ஸ் ரவுண் ஒன் சேல் ஊக்குவிப்புத் திட்டத்தை எதிர்வரும் 12 மற்றும் 13 திகதிகளில் முன் னெடுக்கவுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தை ஷொப்பிங் செய்வோரின் சுவர்க்க புரியாகத் திகழச்செய்ய சம்பத் கார்ட்ஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தொடர்ச்சியான ஐந்தாவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரவுண் ஒன் சேல் செயற்திட்டத்தின் மூலமாக,சம்பத் கிரெடிட்கார்ட் வாடிக்கையாளர்களுக்கு,சம்பத் கார்ட்ஸ் கைகோர்த்துள்ள விற்பனை நிலையங்களில் விசேட தள்ளுபடிகளையும்,விலைக் கழிவுகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். இலங்கையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த கிரெடிட் கார்ட் வகையாகத் திகழும் சம்பத் கார்ட்ஸ் முன்னெடுக்கும் இந்தத் திட்டத்தினூடாக,நாடு முழுவதையும் சேர்ந்த கடனட்டைகளை வைத்திருப்போருக்கு சிறந்த பெறுமதி வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

சம்பத்கார்ட்ஸ் ரவுண் ஒன் சேல் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக கார்ட் உரிமையாளர்களுக்கு பிரத்தியேகமான ஷொப்பிங், சேமிப்பு மற்றும் களிப்பூட்டும் அம்சங்கள் நிறைந்த வார இறுதி நாள்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. குறித்த ஊக்குவிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும் நகருக்கு பயணம் செய்யும் வாடிக்கையாளர் களுக்கு சம்பத் கார்ட்ஸ் உடன் கைகோர்த்துள்ள விற்பனை நிலையங் களில் 25 சதவீதகழிவைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பிரத்தியேக சலுகை வழங்கும் பங்காளர் நிறுவனங்கள் ஹோட்டல் மற்றும் உணவகங்கள், பயண ஒழுங்குகள், ஆடைகள், இலத்திரனியல் பொருள்கள் மற்றும் பல துறைகளில் உள்ளடங்கியுள்ளன. இந்தப் பங்காண்மைகள் மூலமாக சம்பத்கார்ட்ஸ் பிரத்தியேகமான ஷொப்பிங் அனுபவத்தை வழங்க இணைந்துள்ளன. கார்ட் உரிமையாளர்களுக்கு இவற்றின் மூலமாக மறக்கமுடியாத அனுபவத் தைப் பெற்றுக் கொடுக்க சம் பத்கார்ட்ஸ் நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டின் சம்பத்கார்ட்ஸ் ரவுண் ஒன் சேல் திட்டத்தில் 26 பங்காளர்களுடன் சம்பத்கார்ட்ஸ் கைகோர்த்துள்ளது. இதில் காகில்ஸ் புட் சிட்டி, சிங்கர் பிளஸ், சிசில் வேல்ட், கே. எவ்.சி, மஜெஸ்ரிக் சினிபிளக்ஸ்– யாழ்ப்பாணம், சொப்ற்லொஜிக், சொப்ற்லொஜிக் மக்ஸ், தம்ரோ, டி.எஸ்.ஐ., விசன் கெயார், சிக்னேச்சர், ரெண்டி, யட்னா ரெக்ஸ், கொழும்பு பசன், அபி பசன் வேல்ட், வேணுகா ரெக்ஸ், லக்ஸ் பிரான்சிஸ்கோ வரனோ, மங்கோஸ், பிற்ஸ் மார் கோசா, லிங்கன் கிறீம் கவுஸ், ரில்கோ ஹோட்டல், ஹோட்டல் லக்ஸ் எற்ரோய்ல், சுபாஸ் ஹோட்டல் போன்றவை உள்ளடங்கியுள்ளன.

இந்த ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பில் சம்பத் வங்கியின் சந்தைப் படுத்தல் மற்றும் வணிக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான பதில் பொது முகாமையாளர் தாரக ரன்வல கருத் துத் தெரிவிக்கையில், எமது கிரெடிட் கார்ட் வாடிக்கையாளர் களுக் குச் சிறந்த அனுகூலங்களை வசதி யுடன் பெற்றுக் கொடுப்பதற்கு முக் கியத்துவத்தை வழங்குகி றோம். எமது வாடிக்கையாளர்கள் [illegible] கவலைப்படாமல் வருடம் முழுவதும் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகிறோம். மேலும்,பெருமளவு அர்ப்பணிப்பு,பெறுமதி சேர்ப்புகள் மற்றும் வசதி ஆகியவற்றுடன் முழுத் தேசத்தையும் சென்றடைவதற்குச் சம்பத்கார்ட்ஸ் திட்டமிட்டுள்ளது. எனவே,எமது ரவுண் ஒன் சேல் ஊக்குவிப்புத் திட்டத்தை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்க முடிந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலம் யாழ்ப்பாணப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு மறக்கமுடியாத அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

2010 இல் ரவுண் ஒன் சேல் முதன் முதலில் ராஜகிரியவில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, 2012 இல் நீர் கொழும்பிலும், 2013 இல் கண்டி யிலும் இடம் பெற்றிருந்தன. இதில் நாடுமுழுவதையும் சேர்ந்த பெருமளவானோர் பங்கேற்றிருந்தனர். இவ்வாறு வருகை தந்திருந்த பெருமளவான மக்களுக்கு [illegible] வர்ணமயமான அலங்காரங்கள் போன்றவை வழங்கப்பட்டிருந்தன. நீர்கொழும்பில் கண்கவர் வகையில் இடம்பெற்ற ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மூலமாகப் பெருமளவு சம்பத் கிரெடிட்கார்ட் வாடிக் கையாளர்களுக்கு பெருமளவு ஷொப்பிங் அனுபவத்தை வழங்கும் வகையில் அமைந்திருந்தது. கண்டியில் முன்னெடுக்கப்பட்ட திட்டத்துக்கும் பெருமளவு வரவேற்புக் காணப்பட்டது.

உலகளாவியரீதியில் பொருள்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பணத்துக்கு பதிலாக கிரெடிட் கார்ட் வகைகள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகள் இலங்கையில் மாற்றமடையும் நிலையில்,வங்கித் துறை என்பது கிரெடிட் கார்ட் சந்தையில் பெருமளவு உயர்வைக் கடந்த சில ஆண்டுகளாகப் பதிவு செய்தவண்ணமுள்ளது. இந்த மாற்றத்துக்கமைய, சம்பத் கார்ட்ஸ் தொடர்ச்சியாக பல ஊக்குவிப்புத்திட்டங்களையும் ரவுண் ஒன் சேல்களையும் வழங்கிவருகிறது. எனவேவாடிக்கையாளர்களால் அதிக [illegible] வகையாகவும் இது அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயவர்களைக் கட்டுப்படுத்துவது பொலிஸாரின் தார்மீகக் கடமை

யாழ்ப்பாணத்தின் பெருமைக்கே இழுக்கு ஏற்படும் வகையில் இங்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த வாள் வெட்டுக் கலாசாரம் அண்மைய நாள்களில் முடங்கிக் கிடந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் அமைதியை எப்போதும் விரும்பும் குடாநாட்டு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டதையும் காணமுடிந்தது.

போரின் பின்னரான காலப் பகுதியில் தமிழ் இளைஞர்களைத் திட்டமிட்டுச் சீரழிக்கும் நடவடிக்கைகள் சில தீயசக்திகளால் மேற்கொள்ளப்பட்டமை ஒன்றும் பரம ரகசியமான விடயமல்ல. ஆனால் இந்தச் சதி வலைக்குள் எமது இளைஞர்கள் சிக்கிக் கொண்டதுதான் மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தி நிற்கின்றது. நன்மை எது தீமை எதுவென அறியாத இளவயதினரான இவர்கள் தமது பெற்றோரின் புத்திமதிகளைப் புறமொதுக்கிவிட்டுத் தீமையான செயல்களில் ஈடுபடத் தொடங்கினர். மதுபாவனை, போதைப்பொருள் பாவனை என்பவை இவர்களின் புத்தியை மழுங்கடித்துவிட்டன. படிப்பைக்கூட இவர்கள் இடைநடுவில் கைவிட்டுவிட்டு தீய செயல்களில் ஈடுபட ஆரம்பித்தனர். இதன் விளைவாகத்தான் வாள் வெட்டுச் சம்பவங்களும், பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களும் இடம்பெற்று வந்தன. புத்தம் புதிய மலருக்கு ஒப்பான அந்தப் புங்குடுதீவு மாணவி கசக்கி எறியப்பட்டதும் இவற்றுள் ஒன்றுதான்.

இந்த நிலையில் புதிதாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அவர்களின் கடுமையான உத்தரவுகளைத் தொடர்ந்து பொலிஸாரும் உசாரடைந்தனர். இதன் விளைவாக இளைஞர்களின் அடாவடித்தனங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் வாள்கள், பொல்லுகளுடன் உலாவித்திரியும் இளைஞர் குழுவைக் கண்ட பொதுமக்கள் பெரும் அச்ச நிலைக்குள் தள்ளப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தியொன்று வெளிவந்தமை மக்களிடையே மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸார் உசாராக இருந்து விரைந்து நடவடிக்கையில் இறங்குவார்களாயின் இந்தத் தீய சக்திகளை ஒடுக்கி விடுவது முடியாத காரியமல்ல. மக்கள் தமது பாதுகாப்புக்குப் பொலிஸாரையே முழுக்க முழுக்க நம்பியுள்ளனர். அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுவது பொலிஸாரின் முக்கிய கடமையல்லவா? தீய சக்திகளை மூளையிலேயே கட்டுப்படுத்தி விட்டால் பிரச்சினை பூதாகாரமாக உருவெடுக்க மாட்டாது என்பதுதான் உண்மை.

ஒரு சிலரின் தீய நடவடிக்கை காரணமாக ஒட்டு மொத்த மக்களும் அச்சத்தில் ஆழ்ந்திருப்பதும், அவலங்களை எதிர்கொள்வதும் ஏற்கக் கூடியதல்ல. பொலிஸாரே, இது உங்களின் கவனத்துக்குச் சமர்ப்பணம்.

***நா.தேவபாலன்***
கொக்குவில்.

# மக்களின் தலையில் சுமை வேண்டாம்

## வாசகர் திருமுகம்



சீனி, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.


இதைத் தொடர்ந்து ஏனையஉணவுப்பொருள்களின் விலையிலும் அதிகரிப்பு ஏற்படுமென எதிர்வு கூறப்படுகின்றது. முக்கியமான தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில் அரசு மக்கள் தொடர்பாக அதிகளவில் அக்கறை காட்டாது என்பதை இந்த விலை உயர்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

எரிபொருள்களின் விலைகள் குறையும் என மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் சற்றும் எதிர்பாராத விதமாக இந்த விலை உயர்வு தொடர்பான அறிவித்தல் வெளியாகியுள்ளது.

நாணயத்தின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே பொருள்களின் விலை உயர்வுக்கு காரணமெனக் கூறப்பட்டாலும் மக்கள் இதை ஏற்பார்கள் என்பது சந்தேகமே. உலக நிலைமைக்கு ஏற்றவாறு வியூகங்களை வகுத்து மக்களைச் சுமைகளிலிருந்து காப்பாற்றுவதுதான் ஒரு அரசின் கடமையாகும். இதை விடுத்து மக்களின் தலைகளில் பாரத்தைச் சுமத்துவது ஏற்புடையதல்ல.

**– பொ.பத்மாவதி,** சண்டிலிப்பாய்.

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# சொல்ஹெய்மின் ஆதரவை பற்றிக்கொள்ளுமா அரசு

நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஏசியன் ட்ரிபியூன் இணையத் தளத்துக்கும் நோர்வேயின் வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைக்கும் வழங்கிய நேர்காணல்கள் ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளன. ஓகஸ்ட் 17 பொதுத் தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியடைந்து, தேசிய அரசு அமைக்கப்பட்ட நிலையில், எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழர் ஒருவர் தெரிவாகியுள்ள நிலையில் சொல் ஹெய்ம் அளித்த நேர்காணல்களில், வெளியிட்ட கருத்துகள் முக்கியத்தும் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. முடங்கிப்போய் இருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் சொல்ஹெய்மின் வகிபாகம் இருக்குமேயானால் தமிழ் மக்கள் நிச்சயமாக அதனை வரவேற்பார்கள். ஏனெனில் இலங்கையில் சமாதான முயற்சிகளை மேற்கொண்ட காலப் பகுதியில் சொல்ஹெய்ம் பக்கச் சார்பின்றி அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். மிகவும் குறுகிய காலத்தில் தனது இலக்கை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் இப்பணியில் இறங்கியபோதிலும் புலிகள் தரப்பினதும் அரச தரப்பினதும் முழுமையான ஒத்துழைப்புக் கிட்டாது போனதால் அவரது முயற்சிகள் தோல்வியடைந்தன. இவற்றை அவர் தமது நேர்காணல்களில் விவரித்துள்ளார்.

நோர்வேயின் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில், இலங்கை அரசதலைவர்கள் அழைத்தால் அங்கு அரசியல் தீர்வு நடவடிக்கை களுக்குத் தாம் ஆதரவு அளிக்கத் தயாராக இருப்பதாகவும் இலங்கை தனது சொந்தக் கடின உழைப்பு மூலம் தன்னுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொன்னான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சர்வதேச சமூகம் அந்த முயற்சியில் சிறந்த மத்தியஸ்தராக இருக்கவேண்டும் என்றும் சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் மூலம் இன முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புதிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதனை அடைவது இலகுவான காரியம் அல்ல. எனினும் எனக்கு நம்பிக்கை உள்ளது என்று எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏசியன் ட்ரிபியூன் இணையத்தளத்துக்கு அளித்த நேர்காணலில், தாம் மத்தியஸ்தம் வகித்த சமாதான முயற்சி தோல்வியடைந்ததற்க்கான இரு பிரதான காரணங்களை சொல்ஹெய்ம் வெளிப்படுத்தியுள்ளார். ஒன்று சமஷ்டி முறையை ஏற்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தயக்கம் காட்டியமை. மற்றது தென்னிலங்கையின் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கு கட்சி சார்பற்ற தன்மை இல்லாமை. நாட்டின் தேசியப் பிரச்சினைகளில் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் செயற்பட்டு வந்துள்ளன. இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்கும்போது மீண்டும் இதே பிரச்சினை இருக்கத்தான் போகிறது. மகிந்த ஆதரவாளர்கள் எதிர்ப்பார்கள். அதனால்தான் இனப்பிரச்சினைத் தீர்வு என்பது இலகுவான காரியம் அல்ல என்பதைத் தனது நேர்காணல்களில் சொல்ஹெய்ம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து இனப் பிரச்சினைத் தீர்வுக்குத் தடையாக இருந்த காரணிகள் இன்னும் இருக்கின்றன. எதிர்ப்புகள் மத்தியில் தீர்வு ஒன்றை முன்னெடுத்துச் செல்ல சர்வதேச ஆதரவுள்ள துணிச்சலான ஒரு தலைவர் தேவை. சொல்ஹெய்மின் ஆதரவு மட்டுமல்ல பங்களிப்பும் இதற்கு முக்கியமானது. இலங்கை விவகாரங்களில் சொல்ஹெய்முக்கு நல்ல அனுபவங்கள் உள்ளன. 2000- 2005 வரையான சமாதான நடவடிக்கைகளின்போது பிரதான அனுசரணையாளராகச் செயற்பட்டவர் சொல்ஹெய்ம். முதல் தடவையாக விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவும் யுத்த நிறுத்தம் செய்யவும் அவரது முயற்சி வழிவகுத்தது. இலங் கையில் மட்டுமல்ல மத்தியகிழக்கு, புரூண்டி, சூடான், நேபாளம் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளிலும் சொல்ஹெய்ம் சம்பந்தப்பட்டிருந்தார். தற்பொழுது இலங்கையில் ஏற்பட்டுள்ள சுமுகமான அரசியல் சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்கு சொல்ஹெய்மின் ஆதரவு மட்டுமல்ல பங்களிப்பும் அவசியமானதாகும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமைகள் சபையே என்ன செய்யப் போகிறாய்?

காணாமற் போனோர் தொடர்பாகவும், மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, தனது அறிக்கையை இவ்வாரத்தில், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான குழுவிடமே, பின்னர் மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணை செய்யும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் இரண்டு விடயங்கள் தொடர்பிலும் விசாரணை அறிக்கைகள் அனேகமாக இந்த வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முப்பதாவது கூட்டத் தொடர் இன்னும் நான்கு நாள்களில் ஆரம்பமாக உள்ளது. அது எதிர்வரும் ஒக்ரோபர் இரண்டாம் திகதி வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுகளின் போது, இலங்கைக்கு எதிரான விசாரணை அறிக்கையும் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு முன்னோட்டமாக பரணகம விசாரணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அரசு உள்ளக போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் என்று தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இதேவேளை- அரசு நியமித்த டெஸ்டன் டி சில்வாவின் தலைமையிலான 'ஆலோசனைக் குழுவும் தனது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அரசுக்கு வழங்கும். அவையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்பது தகவல்.

எது எவ்வாறாயினும், போர்க்குற்றங்கள் குறித்து உள்ளக விசாரணை நடத்தி, தமது இலக்குக்கு ஏற்ப "சளாப்பி" விடுவதிலேயே மைத்திரி - ரணில் அரசு அளவுக்கு அதிகமான அக்கறை காட்டுகிறது என்பது வெள்ளிடைமலையாகத் தெரிகிறது!

அமெரிக்கா தலைமையிலான, அதன் வழிநடக்கும் நாடுகளும், உள்ளக விசாரணைக்கே உயர்த்திக் குரல் கொடுக்கும் என்பது, இப்போது சூரிய வெளிச்சம் போன்று அண்மித்துத் தெரிகிறது.

இலங்கையில் நடைபெற்ற நீண்ட பெரும் போரால் பாதிப்புற்ற வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை, தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்தியும், அனைத்துலக நாடுகளைக் கட்டி அரவணைக்கும் தந்திரங்களைக் கையாண்டும், உள்ளக விசாரணைப் பொறிமுறையை உயர்த்தி மேல் எழுப்பவே கொழும்பு அரசு பாடாய்ப்படுகிறது.

சமாதானச் சூழல் என்ற பட்டியைச் சூட்டிக் கொண்டு தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரசைகள் அல்லர் என்று வகைப்படுத்தும் விதத்தில், அரச தரப்பின் "வார் ஒட்டம்" மிகுந்த வேகத்துடன் நடைபெறுகிறது.

அனைத்துலக மக்களினதும் மனித உரிமைகள் முழு அளவில், உலக நாடுகளில் பேணப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் நியமம், இலங்கை தொடர்பில் கீலம் கீலமாகக் கிழித்தெறியப்பட வேண்டுமா?

அதுவே நியதி என்ற நிலை உயர்ந்தால், சமாதானமும் சகவாழ்வும் வெறும் வாய்ச் சொல் மாய்மாலம் ஆகிவிடுமே!

இது குறித்து மனிதாபிமானத்தை மதிக்கும் தேசங்கள் என்ன செய்யப்போகின்றன? உலக தர்மமும் நீதியும் தழைத்தோங்கச் செய்வதற்குப் பதிலாக இப்படி ஒரு பாவமா?

# இழுபறி நிலையில் போர்க்குற்ற விசாரணை!

சிங்கள மூலம்: உப்புல் யோசெப் பெர்னாண்டோ (மவ்பிம)
தமிழில் வீ.எஸ்.ரீ

இலங்கையில் இடம்பெற்ற போரில் ஆயிரக்கணக்கான தமிழ்ப்பொது மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக உரிய நீதி விசாரணை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒப்புக்கொண்டுள்ளார். போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பின் அது குறித்த வெளிப்படையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுக் குற்றமிழைத்தோர் தண்டிக்கப்படுவதன் மூலம் நீதி நிலை நாட்டப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதியன்று வெளியான 'டெய்லிமெயில்' பத்திரிகை மேற்கண்டவாறு செய்தி பிரசுரித்திருந்தது. அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமது கொள்கை விளக்க உரையிலேயே மேற்குறித்த கருத்தை ஊடகங்களுக்கு வழங்கியிருந்ததாகவும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

அந்த வகையில் தற்போது மைத்திரி–ரணில் அரசு அன்றைய ஜனாதிபதி மகிந்தவின் உறுதி மொழியை நிறைவேற்றி வைக்க முனைந்துள்ளது. இந்த நிலையில் இன்று மகிந்தவின் ஆதரவாளர்கள் எதற்காகத் துள்ளிக் குதிக்க முனைந்துள்ளனர்?

உண்மையில் பிரச்சினையே அங்குதான் உள்ளது. போரின்போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றனவா என ஆராய்ந்தறிவதற்காக ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ –மூன் நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட தினத்தன்றே, மகிந்த மேற்குறித்த தமது அரசின் நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை நிறைவேற்றப்பட்ட வேளையிலும், குறித்த விடயம் தொடர்பாகச் சர்வதேச விசாரணை எதுவும் தேவையில்லை எனவும், தேசிய ரீதியில் உள்ளக விசாரணையொன்றை நடத்த இடமளிக்குமாறும் மகிந்த கோரியிருந்தார். ஆனால் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளும், அந்த நாடுகளின் மனித உரிமைகள் அமைப்புக்களும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், தமிழ் நாடு மாநில அரசு மற்றும் எதிர்க்கட்சிகளும் மகிந்தவின் உள்ளக விசாரணை யோசனையில் தமக்கு நம்பிக்கை கிடையாதெனத் தெரிவித்தன. இதனாலேயே 2014ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்று அவசியமென்ற பிரேரணையை அமெரிக்கா முன்வைத்தது. ஆனால் குறித்த விடயம் தொடர்பாக உள்ளக விசாரணைக்கு அமெரிக்காவை இணங்க வைப்பதற்காக மகிந்த அரசு, இந்த நாட்டு மக்களது பணத்தில் 87கோடி ரூபாவைச் (ரூபா 872,806,569/=) செலவிட்டிருந்தது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் செனட்சபை முக்கிய ...

தொகை நிதி வழங்கப்பட்டு அவர்களது சேவை பெறப்பட்டது. அந்த வகையில் மகிந்த அரசு அமெரிக்க அரச உயர்பீட உறுப்பினர்களை மூளைச் சலவை செய்வதன் மூலம் தனது வழிக்குத் திருப்ப நாட்டு மக்களது பலகோடி ரூபா நிதியைச் செலவிட்டது. ஆனால் தற்போது மைத்திரி–ரணில் அரசோ, ஐந்து சதம் கூடச் செலவு செய்யாது அமெரிக்க அரசை போர்க்குற்றங்கள் தொடர்பான உள்ளக விசாரணை யோசனைக்கு ஆதரவு வழங்க வைத்துள்ளது.

போர்க்குற்ற விசாரணை தொடர்பான அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாட்டு மாற்றத்துக்கு தென்பகுதி மகிந்த ஆதரவுத் தரப்பினரும், வடபகுதி மற்றும் தமிழ் நாட்டிலும், உலக அளவில் பரந்து வாழும் பிரபாகரனுக்கு ஆதரவான தரப்பினருமே காரணமாக அமைந்துவிட்டுள்ளனர். தற்போது அமெரிக்கா போர்க் குற்றங்கள் தொடர்பான உள்ளகவிசாரணைக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி, விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர ஆதரவாளர் வை.கோ ஆகியோர் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். தமது தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளைப் பின்தள்ளி வைத்து தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி மற்றும் வை.கோ ஆகியோர் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையே அவசியமென ஒன்றிணைந்து குரல் கொடுக்கின்றனர். அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட சர்வதேச விசாரணை யோசனைக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் ஆதரவு வழங்குமாறு இந்திய மத்திய அரசுக்கு முன்னர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். தற்போது அமெரிக்கா குறித்த விடயத்தில் உள்ளக விசாரணையே போதுமானதெனத் தெரிவிக்கவிருப்பதைக் கண்டு தமிழ் நாடே கொதித்தெழுகிறது.

தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, நாட்டின் வடபகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும் கூட இந்த விடயத்தில் கோபாவேசம் கொண்டிருக்கிறார். போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையே அவசியமென வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் தீர்மானமொன்றையும் அவர் அண்மையில் நிறைவேற்றியுள்ளார். அமெரிக்கா போர்க்குற்றம் தொடர்பாக உள்ளக விசாரணை யோசனைக்கு இணக்கம் தெரிவித்த பின்னரும் வடக்கு மாகாண முதலமைச்சர் சர்வதேச விசாரணையே தேவை என வலியுறுத்தி மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

உண்மையில் உள்ளக விசாரணை யோசனைக்கு அமெரிக்காவை இணங்க வைப்பதில் மைத்திரி–ரணில் அரசுக்கு உதவியது இந்தியாவேயாகும். இந்தியா மட்டுமல்லாது அமெரிக்காவும் கூடத்தான் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க மகிந்த அரசுக்கு உதவி புரிந்துள்ளன. ஆனாலும் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின்னர் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்குவதான மகிந்த அரசின் வாக்குறுதியைப் பெற்றே இந்தியாவும் அமெரிக்காவும் போரில்

வெற்றிபெற இலங்கை அரசுக்கு உதவின.

போரில் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க இலங்கை அரசுக்கு உதவ வேண்டி அவ்விரு நாடுகளுடன் தொடர்புகளைப் பேணி உதவிபெற இடையீட்டாளராகச் செயற்பட்ட மகிந்த அரசின் முக்கிய அமைச்சராகச் செயற்பட்ட பசில் ராஜபக்ச இதனை மகிந்த அரசின் அமைச்சர்கள் பலருக்குத் தெரிவித்திருந்தார். போர் முடிவடைந்த பின்னர் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் வழங்கிய உறுதிமொழியைச் செயற்படுத்த முயன்றபோது தமது அந்த முயற்சிக்கு அரச தரப்பின் பலரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார். உண்மையில் மகிந்த தாம் ஜனாதிபதிப் பதவியைப்பெற உதவிய மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராச்சி, ஜே.வி.பி.தரப்பினர் மற்றும் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால ஆகியோரைத்தமது வெற்றிக்காகப் பயன்படுத்திவிட்டு, வெற்றியீட்டியதன் பின்னர் கறி சமைத்த பின்னர் கறிவேப்பிலையைத் தூக்கி வீசியது போன்று அவர்களை ஓரம் கட்டிவிட்டிருந்தார். அதே போன்று தான் போரை வெற்றிகொள்ள இந்தியாவினதும் அமெரிக்காவினதும் உதவிகளைப் பெற்றுக்கொண்டு, போரை வெற்றி கொண்ட பின்னர் அந்த இரு நாடுகளையும் கறிவேப் பிலையைத் தூக்கி வீசுவது போன்று வீசிவிட்டார்.

மகிந்தவின் இந்த கறிவேப்பிலைக் கோட்பாடு காரணமாகவே இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை குறித்த பிரேரணை ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படவும், 'சர்வதேச ரீதியில் இலங்கை ஓரம்கட்டப்படவும் நேர்ந்தது. அது வடபகுதித் தமிழ் மக்களுக்கும் தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கும் வாய்ப்பாக அமைந்தது. தற்போது மைத்திரிபாலவும், ரணிலும் இணைந்து இந்தியாவின் உதவியுடன் போர்க்குற்றம் தொடர்பாக உள்ளக விசாரணையே போதுமானது என்ற நிலைப்பாட்டுக்கு அமெரிக்காவை இணங்க வைத்திருப்பது விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுக்கு உடம்பில் ஊசி ஏற்றியது போன்ற வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தென்னாசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் அண்மையில் இலங்கைக்கு வந்து போர்க்குற்றம் தொடர்பாக உள்ளக விசாரணை யோசனைக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குமென தெரிவித்தவேளை, அமெரிக்கா இலங்கைத் தமிழ் மக்களைக் காட்டிக்கொடுத்து விட்டுள்ளது என தமிழ் நெற் இணையத்தளம் விமர்சித்திருந்தது. அதேவேளை, மறுபுறத்தில் தென்பகுதி மகிந்த ஆதரவுத் தரப்பினரும் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் போன்று, உள்ளக விசாரணைப் பொறிமுறை மூலம் இலங்கை அரசு பாதுகாப்புப் படையினரைக் காட்டிக்கொடுக்க முனைகிறது என விமர்சிப்பது ஆச்சரியம் தருமொன்றாக அமைகிறது. அந்த வகையில் தற்போது மகிந்த ஆதரவுத் தரப்பினரும் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் போன்றே செயற்பட முயல்கின்றனர் எனக் கொள்வது பொருத்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களால் மறக்க முடியாத

## சத்துருக்கொண்டான் படுகொலைகள்

மு.ஈழத்தமிழ்மணி




கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது ஈழப் போர்க் காலப் பகுதியில் பல கிராமத்து தமிழ்மக்கள் அழிக்கப்பட்ட வரலாறுகளில் சத்துருக்கொண்டான் படுகொலைகளையும் குறிப்பிடலாம். அப்போது ஜனாதிபதியாக ஆட்சியிலிருந்தவரான ஆர்.பிரேமதாஸாவின் அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கான பயங்கரமான இராணுவ நடவடிக்கையை கிழக்கு மாகாணத்தில் தீவிரப்படுத்தியிருந்தது. புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில் தமிழர்களை அழித்த தமிழ்க் கிராமங்களில் சத்துருக் கொண்டான் கிராமமும் ஒன்றாகும்.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதியன்று சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில் மற்றும் பணிச்சையடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 186 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் இருபத்தைந்தாவது ஆண்டு சிரார்த்ததினத்தை இன்று மட்டக்களப்பு மக்கள் அனுஷ்டிக்கின்றனர்.

1990 ஆம் ஆண்டுகளில் கிழக்குப் பல்கலைக் கழக அகதி முகாமிலிருந்து 174 தமிழர்களும், சித்தாண்டி முருகன் ஆலய அகதி முகாமிலிருந்து 33 தமிழர்களும் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தும் இதுவரை அவர்கள் குறித்த தகவல்கள் இல்லை. அவர்களும் கொல்லப்பட்டு இனம் தெரியாத இடங்களில் புதைக்கப்பட்டிருக்கலாம்? அல்லது எரிக்கப்பட்டிருக்கலாம் என மட்டக்களப்பு மக்கள் மத்தியில் இன்றும் சந்தேகம் நிலவுகிறது. அத்தகைய அத்தியாயங்களைக் கொண்ட தமிழினப் படுகொலைகளில் சந்துருக்கொண்டான் படுகொலைச் சம்பவமும் ஒன்றாகும்.

1990 ஆம் ஆண்டின் குறித்த காலப் பகுதியை பின் நோக்கிப் பார்த்தால் அந்தக் காலப்பகுதி மிகவும் பயங்கரமானதாகும். பயம், பீதி, அச்சம் நிறைந்த காலப்பகுதியாக அது இருந்ததை உணரலாம். திருகோணமலை மட்டக்களப்பு வீதியிலிருந்து சில கிலோமீற்றர் தொலைவிலுள்ள தமிழ்க் கிராமமே சத்துருக் கொண்டான். இந்தப் பிரதேசத்து மக்களது தொழில் விவசாயமாகும். அன்றையதினம் சத்துருக்கொண்டானைச் சுற்றி வளைத்து பல நூற்றுக் கணக்கான படையினரோடு சிவிலுடை அணிந்தவர்களும் ஆக்கிரமித்துக் கொண்டனர்.



குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் எனப் பெரும் தொகையானோர் அந்த மாலை வேளைப் பொழுதினில் குடிசைகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் பயத்துடன் வெளியில் வருகின்றனர். படையினர் தமது கைகளில் துப்பாக்கிகள், கத்திகள் போன்ற ஆயுதங்களோடும், கொடூரப்பார்வைகளோடும் மக்களைக் காவுகொள்ள வந்தவர்களைப்போல் அவர்கள் முன் நிற்கின்றனர்.

மக்களை நெருங்கிய விசேட அதிரடிப் படையினரும், இஸ்ரேலிய மொசாட் அமைப்பினூல் பயிற்சியளிக்கப்பட்ட முஸ்லிம் ஊர் காவல் படையினரும் எல்லோரையும் அழைத்துக் கொண்டு அருகிலுள்ள பாடசாலைக்குக் கொண்டு செல்கின்றனர். அந்த சிறிய பாடசாலைக் கட்டடப்பகுதிக்குள் மிருகங்களைப் போல் வயது வேறுபாடின்றி அடைக்கப்படுகின்றனர். குழந்தைகள், சிறுவர்கள் பயத்தினாலும், பசியினாலும் துவள்கின்றனர். காலைக்கடன்களைக்கூட முடிக்க முடியாத நிலையில் பெரும் அவலங்களோடு என்ன நடக்கப் போகின்றது என்பதை அறிய முடியாத பயங்கரமான உணர்வுகளைத் தாங்கியபடியிருக்க அன்றைய மாலைப் பொழுது மறைந்து இருளாகிவிட்டது. இருண்ட பின்னர் சுற்றி வளைத்து ஆக்கிரமித்து நிற்கின்றபடையினர்கள்தமது நோக்கங்களை முடிப்பதற்கு தங்களைத் தயார்படுத்துகின்றனர்.

பாடசாலைப் பகுதிக்குள் அடைக்கப்பட்டுள்ள மக்களுக்குஎந்தவிதஉணவுகளும்வழங்கப்படவில்லை. பசி, பசி என குழந்தைகள், சிறுவர்கள் ஓலமிடுகின்றனர். குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டுத் துடிக்கின்றனர்.

வீரமாகாளி அம்மாளாச்சியே எங்களைக் காப்பாற்றுதாயே, எந்தத் துன்பத்தையும் தந்து விடாதே என மன துக்குள் வேதனைக் குமுறலோடு வாயால் சொல்ல முடியாதவாறு தழு தழுத்த குரலில் வேண்டுகின்றனர்.

படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட மக்களைத் தவிர்த்துச் சத்துருக்கொண்டான் கிராமத்தின் மீதமுள்ள மக்கள் மன்ரேசா முகாமில் தஞ்சமடைந்திருந்தனர். வீடுகளிலும் தங்கியிருந்தனர். குறித்த மூன்று கிராமத்துக்குச் சென்ற படையினர் எவரையுமே தங்கியிருக்க வேண்டா மெனக் கூறி படையினரைச் சேர்ந்த பெரிய ஐயா கூட்டத்துக்கு அழைத்து வரச் சொன்ன தாகக் கூறி சத்துருக்கொண்டான் போய்ஸ்டவுன் இராணுவமுகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

படையினரால் பிரித்தெடுப்பட்ட 186 பேரும் படையினரால் தனித்து வைக்கப்பட்டனர். சூரியன் அஸ்தமித்து கடும் இருளுக்குள் கிராமம் மூழ்குகின்றது. 184 பேரினது மேற்சட்டைகளினாலே அவர்களது கைகள் பின் பக்கமாகக் கட்டப்படுகின்றன. 184 தமிழர்களது உறவுகளின் கதறல்களுக்கும், ஓலங்களுக்கும் மத்தியில் அவர்கள் படையினரால் கொண்டு செல்லப்படுகின்றனர். உறவினர்கள் உட்பட கிராமத்து மக்கள் மத்தியில் சோகமும், வேதனையும் தாங்க முடியாத உச்சத்துக்கு கொண்டு செல்கின்றன. விடிந்ததும் படையினரின் முகாம் சென்று கொண்டு செல்லப்பட்டவர்களை மீட்டு வரலாம் என்ற நம்பிக்கை ஓரளவு இருந்தாலும், என்னவோ, ஏதோ நடக்கப்போகின்றது என்பதை உணர்ந்தவர்கள் நள்ளிரவு வேளை நெருங்கியதும் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட தம் உறவுகளை விடிந்ததும் போய்ப்பார்த்து அழைத்து வரலாம் என்று நம்பி வேதனையிலிருக்க சில நேரங்களின் பின்னர் அவர்களது வேதனையும், சோகங்களும் பன்மடங்காகி சத்துருக் கொண்டான் கிராமமே கண்ணீருக்குள் மூழ்கின்றது. விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டவர்களின் அவலக் குரல்களை உறவுகளால் கேட்கக் கூடியவாறு இருந்தது. தூரத்திலிருந்து கேட்ட அவலக் குரல்களுக்குரிய சொந்தக்காரர்கள் இதனைக் கேட்ட பின் கதறுகின்றனர், ஓலமிடுகின்றனர். என் பிள்ளைக்கு என்ன நடந்தது, என் கணவருக்கு என்ன நடந்தது, என்தந்தைக்கு என்ன நடந்தது ஒன்றும் தெரியவில்லையே என்று தங்களால் என்ன செய்யமுடியும் என நெஞ்சில் அடித்து கதறி அழுகின்றனர். பெரும் காற்றினிலே எழும்பி அவர்களது அழுகுரல், மரண ஓலம் மூலமாக தங்களுக்கு என்ன நடந்தது என்பதை எட்டியிருந்த உறவுகளுக்குப் புரிய வைத்துக் கொண்டிருந்தது.

விடிந்ததும் சத்துருக்கொண்டான் கிராமம் எதுவுமே புரியாத நிலையில் மயானமாகக் காட்சியளிக்கின்றது. ஒருவரோடு ஒருவர் பேசமுடியாத நிலைமை. குழந்தைகள், சிறுவர்களைக்கூட இரக்கமில்லா கொடுமையாளர்கள் கொன்றொழித்த துயரம் எல்லாவற்றையும் சத்துருக்கொண்டான் கிராமம் சுமந்து கொண்டிருக்க 184 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற அவலச் செய்தியே உறவுகளுக்கு தப்பிவந்த ஒருவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எந்த உண்மையும்படையினரால்தெரிவிக்கப்படவில்லை. படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களில் கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்த 47பேரும், சத்துருக்கொண்டானைச் சேர்ந்த 38 பேரும், பணிச்சையடி கிராமத்தைச் சேர்ந்த 37பேரும், பிள்ளையாரடி கிராமத்தைச் சேர்ந்த 62 பேருமாக 184 தமிழர்களுக்கு இன்றுவரையில் என்ன நடந்தது என்பதை எவராலும் அறிந்து கொள்ள முடியாது மறைக்கப்பட்டு விட்டது.

ஆனாலும் 184 தமிழர்களுக்கு என்ன நடந்தது பற்றி தெரியப்படுத்தக்கோரி தமிழ் அரசியல்வாதிகள், மனித உரிமை அமைப்புகள் என அனைவருக்கும் உறவினர்களால் சகல விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. வேறு விதத்திலும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எந்தவிதமான உண்மையும், நீதியும் வெளிவரவேயில்லை.

இது சம்பந்தமாக இத்தகைய படுகொலைகளுக்கு எதிராகவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் துணிச்சலுடன் குரல் எழுப்பியிருந்த காலஞ்சென்ற மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான யோசப் பரராஜசிங்கம், அன்றைய ஜனாதிபதி தொடக்கம் பாதுகாப்பு அமைச்சர் வரை மட்டுமன்றி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உட்பட பல்வேறு தரப்புக் களின் கவனத்துக்கும் இந்த விடயங்களைக் கொண்டு சென்றிருந்தார்.

சம்பவத்தில் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் இறந்தவர் போல் கிடந்திருந்த ஒருவர் உயிர் தப்பியிருந்தார். அவர் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையிலான காணாமற்போனவர்களைக் கண்டு பிடிக்கும் விசாரணை ஆணைக்குழு உட்பட பல்வேறு தரப்புக்களிடம் இந்தச் சம்பவங்கள் பற்றியும் எடுத்துரைத்திருந்தார். இதே ஆணைக் குழு முன் சாட்சியமளித்த இராணுவ அதிகாரியொருவர் இந்தச் சம்பவத்தை மறுத்து சாட்சியளித்திருந்தார்.

சத்துருக் கொண்டானில் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட 184 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமையானது அந்த இடத்திலிருந்து உயிர் தப்பி வந்த ஒருவரின் கண்ணால் கண்ட சாட்சியமும், ஊர் உறங்கி அடங்கிய நள்ளிரவுக்குப் பின்னர் 184 தமிழர்களைப் படையினர் எங்கு கொண்டு சென்று துடிதுடிக்கப், பதைபதைக்க காட்டுமிராண்டித்தனமாக சுட்டுப்பொசுக்கிய அந்த நேரத்தில் பேரோசையாக பெரும் காற்றில் எழுந்துவந்த அவலக்குரலும், மரண ஓலங்களும் சாட்சியாக உள்ளன.

சத்துரு கொண்டான் மக்கள் அந்தப் பகுதியில் 184பேருக்கும் பெரும் நினைவுத்தூபி அமைத்து வருடாவருடம் செப்ரெம்பர் 9ஆம் திகதி கண்ணீர் மல்க நினைவு நாளை நினைவு கூர்ந்து வருகின்றனர். சோகமும், வேதனையும் சேர்ந்த 184 பேரின் நினைவு நாளை நினைவுத் தூபிக்கு முன்பாக அனுஷ்டிக்க பொலிஸ் உயரதிகாரி மறுத்து விட்டார். 184பேரும் விடுதலைப்புலிகள் எனக்கருதிய பொலிஸார் அவர்களின் நினைவுக்கான அஞ்சலி நிகழ்வுகளை நடத்த அனுமதிக்கமாட்டோம் எனக் கூறி நீதிமன்ற மூலமும் தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டனர்.

1983 இல் இருந்து 2007வரை நடைபெற்ற படுகொலைகளில் பெரியதொரு தமிழினப் படுகொலையாக சத்துருக்கொண்டான் படுகொலை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழின செயற்பாட்டாளர்களாலும் யதார்த்தவாதிகளாலும் பதிவாகியுள்ளது. இந்தப் படுகொலை இடம்பெற்று 25 ஆண்டுகள் கழிகின்ற வேளையில் முன்னர் பேரினவாத ஆட்சியை மேற்கொண்டோர் இந்தச் சம்பவங்களை மறைக்கலாம், மறுக்கலாம். ஆனால், தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்தச் சம்பவத்தை மறுக்க முடியாது. உண்மையும், நீதியும் என்றோ ஒருநாள் வெளிவரும். 25 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வையும் தமிழர்களாகிய நாம், எம்மனக்கண் முன். இதயத்தில் நினைவு கொள்ளுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 8 | | | 1 | | |
| | | | 7 | | | | | |
| | 6 | 2 | | 4 | 3 | | 7 | |
| | | | | | | | 6 | 7 |
| 3 | | 6 | | | | 5 | | 2 |
| 8 | 4 | | | | | | | |
| | 9 | | 3 | 5 | | 7 | 1 | |
| | | | | | 2 | | | |
| | | 7 | | | 9 | | 5 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல் யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 1 | 2 | 9 | 7 | 4 | 6 |
| 1 | 2 | 7 | 3 | 4 | 6 | 9 | 8 | 5 |
| 9 | 4 | 6 | 7 | 5 | 8 | 3 | 2 | 1 |
| 3 | 1 | 2 | 5 | 7 | 4 | 8 | 6 | 9 |
| 4 | 6 | 8 | 9 | 1 | 3 | 5 | 7 | 2 |
| 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 1 | 3 | 4 |
| 2 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 5 | 7 |
| 7 | 9 | 4 | 8 | 6 | 5 | 2 | 1 | 3 |
| 6 | 5 | 1 | 2 | 3 | 7 | 4 | 9 | 8 |

## மூட்டு வலியால் துன்பமா?

இன்றைய காலகட்டத்தில் 30 வயதை எட்டி விட்டாலே மூட்டு வலி தொற்றிக் கொள்கிறது. மூட்டு களுக்கு தேவையான சத்துக் கள் கிடைக்காததே இதற்கு கார ணம். எனவே ஆரோக்கியமான உணவை உட் கொண்டு, சீரான உடற்பயிற்சிகளை செய்து வந்தால் மூட்டு வலியை விரட்டி அடிக்கலாம். மூட்டுக்களில் ஏற் படும் பிரச்சி னையை தொடக் கத்திலேயே சரி செய்ய வேண்டும். வீக்கம் ஏதும் இருந் தால் மருத்துவரை அணுகுவது நலம். உடல் நிறையை சீராகப் பார்த்துக் கொள்ள வேண் டும். நிறை அதிகரிக் கும் பட்சத்தில் மூட் டுகளுக்கு அதிகப் படியான அழுத்தம் ஏற்பட்டு வலிகள் உண்டாகும். நீண்ட நேரம் ஒரே இடத் தில் அமர்ந்து வேலை செய்பவர் கள், தினமும் உடற் பயிற்சிகள், நடைப் பயிற்சியை மேற் கொண்டால் மூட்டு களின் ஆரோக்கி யத்தைப் பாதுகாக் கலாம். காய்கறி கள், பழங்கள், பால் மற்றும் கல்சியம் அதிகம் நிறைந்த [illegible] உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40–60 | 60 | 40 | 35 |
| கத்தரி | 90 | 70 | 80 | 80 | 60–70 | 80 | 80 | 40–50 |
| கரட் | 70 | 140 | 80 | 80 | 100–120 | 120 | 100–120 | 120–140 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40–50 | 60 | 50–60 | 35–40 |
| பயிற்றை | 30 | 40 | 60 | 20 | 40–50 | 80 | 80 | 50 |
| பாகல் | 80 | 80 | 100 | 80 | 80–100 | 120 | 100–120 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 80 | 80 | 80–100 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 100 | 120 | 110 | 100–120 | 90–100 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 80 | 80 | 80 | 100 | 100–120 | 50–60 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30–40 | 60 | 45–60 | 25 |
| தக்காளி | 40 | 40 | 60 | 40 | 40 | 70 | 80–100 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 60 | 40 | 60–80 | 25 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 25 | 40 | 30–35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20–25 | 40 | 60–80 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 120 | 120 | 120 | 80–120 | 120 | 200–220 | 100–120 |
| புடோல் | 40 | 50 | 40 | 30 | 40–50 | 60 | 60–80 | 30 |
| கோவா | 60 | 80 | 60 | 30 | 60–70 | 80 | 80–100 | 45 |
| வெண்டி | 40 | 40 | 40 | 30 | 60–70 | 40 | 40–60 | 100 |
| போஞ்சி | 160 | 130 | 180 | 160 | 140–160 | 140 | 120–160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 70–80 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 40–50 | 45–50 | 40–50 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 90 | 90–100 | 90 | 80 | 80–100 |
| தேசிக்காய் | 70 | 120 | 120 | 100 | 70–80 | 120 | 120–160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 10 | 20 | 15–20 | 08 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 80 | 120 | 120 | 80–120 | 120 |
| இராசவள்ளி | 250 | – | – | 160 | 100 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 100 | 60 | 80–120 | 100 | 120 | 70 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பிரார்த்தனை பயன் தரும்

கடினமான உடல்வேலைகளில் ஈடுபடுங்கள். மனம், உடல் இரண்டுக் கும் சரிசமமாகப் பயிற்சி கொடுங்கள். துன்பங்கள் மலைபோல நின்று பயமுறுத்தினாலும், பயப்படாதீர்கள். காலால் மிதித்து நசுக்கிவிடுங்கள். பயத்துக்கு சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது. காலத்துக்கு எல்லை யில்லை. முன்னேறுங்கள். திரும்பத் திரும்ப உங்களின் இயல்பான தைரியத்தை மனதில் கொள்ளுங்கள். பிரகாசம் உங்களை வந் தடைந்தே தீரும்.மூன்று விடயங்கள் இப்போது உங்களுக்குத் தேவை. இலட்சியத்தை உணர்வதற்கான இதயம், சிந்தனைத் திறனுள்ள மூளை, வேலை செய்யக்கூடிய கைகள். இந்த மூன்றும் இருந்தால் வெற்றி உங்களைத் தானாக வந்தடைந்துவிடும். விழிப்புணர்வுடன் செய்யும் பிரார்த்தனையின் மூலம் எல்லா விருப்பங்களும் நிறைவேறும். பிரார்த்தனையின்போது நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்பு பெறுகின்றன.

## மனிதனது சந்தோசம் அவனது இயற்கை நிலை

மனிதன் சந்தோசத்தைப் பெற ஓயாது அலைவதன் உட்கருத்து, மனி தனது உண்மையான இயல்பு ஆனந்தமயமானது. அவன் சந்தோசத் தின் பூரண உருவாக விளங்குகிறான் என்பதாகும்.



ஒருவன் சந்தோசமாக இருந் தால் அது அவன் இயற்கையான நிலையாகும். அந்த இயற்கை நிலையில் இருப்பதற்குத்தான் அவன் முயலுகிறான்.

**சாயி சிந்தனை**

## நாளை

**ஆவணி-25**
**வெள்ளிக்கிழமை**
**11.09.2015**

*திதி: திரயோதசி மு.ப.09.05 வரை*
*நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.09.54 வரை*
*சுபநேரம்: 06.03–07.33 வரை*
*இராகுகாலம்: 10.33–12.03 வரை*

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 600 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 700 | 500 | 440 |
| சுறா | 600 | 500 | – | 800 | 600 | – |
| சீலா | 300 | 450 | 300 | 450 | 400 | 350 |
| விளை | 700 | 500 | 400 | 500 | 400 | 350 |
| மூரல் | 300 | 400 | 350 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 500 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | 400 | – | – |
| ஓரா | 350 | 400 | 300 | 300 | – | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 200 | – |
| நகரை | 200 | 300 | 150 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 150 | 80 |
| ஒட்டி | 300 | 150 | 250 | 200 | 150 | 250 |
| திருக்கை | 150 | 400 | 250 | 300 | 200 | 120 |
| பாலை | 350 | 300 | 300 | 400 | – | – |
| வாளை | 100 | 200 | – | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 300 | 250 | – | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்

**'Y' எழுத்தைத் தமது பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள் நேர்மையானவர்கள்–**

மற்றவர்களை வழி நடத்திச் செல்லும் போக்கும், தனக்கு எவரும் புத்தி புகட்டக் கூடாது என்பதில் முனைப்பும், புகழில் நாட்டமும், ஒழுங்கும், கட்டுப்பாடும், தான் மிகுந்த சக்தியுடையவன் என அடிக்கடி சொல்லிக் கொள்வதுமான குணத்தையுடைய Y என்ற எழுத்துக்குரியவர்களுக்கு சூரியக்கதிர்கள் உட்குவிவ தால் அவர்கள் மேலானவர்களாக இருப்பது இயல்பு. நேர்மையின் இலக்கணமாகத் திகழும் இவர்கள் பெண்களுக்கு அடிபணியும் வாய்ப்பு உள்ளது. வாழ்வில் எவ்வளவு முயற்சி செய்தும் உயர்வுகள் என்னவோ இவர்களை விட்டுப் பயந்து ஓடிக்கொண்டே இருக்கும். கையொப்பமிடும் போது இடதுபுறம் சாய்த்து கையெழுத்திடுவதால் வந்த வினை இது. எனவே கையொப்பமிடு வதை சாதகமாக மாற்றிக் கொள்வது அவசியம். சில வேலைகளில் முடிவெடுக்கத் தெரியாமல் இருதலைக் கொள்ளி எறும்புபோல் அல்லாடுவதைச் சரி செய்ய தகுந்த ஆலோசனைகளைப் பெறுவதற்கு C,G,L,S எழுத்துக்களைப் பெயரின் முதல் எழுத்துக்களாகக் கொண்டவர்களை நாடுவது சிறப்பாகும். அடிக்கடி ஜலதோசம், காய்ச்சல், மூட்டு வலிகள் ஏற்படலாம். உணவுக்கட்டுப்பாடு மூலமாக இவற்றை நிவர்த்தி செய்யலாம்.







**'Z' எழுத்தைத் தமது பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள் ஆன்மிகவாதிகள்–**

தெய்வீகத்தைத் தனது தனிக்கொள்கையாகக் கொண்ட இவர்களின் சொல் எந்த இடத்திலும் சபை ஏற மறுக்கும். காரணம் சூரியக்கதிர்கள் தட்டையான மேற்புறத்தில் தங்க முடியாதது தான். மேலும் கர்வம் கொண்டவர்கள் என்ற இலவசப் பட்டம் வேறு. மக்களிடம் தகுந்த மரியாதை கொண்ட இவர்கள், மதத்தின் மீது மலையளவு நம்பிக்கை கொண்டவர்கள். ஆன்மிகக் கருத்துக்கள் பரப்புவதில் வல்லவர்களாவர். எவர் எவ்வளவு புத்திமதி சொன்னா லும் தனது முடிவுப்படிதான் நடப்பர். இவர்களிடம் இருக்கும் உன்னதமான சக்தியைப் பயன்படுத்தி பலபேர் காரி யங்களை சாதித்துக் கொண்டு இவர் களைக் கழட்டி விட்டு விடுவதும் உண்டு. உழைப்பை உயர்வாகக் கருதும் இவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே கிடைக்கும். இருப்பினும் உணவுக்குப் பஞ்சமில்லை. மாயம், மந்திரம், தந்திரம் போன்றவற்றில் அதிக நம்பிக்கை வைத்திருப்பர். கடைசிக் காலங்களில் மகானுக்கு ஒப்ப இவர்கள் பேசப்படுவர். எந்தக் காரியத்தையும் அவசரப்படாமல் செய்து வெற்றியின் விளிம்புக்கு கொண்டு வந்து விட்டு அதன்மேல் சலிப்படைந்து வேண்டாம் என ஒதுக்கித்தள்ளி, நாள் களையும், பொருள்களையும் வீண்டிப்பதைத் தவிர்த்து ஒளிவிளக்காய் திகழ எந்த நிலையிலும் குழப்பிக் கொள்ளாமல் இருப்பது உயர்வுக்கு வழி தரும்.



இணையவள்

# பெண்ணின் குணாதிசயங்கள் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்

மானிடருக்கு எலும்பும் தசையும் எவ்வாறு தோற்றத்தைக் கொடுக்கின்றனவோ, அதுபோன்று குணாதிசயங்களும் அவர்களது ஆளுமைக்கும் நடத்தைக்கும் உருக்கொடுக்கும் முக்கிய அம்சங்களாக அமைகின்றன. குணாதிசயங்கள் எல்லோருக்கும் ஒரேமாதிரியானதாக அமைவதில்லை. மனிதருக்கு மனிதர் குணாதிசயங்கள் வேறுபடுமாயினும், ஒரு பரந்த மட்டத்தில் நோக்கும்போது பால் அடிப்படையில், அதாவது ஆண்களுக்கென ஒருவித குணாதிசயங்களும், பெண்களுக்கென வேறுவித குணாதிசயங்களும் எவ்வாறு தோற்றம் பெற்றன? இவை இயற்கையாக ஏற்பட்டவையா? அல்லது கற்பிக்கப்பட்டவையா? இந்தப் பாகுபாட்டால் ஏற்படும் விளைவுகள் என்ன? என்பவை எம்மை உறுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு சில வினாக்களாகும். இவற்றுக்கு விடை காண முயலுவது என்பது மானிட சமூக வளர்ச்சியையும், வரலாற்றையும், விஞ்ஞான பூர்வமாகவும், சித்தாந்த ரீதியாகவும் அலசி ஆராய்வதை மட்டுமன்றி, இவற்றைத் தற்கால நிதர்சனங்களுடன் உரைத்துப்பார்க்க வேண்டிய ஒரு தேவையையும் முன்வைக்கின்றது. மனித இயல் புகளும் குணாதிசயங்களும் மனிதச் செயற்பாடுகளுக்குத் தோற்றத்தைக் கொடுப்பனவாயினும், இவ்விரண்டினதும் மூலங்களும் ஒன்றல்ல. மனிதருக்கு இயற்கையாகவே சில இயல்புகள் காணப்படுகின்றன. சமூகவியலாளர் இவற்றை இயல்பூக்கம் என்பர். இவை அவரவர் உடற்கூற்றுத் தன்மையைப் பொறுத்தும், இவ்வுடற்கூறுகளுக்கும் சூழலுக்கும் இடையே ஏற்பட்டு வருகின்ற தாக்கங்களின் விளைவாகவும் ஏற்படக் கூடியவை. ஆனால் மனித குணாதிசயங்கள் என்பவை பெற்றுக் கொள்ளப்படுபவை, அல்லது கற்றுக் கொள்ளப்படுபவை. குறிப்பாக மனிதன் சமூகமயமாக்கப்படும்போது பெற்றுக் கொள்ளுகின்ற விழுமியங்களே, குணாதிசயங்களாக உருப்பெறுகின்றன. ஒரு சில குணாதிசயங்கள் பரம்பரை ரீதியாகவும் கடத்தப்படுவதுண்டு. இவற்றை இயல்புகளின் தொடர்ச்சி அல்லது பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடு என்கின்றோம். குணாதிசயங்களின் தொடர்ச்சியை பரம்பரைக் கூறு களின் தாக்கம் என்கின்றோம். எனவே இயல்புகளும் குணாதிசயங்களும் ஒன்று போலத் தோற்றினாலும் இரண்டும் ஒன்றல்ல. உதாரணமாகக் கூறின், பசி என்பது இயல்பூக்கம். அச்சம் என்பது குணம். பொதுவாக மனித இயல்புகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் 'ஆண், பெண் இருபாலாருக்கும் ஒன்றாகவே அமையினும், ஒருசில விடயங்களைப் பொறுத்தவரையில் வேறுபட்ட இயல்புகளும் உண்டு. மனித இயல்புகளின் மூலங்கள் அவரவர் உடற்கூற்றுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை என்ற வகையில் ஆண் பெண் உடற்கூற்றுத் தன்மையில் உள்ள வேறுபாடுகள் அவர்களில் மாறுபட்ட இயல்புகளை உருவாக்கவும் காரணமாக அமைந்து விடுகின்றன. அதாவது பெண் தனது உடற்கூற்றில் கருப்பையைக் கொண்டவளாக இருப்பதனால் தான், கருத்தரிக்கும் இயல்புடையவளாக இருக்கின்றாள். அதுபோல ஆணின் உடற்கூற்றுக்கு ஏற்ப அவனது இயல்புகளும் அமைகின்றன. எனவே ஆண் பெண் இயல்புகள் என்ற வேறுபாடு இயற்கையாகவே நிர்ணயிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

குணாதிசயங்களை எடுத்து நோக்குவோமாயின், ஆணுக்குரிய குணாதிசயங்கள் என்றும் பெண்ணுக்குரிய குணாதிசயங்கள் என்றும் பிரித்தறியப்படுகின்றன.


(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டலாம் வாங்க



# ஏழு வர்ணங்கள்



நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னர் உலகத்தில் பறவைகள் இருந்தன. ஆனால், அவை எல்லாம் ஒரே வண்ணத்தில் இருந்தன. இப்போது காணப்படுவது போல் சிவப்பு, பச்சை, மஞ்சள் வண்ணத்தில் இருக்கவில்லை. சொல்லி வைத்தது போல் சகல பறவைகளும் சாம்பல் நிறத்தில் இருந்தன. ஒரு வசந்த காலத்தில், பறவை அரசன் பறவைகளுக்கு அழைப்பு விடுத்தான். அந்த அழைப்பை ஏற்று எல்லாப் பறவைகளும் பறவை அரசன் முன்னால் கூடின. கூட்டமாகக் கூடிய பறவைகளில் சில கூவின. சில பறவைகள் அகவல் ஒலி எழுப்பின. சில கீச்சிட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான ஒலி எழுப்பி மகிழ்ந்தன. சில பறவைகள் சில மீற்றர் தூரம் வரை பறந்தன. சில தத்தி தத்தி நடந்தன. சில நொண்டிச் செல்வது போல் நகர்ந்தன. சில பெரிய மனிதர் போல் கம்பீரமாய் உலவின. அவைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. பறவை அரசன் அவர்கள் எல்லோரையும் ஒருமுறை தனது கண்களைச் சுழற்றிப் பார்த்தான். பின்னர் வானத்தை நோக்கி இறக்கையைத் திருப்பினான். உடனே எல்லா பறவை களும் வானத்தை அண்ணாந்து பார்த்தன. ஆகா! வானத்தில் ஒரு பெரிய வானவில் தோன்றியது. அதன் வண்ணங்களைப் பார்த்து பறவைகள் ஆச்சரியப்பட்டன. ஊதா, கரு நீலம், பச்சை, மஞ்சள், காவி, சிவப்பு என்று அவை சொல்லிச் சொல்லி மகிழ்ந்தன. எழில் மிகு ஏழு வண்ணங்களைப் பார்த்துச் சில பறவைகள் வாயடைத்துப் போய் நின்றன. ஏனென்றால் அப்படி ஓர் அழகான பெரிய வானவில்லை அவை அதுவரை பார்த்ததே இல்லை. உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் ஒரு நிறத்தைக் கொடுக்கப்போகிறேன். உங்களுக்கு எந்த நிறம் பிடிக்குமோ அதை நீங்கள் வானவில்லில் இருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதி வழங்கியது பறவைகளின் அரசன். அடுத்த வினாடி அங்கு ஒரு நெருக்கு வாரம் ஏற்பட்டது. ஒவ்வொரு பறவையும் தனக்கு பிடித்தமான நிறத்தைப் பறிக்க முயன்றன. எனவே, அவைகள் மற்றப் பறவைகளைத் தள்ளிவிட்டு முன் வந்தன. அதனால் ஏகப்பட்ட குளறுபடி உண்டாயிற்று.

ஒரு கிளி முன்னால் வந்தது. எனக்குப் பச்சை வர்ணமே பிடிக்கும் என்று கூறி அது பச்சை நிறத்தைப் பெற்றுக் கொண்டது. அதனால் கிளி செழிப்பான ஒரு மரத்தின் பெரிய இலை போலக் காணப்பட்டது. ஒரு குருவி ஓடி வந்தது. அது, எனக்கு மஞ்சள் நிறம்தான் பிடிக்கும் என்று கீச்சிட்டது. பின்னர் அது மஞ்சள் நிறத்தை அணிந்து கொண்டது. அதை எல்லோரும் மஞ்சள் குருவி என்று அழைத்தனர்.

எல்லோரையும் தள்ளிவிட்டபடி ஒரு குருவி முன்னால் வந்தது. அது எனக்குச் சிவப்பு வர்ணமே விருப்பமானது என்று கூறி அந்த நிறத்தைப் பெற்றுக் கொண்டது. அதை எல்லோரும் செங்குருவி என்று அழைத்தனர். இவ்வாறு அனைத்துப் பறவைகளும் தாங்கள் விரும்பிய நிறத்தைப் பெற்றுக் கொண்டன. ஆனால், ஒரே ஒரு சின்னஞ்சிறிய குருவி மட்டும் தனக்கு நிறம் கிடைக்காமல் நின்று கொண்டிருந்தது. அதனால் மற்றவர்களைத் தள்ளி விட்டு முன்னால் வர முடிய வில்லை. பறவை அரசன் அந்தக் குருவியைப் பார்த்தது. சின்னஞ்சிறு பறவையே! நீ ஏன் அமைதியாய் அங்கே நிற்கிறாய்? மற்றவர்களைப் போல் நீ ஏன் வர்ணம் கேட்கவில்லை? என்று கேட்டது. வரிசையில் எனது முறை வரும் என்று நான் காத்திருந்தேன் என்று சொன்னது அந்தச் சின்னஞ்சிறு சிறிய பறவை. எல்லா நிறங்களும் முடிந்துவிட்டதே! என்ன செய்வது? என்றது பறவை அரசன். அதைக் கேட்டதும், அந்தச் சின்னஞ்சிறு பறவை கண்ணீர் விட்டது. அப்படியானால் நான் எப்போதும் இந்தச் சாம்பல் நிறத்தில்தான் இருக்க வேண்டுமா? என்றது. சின்னஞ்சிறு பறவையே, நீ மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து மிகவும் பொறுமையைக் கடைப் பிடிக்கிறாய்! இப்படிப்பட்ட நீ எப்போதும் சாம்பல் வர்ணத்தில் இருத்தல்கூடாது என்று சொன்ன பறவை அரசன், எல்லாப் பறவைகளையும் திருப்பி அழைத்தது. ஒவ்வொரு பறவையிடம் இருந்தும், அது கொஞ்சம் வர்ணத்தை எடுத்து, அந்தச் சிறிய பறவைக்குக் கொடுத்தது. அதனால் அந்தச் சின்னஞ்சிறிய பறவை, இப்போது மிகவும் அழகாகத் தோற்றமளித்தது.

அதைப் பார்த்து மகிழ்ந்த பறவை அரசன், அதற்குப் பஞ்சவர்ணக் கிளி எனப் பெயர் வைத்தது. இப்போது எல்லா பறவைகளும் அந்தச் சிறிய பறவையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தன. ஏனென்றால், அதுதான் பறவைகளில் எல்லாம் மிக மிக அழகுடன் திகழ்ந்தது.

## பொது அறிவுத் தகவல்கள்

1. ஈசலின் வாழ்க்கை ஒருநாள் மட்டுமே.
2. பறவைகள் சரணாலயம் உள்ள இடம் – இரங்கன் திட்டு, கர்நாடகாவில்
3. அக்னி, பிருத்வி ஏவுகணைகளை வடிவமைத்தவர் –ஏ.பி.ஜே. அப்துல்கலாம்
4. இந்தியாவில் உள்ள இளஞ்சிவப்பு நகரம் – ஜெய்ப்பூர்
5. புயலடிக்கும் நகரம் என்று அழைக்கப்படுவது – சிக்காக்கோ
6. முதன் முதலில் வைரசைக் கண்டறிந்தவர் – பெய்ஜரிங்க்.
7. பஞ்சாபில் நடக்கும் ஒருவகை நடனம் – பாங்கரா
8. தடுப்பூசி முறையை முதலில் கண்டு பிடித்தவர் – எட்வேர்ட் ஜென்னர்

# உங்களுடைய இலக்கை மிகவும் எளிதாக அடைய....



இலக்கு இல்லாத மனிதனை அரை மனிதன் என்று சான்றோர்கள் கூறுவார்கள். எம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி பயணப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

நாம் பலமுறை தோல்விகளைத் தழுவக்கூடும். காரணம் என்ன? நாம் எம்முடைய இலக்கை நோக்கிச் செல்வதில்லை. அடுத்தவரின் வழிகாட்டுதல் அல்லது தூண்டுதலின்படி செல்கிறோம். பெரும்பாலானோர் தங்களு டைய இலக்கை நிர்ணயிப்பதில்லை. தம்மைப் பற்றிய எண்ணமும், தன்னம்பிக்கைக் குறைவுமே அதற்குக் காரணங்கள். இவற்றைப் போக்கு வதற்கு சில வழிகள்.

**உங்கள் உள்ளாற்றலை அறியுங்கள்**

தன்னம்பிக்கையை வளருங்கள். மற்றவரிடம் இல்லாத தனித்திறமை உங்களிடம் உண்டு. அந்த திறமையைக் கண்டறிந்து சிறப்பாகச் செயற்படுங்கள்.

**உங்கள் வாழ்க்கையை சிறப்பாக்குங்கள்**

உங்களுடைய செயற்றிறனை அறியுங்கள். அதன் மூலம் செய்யும் காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் பழக்கத்தை கொண்டு வாருங்கள்.

**வருத்தம் கொள்ளாதீர்கள்**

உங்களுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து வருத்தம் கொள்ளாதீர்கள்.

**கனவு காணுங்கள்**

எத்தகைய முயற்சிகள் மேற்கொண்டால் உங்களுடைய இலக்கை அடையலாம் என்று கனவு காணுங்கள்.

**திட்டமிடுங்கள்**

மேற்கொள்ளும் செயலில் வெற்றி காணத் தேவையான திட்டத்தை தீட்டுங்கள். அதை நடை முறைப்படுத்துங்கள்.

**உங்களை நம்புங்கள்**

உங்கள் மீது அதிக நம்பிக்கை வையுங்கள். அதன் மூலமாகத் தான் தன்னம்பிக்கையும், மனதைரியமும் பெருகும்.

**முயற்சியை கைவிடாதீர்கள்**

ஒரு செயலைச் செய்யும் போது தோல்வி ஏற்பட்டால் அதனைக் கைவிடாமல் தொடர்ந்து போராடுங்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும். இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால் உங்களுடைய இலக்கை மிகவும் எளிதாக அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரங்களைத் தொட சிரமங்களை எதிர்கொள்ள வேண்டும்

நேற்று சாத்தியமற்றதாய் இருந்தது இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் கண்டு வருகின்றோம் என்றார் காந்தி. வேதனை யைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி அடைவான். சிரமங்களைத் தாங்கிக் கொள்பவனே சிகரங்களைத் தொடுவான். ஒவ்வொரு சாதனையாளரின் வெற்றிக்குப் பின்னாலும் பல துன்பங்கள், வேதனைகள் சொல்ல முடியாதளவுக்கு காணப்படுகின்றன. எதற்கு எடுத்தாலும் மற்றவர்களைக் குறை கூறிக்கொண்டு இருப்பவனால், ஒருபோதும் முன்னேற முடியாது. துன்பங்கள் என்றுமே நிரந்தரமானவை அல்ல. எனவே எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் அதை எதிர்கொண்டு மீண்டும் நிமிர்ந்து எழுவோம். இதற்கு உதாரணமாக கீழே சிறுகதையொன்று தரப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் அரசனொருவன் சிறப்பான ஆட்சி நடத்தி வந்தான். அவனது ஆட்சியைப் பார்த்துப் பொறாமை கொண்ட எதிரிகள், அந்த நாட்டின் மீது போர் தொடுத்தனர். அவர்களை வெல்ல முடியாது எனப் பயந்த அரசன் ஒரு கற்குகையில் ஒளிந்து இருந்தான். அந்தக் குகையில் சிலந்தி ஒன்று தனது வலையைப் பின்னிக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருந்தான்.



வலையானது அறுந்து அறுந்து வீழ்ந்த போதும் அந்தச் சிலந்தி மனம் தளராமல் முயற்சிசெய்து கடைசியில் வலையை முழுமையாகக் கட்டி முடித்தது. இந்த ஐந்தறிவு கொண்ட சிலந்தி கூட பல முறை முயற்சி செய்த பின்னரே வெற்றி பெற்றது. ஆனால் நாடாளும் அரசனாகிய நானே ஒரு முறை கூட முயற்சி செய்யாமல் ஒளிந்து கொண்டிருக்கிறேனே என வெட்கப்பட்டான். பின்னர் துணிவுடன் போர் செய்து, எதிரிகளை அழித்து வெற்றி பெற்றான். எனவே நாம் முயற்சியுடன் ஓர் இலக்கை நோக்கிச் சரியான பாதையில் பயணித்தால் நிச்சயம் வெற்றி பெறுவோம். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டுவோம்.

ப.அனோஜா,
வேம்படி மகளிர் கல்லூரி.

## வீணை இசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப் . 10

இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் இடம்பெறும் அருள்நெறி விழாவின் சிறப்பு நிகழ்வாக என்.எஸ்.வாகீசனின் வீணை இசைநிகழ்ச்சி இன்று மாலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வீணை இசை நிகழ்வின் அணி செய் கலைஞர்களாக மிருதங்கம் கே.பிரணவாகரன், தபேலா வி.பிரபாகர சர்மா, கடம் தே.வசந்த ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற–ரி–2)

## மஹா கும்பாபிசேகம்

மாங்குளம், செப்.10

வடமராட்சி வல்வெட்டித்துறை விநாயகப் பெருமான் திருக்கோயிலின் மஹா கும்பாபிசேகம் இன்று வியாழக்கிழமை காலை 6.40 மணிமுதல் 7.55 மணி வரை நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 15தினங்கள் மண்ட லாபிசேகமும் நடைபெறவுள்ளது. (ற–422)

## ஆக்கங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள்

தென்மராட்சி, செப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு தொடர்பான ஆக்கத் திறன் கட்டுரைப் போட்டிக்குரிய ஆக்கங்கள் மாவட்ட மட்டப் போட்டிக்கு அனுப்பப்படவுள்ளதால் இதுவரை ஆக்கங்களைச் சமர்ப்பிக்காத பாடசாலைகள் அவற்றை உடனடியாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–9)

## உர மானியத்துக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

தென்மராட்சி, செப்.10

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான மானிய உர வகைகள் தொடர்பான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவை மேற்கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் பொ.சதானந்தன் அறிவித்துள்ளார். (ற–9)

## வாழ்நாள் பேராசிரியர் குணரட்ணம் காலமானார்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணபல்கலைக்கழகமுன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான கந்தையா குணரட்ணம் நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடாதிபதி, பௌதீக வியல் துறை மற்றும் கணனி விஞ்ஞானத் துறை ஸ்தாபகத் தலைவருமாக பேராசிரியர் குணரட்ணம் சேவையாற்றியதுடன், 1975 இல் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ். வளாக பௌதீகத் துறையில் முதலாவது பேராசிரியரும் பௌதீகத் துறைத் தலைவரும் ஆவார். (வ)

## மரண அறிவித்தல்

### செல்லையா திருநாவுக்கரசு (பத்தர்)



கரம்பைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும், இல.36, சேர் பொன் இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு (பத்தர்) நேற்று (09.09.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 36, சேர் பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி.
075 6367587

(62938) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு கண்மணி



தோற்றம் 16.09.1941 மறைவு 09.09.2015

சாயுடை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு கண்மணி நேற்று 09.09.2015 அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - குஞ்சரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தையா முருகேசுவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை) அன்பு மனைவியும் புவனேஸ்வரி (யா/கொல்லங்கலட்டி வித்தியாசாலை), சிவநாதன், சிவ ராசா(இ.போ.ச. கோண்டாவில்), சிவசேகரம் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சிவகாந்தன் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தி யோகத்தர்), சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்டச் செயலகம் முல்லைத்தீவு), சிவ அன்பு ஆகியோரின் அன்புத் தாயாரும் சேகரர், செந்தில் வாணி (யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), அகிலாண்டேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கலையரசி, கிருஸ்ணசாந்தி (கிராம சேவையாளர்), கனேசியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவனுஜா, சந்தோஷிகா, லக்ஷசனா, ரக்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் முருகையா, காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, நடராசா, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னப்பிள்ளை , சரஸ்வதி, இளையதம்பி, தெய்வராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2015) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
சாயுடை, மாவிட்டபுரம். 0775940268

## மரண அறிவித்தல்

### சின்னையா கந்தசாமி (சாமி)

(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஓய்வு பெற்ற ஊழியர்)



பிறப்பு 03.10.1941 இறப்பு 09.09.2015

பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகத்தை (கச்சநாவலடி) பிறப்பிடமாகவும் பேக்கரி வீதி, புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி 09.09.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலநாயகியின் அன்புக் கணவரும் சந்திரிக்கா (லண்டன்), தர்சிகா, தாரகா, ஆகியோரின் அன்புத் தந்தையும் நரேந்திரநாதன் (லண்டன்), சபேஸ்கண்ணா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, இராசரத் தினம், சிவஞ்ஞானம்மா, குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கார்த்திகன் (லண்டன்), அகஷ்ஜா (லண்டன்), அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2015) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேக்கரி வீதி, புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல் : குடும்பத்தினர்.
0776510310

## மரண அறிவித்தல்

### மரியான்தம்பி அல்பேட்



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் தம்பி அல்பேட் நேற்று (09.09.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியான் தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை பியாட்றிஸின் தம்பதியரின் அன்பு மருமகனும் அல்பேட் பற்றீசியாவின் பாசமிகு கணவரும் பெல்சி, தேவம், நேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிங்கிலி, மாலினி, வேஜினி, சாந்தி, சறோஜினி, பத்மினி ஆகியோரின் மைத்துனரும், லெஸ்லி கிறிஸ்ரி (ஜேர்மனி), நளாயினி (லண்டன்), ஜேசுதாசன், அன்ரனி நிக்ஷன் (சோவலங்கா யாழ்ப்பாணம்) ஆகி யோரின் அன்புத் தந்தையாரும் கல்ப்பனா (ஜேர்மனி), றெஜிலோல்ட் (லண்டன்), மேரி அமறிற்றா (கணக்காளர் பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்கம் மன்னார்), கலாநிதி (ஆசிரியர் கிளி/மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனிக்கா, றெஜித்தா, றேமியல், வனிசா, லினிசியா, கனிசியா, கவிரினா, சாம், நிதுசன், அபிலா, அபிஷான் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.09.2015) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

113,புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0212221174

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை அன்னபூரணம்



சாயுடை மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அன்னபூரணம் நேற்று 09.09.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், கிருஸ்ணமூர்த்தி, கிருஸ்ணகுமாரி, கிருஸ்ணதாஸன் (கிட்டி - வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாரூபி, தர்மராசா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜானன், ரிஷிகேசன், தனஞ்சயன், தரணிதரன், ரிஸ்வினி, லஜிதரன், ஸ்ரீசிவானி, தீப்சியானி, கபிசியான் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராசரட்ணம், செல்வநாயகம் மற்றும் பாலசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் மாவிட்டபுரம் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம்

[ Bsc.(Cey.), Ph.D (Lond.), FRAS (Lond.), F.Inst.P. (Lond.), C.Phy. (Lond.), முன்னாள் மூன்றாவது துணை வேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் (1994-04.01 - 1996.06.30)]



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் (முன்னாள் உபவேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வாழ்நாள் இயற்பியல் பேராசிரியர்) நேற்று (09.09.2015) புதன்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ''ஓவசியர்'' கந்தையா-யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதியின் அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி தயாபரன், குமுதினி, வைத்திய கலாநிதி ஜயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி பிரியதர்சினி, பாலகுமார், கணேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், கிருஷ்னி, செந்தூரன், சக்தியாள் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஆறுமுகம், இராசம்மா, இராசரட்ணம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசராசா, கமலாதேவி, மகானந்தன், வைத்திய கலாநிதி மங்களேஸ்வரி, பேராசிரியர் குகனேசராசா, புனிதவதி, ஞானதிலகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
T.P: 0777 353 740

தகவல்:
கந்தையா கணேசராசா

(62935) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னம்மா சிவசுப்பிரமணியம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், இராணி வாசகம், துணைவிச்சந்தி சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சிவசுப்பிரமணியம் நேற்று (09.09.2015) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் மாணிக்க தியாகராசா (கனடா), சறோஜினி தேவி, நித்தியானந்த ராசா (லண்டன்), நாகராசா, கணேசராசா (ஜேர்மனி), சுவாமிநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் செல்வராணி (கனடா), காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் தங்கராணி (லண்டன்), சாந்தா, கணேசராணி (ஜேர்மனி), வதனராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தனலச்சுமி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, சுந்தரலிங்கம் மற்றும் பொன்மணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவசுதன் (கனடா) Dr.வீரசுதன், சயந்தி (கனடா), சஞ்சீவன் (கனடா), கணாதீபன் (கனடா), மாதவராஜ் (லண்டன்), மகிழினி (லண்டன்), டிலக்ஷன், வினாக்ஷன், கஜன் (ஜேர்மனி), லாசகன் (மலேசியா), பாமினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனிக்கா, அபீஷ், அக்ஷயா, அருண், சூரியா, சுவேத்தா, ஆதித்தன், அரவிந், கிரிசாந், அபிசாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2015) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"இராணி வாசகம்"
துணைவிச்சந்தி, சங்கரத்தை.

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை வின்சன் கெனடி



(முன்னாள் நகரசபைத் தலைவர், பருத்தித்துறை)

பருத்துத்துறை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை மின்சார நிலைய வீதியை வதி விடமாக கொண்டவருமாகிய அந்தோனிப்பிள்ளை வின்சன் கெனடி (முன்னாள் நகரசபைத்தலைவர், பருத்தித்துறை) நேற்று (09.09.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் நவமலரின் அன்புக் கணவரும், சலோமி, றெபேக்கா, டானியேல் ஆகியோரின் அன்புத் தந்தையும், அந்தோனிப்பிள்ளை (சல்லி அப்பா)-குணவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், அதிரியாம்பிள்ளை-மாகிறேற் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி அன்னீஸ், வின்சன் சேர்ச்சில், மேரிகொலின், அமரர் வின்சன் சாள்ஸ், வின்சன் ஜோர்ஜ், வின்சன் றொபின், மேரியக்குலின், மேரி கொறிற்றி, வின்சன் றொபேட், வின்சன் தயான், வின்சன் விஜயராசா, அமரர் வின்சன் அன்ரனிதாஸ், சதா சகாயநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2015) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் பருத்தித்துறை, புனித அந்தோனியார் ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு, கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 919 8299

தகவல்: குடும்பத்தினர் சார்பாக
சி.ஜோ. கோன்விக்ரர் (குணம்)
மாமனார்.

(C/18669) (10.17)

# மரண அறிவித்தல்

## நாகராசா மலர் (ராணி)



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவு, 11 ஆம் வட்டாரம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா மலர் 09.09.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பசுபதி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நாகராசாவின் அன்பு மனைவியும் பிரதாஸ், பிரதீஸ், துஷா(தீபா), உஷா (ஜீவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயப்பிரியா, பத்மசாந்தன், ஜீவதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், சதுஷன், கேதுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

B.S.லேன், மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: நாகராசா (கணவர்)
077 572 9206

# மரண அறிவித்தல்



## திருமதி றீற்றா பஞ்சநாதன் (வவி)
(சந்தி ஒழுங்கை சங்கானை)

சங்கானை சந்தி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றீற்றா பஞ்சநாதன் 08.09.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - ஞானம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - மீனாட்சி (கரவெட்டி) தம்பதியினரின் மருமகளும் தம்பிஐயா பஞ்சநாதனின் (பஞ்சன் ஆட்ஸ் மற்றும் சங்கானை மத்திய சபை உறுப்பினர்) அன்பு மனைவியும் ஜெயரூபன், ஜெயகாந்தன் (சாரதி சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்), ஜெயப்பிரகாஸ் (பிரான்ஸ்), ஜெயந்தன் (சங்கானை ப.நோ.கூ. சங்க பணிப்பாளர் சபை உறுப்பினரும் மற்றும் முன்னாள் கிளை முகாமையாளரும் மற்றும் கராத்தே மாஸ்ரர்), ஜெனிற்றா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சறோசா, துரைசிங்கம் மற்றும் இரத்தினசிங்கம் (சுவீஸ்), ஜெயசிங்கம், ஜெயஸ்ரின் திறேசா (சுவீஸ்) காலஞ்சென்ற குணபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் றாஜினி, மேரிசோபனா, தர்மினி, ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் விபுதராசா, சுசிலாதேவி காலஞ்சென்ற சிவபுண்ணியம் மற்றும் பஞ்சரத்தினம், பஞ்சலிங்கம், மீனாகுமாரி (ஜேர்மன்), வதனகுமாரி (ஹொலண்ட்), குமாரசிங்கம் J.P (செயலாளர், வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்), அமிர்தலிங்கம் (சுவீஸ்), மரிஸ்ரெலா, ஜெசிந்தா (சுவீஸ்), மனோன்மணி (சுவீஸ்) ஆகியோரின் மைத்துனியும், அக்ஷயா (கொக்குவில் இந்துக் கல்லூரி), அஸ்வின் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), வஸ்மிதா, டிபானி, டிலக்ஸ்சன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைக்காக இன்று (10.09.2015) வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 2.00 மணிக்கு சங்கானை புனித பிரான்சிஸ் டீ சலேசியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக சங்கானை கரைச்சி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தி ஒழுங்கை,
சங்கானை.

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 06 1920



இறப்பு 09 09 2015

## திருமதி மரியம்மா பிலிப்பையா (செல்லம்மா ஆத்தை)

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் மடுமாதா கோயிலடி சற்கோட்டை, அல்வாய் வடமேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா பிலிப்பையா நேற்று 09.09.2015 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிலிப்பையாவின் பாசமிகு மனைவியும காலஞ்சென்ற மரியநாயகி, சூசைப்பிள்ளை, மற்றும் பிரான்சிஸ் சேவியர் (மெக்கானிக் சற்கோட்டை), காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா (பூமணி) மற்றும் அந்தோனிக்கம்மா (வண்டு - நீர்கொழும்பு), யேசுநாயகி (இருதயம்), யோசேப் அருள்தாஸ் (மாஸ்ரர், எமில்ரன் மோட்டார் வேக்ஸ்), இராசமணி (மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, அரியமலர், மற்றும் ஜேசுதாசன் (வெற்றிலைக்கேணி), மரியமலர் (அன்னரத்தினம் - பிரான்ஸ்), செபமாலையம்மா (பவளம்), யோசப் பீரிஸ் (மெக்கானிக் நீர்கொழும்பு), அந்தோனி எனிஸ்ரன் (மெக்கானிக் சற்கோட்டை), நவசிவாயம் (மருதங்கேணி), றெஜினாசேலி (றஞ்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.09.2015) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் சற்கோட்டை புனித சவேரியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் பழைய வேதக்கோயிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சற்கோட்டை,
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

தகவல் : குடும்பத்தினர்.
0777145714,0776966115,
0774113879

## பல்கலையில் மாணவரிடையே முரண்பாடு

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களிடையே நேற்றுப்பகல் முறுகல் ஏற்பட்டது என்றும் எனினும் அது பின்னர் தீர்த்து வைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிரேஷ்ட மாணவர்களுக்கும் கனிஷ்ட மாணவர்களுக்கும் இடையே உடை அணிதலில்' ஏற்பட்ட பிரச்சினையே முரண்பாட்டுக்குக் காரணம் என்று மாணவ ஆலோசகர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. முரண்பாட்டால் சிலர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளபோதும் அது தொடர்பில் எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

2 ஆம் வருட மாணவர்கள் அணியும் உடையை மாற்றுமாறு 3 ஆம் வருட மாணவர்கள் கூறியதாகவும் அதனைத் தொடர்ந்து முறுகல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்துப் பல்கலைக்கழக நிர்வாகம் தலையிட்டுக் குழப்ப நிலையைக் கட்டுப்படுத்தியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில், தமிழ் மக்களின் படுகொலைக்கு சர்வதேசவிசாரணை வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக கையொப்பம் வாங்கும் நடவடிக்கையும் நேற்று இடம் பெற்றது. (ற-4,86)

## மண்டல மாநாடு

இயேசுவைப்போல் நடந்து கொள்ளுங்கள் என்ற தொனிப்பொருளில் மூன்று நாள் மண்டல மாநாடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் தினமும்நாளை முதல்காலை 9.20 முதல் பி.ப 4.50 வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 11.45 இற்கு ஞானம் என்னும் பொக்கிஷம் அவருக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்னும் பேச்சும், இரண்டாம் நாள் சனிக்கிழமை பி.ப 3.20 மணிக்கு இயேசுவையே எஜமானராகவும், கிறிஸ்துவாகவும் கடவுள் நியமித்தார் என்ற நாடகமும்மூன்றாம்நாள் பேச்சும், நாடகத்தின் இரண்டாம் பாகமும் நடைபெறவுள்ளன என்று யெகோவாவின் சாட்சிகள் செய்திச் சேவையாளர் ராஜகுணாநந்தன் தெரிவித்துள்ளார். (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணை வித்தகி ரேவதி கிருஷ்ணா நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை

யாழ்ப்பாணம், செப். 10

இந்தியாவின் பிரபல வீணை இசைக் கலைஞர் வீணை வித்தகி ஸ்ரீமதி ரேவதி கிருஷ்ணா யாழ். இந்திய துணைத் தூதுவர் திரு.எ.நடராஜனின் அழைப்பை ஏற்று நேற்று இலங்கை வந்துள்ளார். இவரது வீணா கான வாத்திய பிருந்தா நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியிலும், நாளை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணிக்கு இவரது வீணை இசை பற்றிய பயிற்சி பட்டறையும், மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர் திருவிழாவை முன்னிட்டு வீணாகான வாத்திய பிருந்தா நிகழ்வு நல்லூர் சங்கிலியன் தோப்பிலும் நடைபெறவிருக்கின்றன.

இந் நிகழ்வுகளில் இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணசபை அமைச்சர் த.குருகுலராஜாவும், நாளை காலை நடைபெறும் நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு.இரவீந்திரனும் , அன்று மாலை இடம்பெறும் நிகழ்வில் வடமாகாணசபை ஆளுநர் பளிக்கக்காரவும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்வை யாழ் இந்திய துணைத் தூதரகமும் இந்திய புதுடில்லி கலாசார உறவுக்கான பேராயமும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள.

சென்னையை பிறப்பிடமாக கொண்ட பிரபல வீணை வித்தகி ரேவதி மிகுந்த பெருமைக்குரிய வீணை இசைக் கலைஞர் ஆவார். உலகம் முழுவதும் பல இசை கச்சேரிகளை நடாத்தியுள்ள இவர் பல நாடுகளில் இசை விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவரது பல இசை அல்பங்களை மறைந்த டி.எம்.சௌந்தரராஜன் மற்றும் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் போன்றோர் வெளியிட் டுள்ளனர்.

தனது ஆறாவது வயதில் வாய்ப்பாட்டையும் பன்னிரண்டாவது வயதில் வீணையை முறைப்படி கற்கத் தொடங்கிய ரேவதி ஜப்பானிய அரசு நடாத்தும் ஆசிய கலாசார பரிவர்த்தனை விழாவில் கலந்து கொள்ளுமாறு ஜப்பானிய அரசு விசேட அழைப்பை விடுக்கும் அளவுக்கு தமது இசைத் திறமையை உலகறியச் செய்தவர். (த)

# தெய்வீக இசைப்பேருரை

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் கந்தபுராண தெய்வீகத் தொடரிசை பேருரையில் இருபத்து மூன்றாம் நாளான இன்று 'சிங்கமகாசூரன்வதம்' இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் பி.ப 6.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானக தாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்தியசகிதம் இசைப்பேருரை ஆற்றவுள்ளார். (ற-10)


**கடை வாடகைக்கு உண்டு**

சுன்னாகம் புகையிரதநிலையம், வைரவர் கோயில் முன்பாக சகல அடிப்படை வசதிகளும் உடைய நிலம் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட (நீளம் - 75 அடி, அகலம் - 35 அடி) கடை உடன் வாடகைக்கு உண்டு. உணவகம், கிளினிக், அலுவலகம்,கடை போன்றவற்றிற்கு உகந்தது.

தொடர்பு : 076 704 3186



**தேவை**

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து அண்மையாக ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பிரதான வீதிகளுக்கு அருகில் அமைந்திருக்கக்கூடிய வியாபாரம் நடத்தக்கூடிய வீடு/கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 071 636 2362


**நினைவு கூருகின்றோம்**

எமது கல்லூரியில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றிய ஆசிரியை செல்வி. ஆனந்தராசா பிரியதர்ஷனி அவர்களின் தந்தையார்

**அம்பலவாணர் ஆனந்தராசா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/வேலணை மத்திய கல்லூரி,
வேலணை.


**VACANCY**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களில் பிராந்திய காரியாலயங்களைக் கொண்ட கணினி பயிற்சி நிலையம் ஒன்றுக்கு கணினி பயிற்றுவிப்பாளர் மற்றும் வரவேற்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- விண்ணப்பதாரிகள் 20-25 வயதுக்குட்பட்டவர்களாகவும், கணினி பாவனையில் தேர்ச்சிபெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- முன்னனுபவமுள்ளவர்களுக்கும், பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
- அந்தந்த பிராந்திய விண்ணப்பதாரிகளே கருத்தி லெடுக்கப்படுவர்.

மேற்படி தகுதியுடையவர்கள் தங்களது சுயவிவரக் கோவையை 15.09.2015 இற்கு முன்னதாக jaffnavacancy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

விளம்பர இலக்கம் 5076
C/o:உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/18673)(10.17)



**வீடு வாடகைக்கு**

நெல்லியடி பிரதான வீதிக்கு அருகில் மகாத்மா வீதியில் சகல வசதிகளுடன் விசாலமான வாகனத் தரிப்பிடத்துடன் வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு:
077 704 9364


# அருள்நெறி விழாவின் 23ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.10

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின் 23ஆம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பி.ப 3 மணி முதல் பி.ப 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமை வகிக்கவுள்ளார். பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் கைலாசநாதர் வேதசிவாகம அறநெறிப் பாடசாலை மாணவி சி.சுருதியின் பேச்சு, சிவயோகர் அறநெறிப் பாடசாலை மாணவன் கு.சுபாங்கனின் பேச்சு, கணேசா அறநெறிப் பாடசாலை மாணவன் மா.டிலான் கிருஸ்ணாவின் பேச்சு, மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழு நடனம், கு.ஜானுசா, அ.நர்மிலா, இ.கேதிகா ஆகியோரின் தனிநடனம், இளந்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலையினரின் வில்லிசை, காரைக்காடு கிழவன்காடு அறநெறிப்பாடசாலையினரின் நாடகம், அமுதசுரபி அறநெறிப்பாடசாலை மாணவி அ.அபிநயாவின் பேச்சு, உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாணசுந்தரர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பண்ணிசை போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற-10)




# நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

ஆதன உரிமையாளர் பெயர்: வைரமுத்து கதிரன் உ...கோ பொன்னர் பொன்னம்மா வட்டாரம் 14, வீதி : கோணாவளை லேன், ஆதன இலக்கம் : 11

மேற்படி விவரத்தோடு ஆதனம் காணப்பட்ட போது அதே ஆதனத்தை முத்துராசா ஜெயபாலா பெண் ஜெயந்தினி என்பவர் ஆதனப் பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனங்களை பரிசீலனை செய்ததன் பிரகாரம் ஆரம்ப உறுதியை கதிரன் கனகராசா கைம் பெண் பவளராணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.என்.விஸ்வலிங்கம் முகதாவில் 08.05.2010 இல் 3919ஆம் இலக்கம் உறுதியின் பிரகாரம் வெளிப்படுத்தல் உறுதியூடாக உரிமைகோரி பெயர்மாற்று விண்ணப்பதாரிக்கு பிரசித்த நொத்தாரிசு செ.லெனின்குமார் முகதாவில் 01.07.2011 ஆம் திகதிய 07 ஆம் இலக்க உறுதி மூலம் சீதன உறுதியாக வந்தடைந்துள்ளது.

எனவே குறித்த ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால், இந்த ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகைப் பிரசுரத்திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும், யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு குறித்த இலக்கமுடைய ஆவணத்தை பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும், இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்புக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C/18667)
(10.17)


நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூரில்

Mangala

**Mega Sale**

20% ➡ 50% வரை அமோக விலைக் குறைப்பு

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

தெரிவுகளுக்கு முந்துங்கள்

மங்களா காட்சியறை

நல்லூர் சந்தியா மல்ரி கோட்யாட் முன்னால், நல்லூர்.



After A/Levels

மிகவும் பிரபல்யம் வாய்ந்த இரட்டை டிப்ளோமாக்களை நான்கே மாதங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்

Diploma in Information Technology
Duration : 4 Months
Text Book Free

IT & ENGLISH

Diploma in English
Duration : 4 Months
Text Book Free

assured by PEARSON

சேமிப்பு Rs. 16,375
25% off 50% off

SMS your Details to 077 309 9 308

வலுவான இரட்டைச் சான்றிதழ்
ESOFT + Pearson (UK)

எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள்

Diploma in Business Management
Duration : 4 Months
Free Text Books

Diploma in Software Engineering
Duration : 6 Months
Free Text Books

Diploma in Web Engineering
Duration : 6 Months
Free Text Books

Diploma in Hardware & Networking
Duration : 4 Months
Free Text Books

Diploma in Computerized Accounting
Duration : 5 Months
Free Text Books

Diploma in Business English
Duration : 6 Months
Free Text Books

Diploma in Hospitality Management
Duration : 4 Months
Free Text Books

12.09.2015 | 14.09.2015
New Batches

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சுகானுபவம் நிகழ்வு இன்று ஆரம்பம்

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம், வடமாகாணக்கல்வி அமைச்சு, வடமாகாண கலாசார திணைக்களம் மற்றும் கலாசார உறவுகளுக்கான இந்தியச் சபை என்பன இணைந்து நடத்தும் வீணை இசை தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வும் ஆற்றுகை நிகழ்வும் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

தெய்வீக சுகானுபவம் நிகழ்வுகளின் ஆரம்ப நாள் நிகழ்வு இன்று மாலை 5மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும். இந்த நிகழ்வில் திருமதி ரேவதி கிருஸ்ணா வீணை இசை வழங்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தகுருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம்நாள்நிகழ்வுகளின்காலை அமர்வு வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமதி ரேவதி கிருஸ்ணா வீணை தொடர்பான கலந்துரையாடலை நிகழ்த்தவுள்ளதுடன் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகள் யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் தோப்பில் மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை நிகழ்வில், ஆரம்ப நிகழ்வாக நடனவாரிதி பத்மினி செல்வேந்திரகுமாரின் தயாரிப்பில் உரும்பிராய் கலைக்கோவில் ஆடற்கலையகம் வழங்கும் நாட்டியாஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வின் அணி செய் கலைஞர்களாக மிருதங்கம் எஸ்.துரைராஜா, நட்டுவாங்கம் எஸ்.பத்மினி, வாய்ப்பாட்டு ரி.றொபேட், வயலின் எ.ஜெயராமன் மற்றும் செண்டை அ.செல்வரட்ணம் ஆகியோர் இணைந்திருப்பர்.

அதைத் தொடர்ந்து திருமதி ரேவதி கிருஸ்ணாவின் வீணை இசை நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வின் அணி செய் கலைஞர்களாக கீபோர்ட் எ.நவீன்யூட், தபேலா ஜெ.பார்த்த சாரதி மற்றும் ரிதம்பாட் ஜி.சண்முக சுந்தரம் ஆகியோர் இணைந்திருப்பர்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பளிக்கக்காரகலந்துகொள்ளவுள்ளார்.(ற–ரி2)

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றின் செயல்முறைக்கே பரிந்துரைக்கவும்

## மனித உரிமை ஆணையாளரிடம் 11 தமிழர் அமைப்புக்கள் கோரிக்கை

லண்டன், செப். 10

இலங்கை விவகாரத்தில் உள்நாட்டு அல்லது கலப்பு நீதித்துறைச் செயல் முறையை நிராகரித்து, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்போ அல்லது ஒரு சர்வதேசப் பொறுப்புடைமைச் செயல்முறைக்கோ பரிந்துரைக்குமாறு 11 தமிழர் அமைப்புக்கள் ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

பிரித்தானிய தமிழ் கன்சர்வேடிவ்கள், பிரித்தானிய தமிழர் ஒன்றியம், இலங்கைத் தமிழ்ச் சங்கம். சர்வதேச ஈழத்தமிழர் பேரவை பசுமைத் தாயகம் அறக்கட்டளை, இலங்கையில் சமத்துவத்துக்கும் நிவாரணத்திற்குமான மக்கள், தென்பகுதி பண்பலை வானொலி , சுவீடன் தமிழர் மன்றம் , அனைத்துலக விவகாரங்களுக்கான அமைச்சகம், நாடு கடந்த தமிழீழ அரசு, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தமிழர் அரசியல் நடவடிக்கைப் பேரவை, உலகத் தமிழர் அமைப்பு ஆகிய புலம்பெயர் தமிழர் அமைப்புக்களே கூட்டாக இக் கோரிக்கையினை ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

(வ)

## பரவிப்பாஞ்சான்

இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இந்தப் பிரதேச மீள்குடியேற்றத் திகதி விரை வில் அறிவிக்கப்படும்– என்றார். (த–5)

## ஜெனிவா

கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாண சபையில் கடந்த பெப்ரவரி மாதம் நிறைவேற்றப்பட்ட, இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என்ற தீர்மானம் மற்றும் கடந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட, சர்வதேச விசாரணை ஆயம் கோரும் தீர்மானம் ஆகியவற்றின் பிரதிகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கையெழுத்திட்டு, ஜெனிவா செல்லும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் கையளித்துள்ளார்.

வடக்கு முதலமைச்சரின் மேற்படி தீர்மானப் பிரதிகளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 47 நாடுகளுக்கும் எடுத்துச் சென்று வழங்கவுள்ளதாக, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட மேற்படி இரண்டு தீர்மானங்களும், ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த–5–101)

## தலைமன்னார்

முன்மொழியப்பட்டுள்ள திட்டம் குறித்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பொருளாதார வல்லுநர்களுடன் கலந்துரையாடியதாக இந்தியப் பிரதமர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி இந்தியாவுக்கு தனது முதல் அதிகாரபூர்வப் பயணத்தை மேற்கொள்ளவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், வரும் 15ஆம் திகதி நடத்தவுள்ள பேச்சுக்களின் போதும், இந்த தரைவழிப்பாதைத் திட்டம் குறித்து இந்தியப் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டம் தொடர்பாக இது வரை இந்தியா அதிகாரபூர்வத் தகவல் எதையும் வழங்கவில்லை என்று முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–வ)

## மலிக், பைஸர்,

பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(த–வ–10)

## 5 ஆண்டுகள்

சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து தேசிய அரசுக்கு அழைப்பு விடுத்தன. இதற்கமைய நீங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதோடு, அதற்கு நான் தலை வணங்குகின்றேன்.

ஆனால் எம்மை நோக்கிக் கல்வீச்சுத் தாக்குதல்களும் விமர்சனங்களும் இடம்பெறுகின்றன. நானும் பிரதமரும் அரசியல் அனுபவமற்றவர்கள் என்றும், சர்வதேசத்துக்கு அடிபணிந்து ஏகாதிபத்தியவாதியாக உள்ளதாகவும், தேசப்பற்றுள்ள அரசை வீழ்த்தியுள்ளதாகவும் கூறுகின்றனர்.

நாம் யாருக்கும் அடிபணியவில்லை என்பதற்குப் பதில் கூற வேண்டிய அவசியமில்லை. காரணம், எமது செயற்பாடுகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்பன, •நாம் தேசத்தை காட்டிக்கொடுத்தோமா, சர்வதேசத்திடம் அடிபணிந்துள்ளோமா என்பதைப் புரியவைக்கும். சர்வதேசத்துக்கு அடிபணிய வேண்டிய தேவை எமக்கில்லை. அதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை என்பதையும் உங்களுக்குத் தெளிவாகக் கூறுகின்றேன். ஆயிரம்ஆண்டுகள்வரலாற்றைக்கொண்ட எமது கலாசாரத்தில், நாம் ஒரு கறுப்புப் புள்ளியை ஏற்படுத்தமாட்டோம்.

சிலர் இந்த அரசை இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் கவிழ்த்துவிட்டுப் புதிய அரசை உருவாக்கலாம் என மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். கற்பனையில் மிதந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால் எவராலும் இன்னும் 5 வருடங்களுக்கு எம்மை அசைக்க முடியாது. ஆகவே அரசை கவிழ்த்து விடலாம் எனவும் ஏகாதிபத்திய வாதியாகவும் கனவு காண்பவர்கள் அதனை மறந்துவிட வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை பெறுவது குறித்துப் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 10 வருடங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இன்று சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றில் பிரவேசித்துள்ள நிலையில், எமது அமைச்சர்கள் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பது பிழையா என நான் கேட்கின்றேன்.

எனவே இவ்வாறான பலத்த சவால்கள் நிறைந்த எமது பயணத்தில், அனைவரும் கைகோர்த்து எமது இலக்குகளை எட்டுவதற்கு உதவ வேண்டும்.

அத்துடன், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களை அர்ப்பணிப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்படுமாறு கேட்டுக்கொள்வதோடு, உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்–என்றார். (த–வ)

## 19 இராஜாங்க,

வழங்கப்பட்டன.

பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளுக்குச் சிறுபான்மையின உறுப்பினர்கள் ஏழு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இரண்டு பிரதியமைச்சர் பதிவிகளும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு ஒரு பிரதியமைச்சர் பதவியும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு ஒரு இராஜாங்க அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டன. அது தவிர, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப் பட்டுள்ளதுடன், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஓர் இலட்சத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்ற களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தேவரப்பெரும, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஜன ராஜகருணா உள்ளிட்ட பலருக்கு ஐக்கிய தேசியக் கட்சி பிரதி அமைச்சோ, இராஜாங்க அமைச்சுகளோ வழங்காமையானது சர்ச்சை யைக் கிளப்பியுள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள்– 19

சிறிலங்கா சுதந்திரக் கட்சி–09

01.ஏ.எச்.எம்.பௌசி – தேசிய ஒருமைப்பாடு

02.டிலான் பெரேரா – பெருந்தெருக்கள்

03.ரி.பி.ஏக்கநாயக்க – காணி

04.பிரியங்கர ஜயரட்ன – சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு

05.லக்ஷ்மன் யாப்பா – நிதி

06.மொஹான் லால் கிரேரு – பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்

07.சுதர்சினிபெர்னாண்டோபுள்ளே – நீர்வழங்கல் நீர்விநி யோகம்

08.சம்பிக்க பிரேமதாஸ –தொழிற்சாலை

09.ஹிஸ்புல்லாஹ் –புனர்வாழ்வு, மீள்குடியேற்றம்

ஐ.தே.க– 09

10.நிரோஜன் பெரேரா – தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்

11.ருவான் விஜேவர்த்தன – பாதுகாப்பு

12.விஜயகலா மகேஸ்வரன் – சிறுவர் விவகாரம்

13.சுஜீவ சேனசிங்க –வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு

14.வசந்த சேனாநாயக்க – நீர்ப்பாசனம்

15.வசந்த அலுவிகார – விவசாயம்

16.பாலித ரங்கே பண்டார – தொழிநுட்ப, தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு.

17.ரவி சமரவீர –தொழில் உறவுகள்

18.திலிப் வெதஆராச்சி – மீன்பிடித்துறை

மலையக மக்கள் முன்னணி– 01

19.வி.இராதாகிருஸ்ணன் – கல்வி

பிரதி அமைச்சர்கள் – 21

சுதந்திரக் கட்சி – 11

01.சுமேதா ஜி ஜயசேன –வனுவாதார அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள்

02.சுசந்த புஞ்சிநிலமே – பொதுநிர்வாகம்

03.லசந்த அழகியவன்ன – மெகாபொலிஸ்

04.இந்திக்க பண்டாரநாயக்க – வீடமைப்பு

05.துலிப் விஜேசேகர – தபால் சேவைகள்

06.லக்ஷ்மன் வசந்த பெரேரா – பெருந்தோட்ட கைத்தொழில்துறை

07.நிஷாந்த முத்துஹெட்டிகம – துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அலுவல்கள்

08.துனேஸ் கன்கந்த – இடர் முகாமைத்துவம்

09.அருந்திக்க பெனாண்டோ – உள்நாட்டலுவல்கள்

10 – தரணத் பஸ்நாயக்க – தொலைத் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு

11.நிமல் லன்சா – சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள்

ஐ.தே.க. – 07

12.அனோமா கமகே – பெற் றோலியம் மற்றும் பெற்றோலிய வாயு

13.ஹர்ஷ டிசில்வா – வெளிவிவகார

14.அஜித் பி பெரேரா – மின்வலு மற்றும் வலுசக்தி

15.எரான் விக்ரமரட்ன – அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி

16.ரஞ்சன் ராமநாயக்க –சமூக சேவை

17.அசோக்க அபேசிங்க – போக்குவரத்து

18.கருணாரட்ன பரணவி தாரண –உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள்

முஸ்லிம் காங்கிரஸ் – 02

19.பைசல் காசிம் – சுகாதாரம், போஷனம் மற்றும் சுதேச வைத்தியம்

20.எச்.எம்.ஹாரிஸ் – விளையாட்டுத்துறை

அ.இ.ம.க. – 01

21.அமீர் அலி – கிராமிய பொருளாதாரம்

என இராஜாங்க மற்றும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (த–சி)

## கூட்டமைப்பு

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதமர், தேசிய அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில், நாம் புதிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பொதுநலவாய நாடுகள் மற்றும் சர்வதேச நாடுகளிலும் தேசிய அரசுகள் உள்ளன. ஆனால், எங்கள் மக்கள் அந்த நாடுகளிலும் பார்க்க அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர்.

பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று மிகவும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு 2 வருடங்கள் போதுமானதென நான் நினைக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, சகல மக்களும் அணிதிரள வேண்டும் – என்று அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

(த–5)

## சீனி

இதேவேளை, சீனியின் கட்டுப்பாட்டு விலை 95 ரூபா எனவும், அந்த விலையில் மாற்றமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

சீனி, உருளைக்கிழங்கு உள்ளிட்ட 9 வகையான இறக்குமதி உணவுப் பொருள்களுக்கான விசேட வர்த்தக வரி நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமின் புதிய விசேட வர்த்தக வரி 40 ரூபா என புதிய வரி மீளாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராமின் புதிய விசேட வர்த்தக வரி 10 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சீனி ஒரு கிலோகிராமின் புதிய வர்த்தக வரி 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சுங்கத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. அத்துடன், இறக்குமதி செய்யப்படும் கௌபி ஒரு கிலோ கிராமின் புதிய வரி 70 ரூபாவாகவும், பருப்பு மற்றும் மைசூர் பருப்பு ஆகியவற்றிற்கு புதிதாக 2 ரூபா விசேட வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் குரக்கனுக்கான புதிய விசேட வர்த்தக வரி 70 ரூபாவாகும். இறக்குமதி செய்யப்படும் மாஜரின் ஒரு கிலோ கிராமுக்கான புதிய விசேட வர்த்தக வரி 175 ரூபாவாகும்.

இதேவேளை, பச்சைப் பட்டாணி உட்பட மேலும் சில தானியங்களுக்கான விசேட வர்த்தக வரியும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

(த–வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய எம்.பிக்களுக்கு விசேட செயலமர்வு இன்றும் நாளையும்

புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வொன்று இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது. நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக திசாநாயக்க தெரிவித்துள்ளார். சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் இன்று காலை ஆரம்பமாகும் முதல் நாள் அமர்வின் சிறப்பு அதிதியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார். இதில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இந்நாட்டு நிரந்தரப் பிரதிநிதி ஸுப்நாய் நெண்ட், அதன் ஆலோசகர் சாள்ஸ் சோவேள் உட்பட பல பிரமுகர்கள் விசேட உரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

# எதிர்க்கட்சித் தலைவருக்கு முஸ்லிம் காங்கிரஸ் வாழ்த்து

கொழும்பு, செப். 10

இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டதன் மூலம் நாடாளுமன்ற வரலாற்றில் சிறுபான்மை மக்கள் சார்பான நம்பிக்கைகளில் தைரியத்தையும், உற்சாகத்தையும் மீண்டும் ஒருமுறை ஏற்படுத்த உறுதுணையாக இருந்துள்ளார் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பணிப்பாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா மதனி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனை வாழ்த்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீண்ட நெடுங்காலமாக ஜனநாயகத்தில் தங்களுக்கிருந்த பற்றுறுதி காரணமாகவே நீங்கள் ஜனநாயகத்தின் பேரால் இப்போது கௌரவப்படுத்தப்பட்டிருக்கின்றீர்கள். தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் அ.அமிர்தலிங்கம் 18 தமிழ்ப் பிரதிநிதிகளுடன் அப்போதைய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றினார். பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான நீங்கள் 16 பிரதிநிதிகளுடன் இந்தப் புதிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். தோன்றியுள்ள சமாதானச் சூழலில் துளிர்விட்டிருக்கின்ற நல்லாட்சி எனும் சிந்தனைகளின் மத்தியில் உங்களைப் போன்ற மூத்த அரசியல் ஞானியும், ஜனநாயகவாதியும், நல்லாட்சிக் கோட்பாடுகளின் நேசரும், பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களைத் துடைக்கப் பாடுபடுபவரும், சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவருமான நீங்கள் இப்பதவிக்கு இந்தக் கால கட்டத்தில் நியமிக்கப்பட்டிருப்பது தேசிய, சர்வதேச மட்டங்களில் நமது தாய் நாட்டின் சிறப்பையும் இங்கு நிலவுகின்ற நல்லாட்சி பற்றிய நம்பிக்கையையும் மேலோங்கச் செய்யும்.

இந்த நிலைமைக்கு தங்களை இட்டுச் செல்வதற்காகப் பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் முகம் கொடுத்து பொறுமையோடு தங்களுக்கு ஒத்தாசையாகவும், உறுதுணையாகவும் இருந்த வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களும், அரசியல் அரங்கில் வெற்றிநடை போடக் காரணியாக அமைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அத்தனை அங்கத்தவர்களும் இங்கு நன்றி உணர்வுகளுடன் வாழ்த்தப்படவேண்டியவர்களே -என்றுள்ளது.

(த-10)

# ரஷ்ய இராஜதந்திரி மீது கொழும்பில் தாக்குதல்

## விசாரணைக்கு மங்கள உத்தரவு

கொழும்பு, செப்.10

கொழும்பில் உள்ள வாகனத் தரிப்பிடம் ஒன்றில், ரஷ்ய இராஜதந்திரி ஒருவர் வாகனச் சாரதியால் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வார இறுதியில் இடம்பெற்றுள்ளது.



கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகத்தில் பணியாற்றும் மூத்த இராஜதந்திரியே தாக்குதலுக்கு இலக்கானார். ஹைட்பார்க் கோணரில் ஆர்பிக்கோ வாகனத் தரிப்பிடத்தில், வாகனத்தை நிறுத்தியதில் ஏற்பட்ட சச்சரவை அடுத்தே, பி.எம்.டபிள்யூ வாகனச் சாரதியால், ரஷ்ய இராஜதந்திரி தாக்கப்பட்டார்.

இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சுக்குச் சென்ற குறிப்பிட்ட ரஷ்ய இராஜதந்திரி, அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து இதுதொடர்பாக முறைப்பாடு செய்தார்.

இதையடுத்து, இந்தச் சம்பவத்துக்காக இலங்கை சார்பில் மன்னிப்புக் கோரிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ரஷ்ய இராஜதந்திரியைத் தாக்கிய வாகனச் சாரதி மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பான காணொலிப் பதிவு ஒன்று முகநூலில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-வ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

***நியூட்டன் வி.கழகத் தொடர்***

கரணவாய், செப். 10

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட



ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர், குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவ குமரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-108)

***உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தொடர்***

வடமாகாண உடற்கல்வி ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறை யிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக் கிழமை இடம்பெறும் காலிறுதியாட் டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# கிண்ணம் வென்றது நவஜீவன்ஸ்

## பாரதியின் தொடரில் விண்மீனை வீழ்த்தி

கரணவாய், செப்., 9

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன் பாரதி விளை யாட்டுக்கழகம் நடத்திய உதைபந் தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பின்கள வீரர்களின் அற்புதமான தற்காப்பு மற்றும் எதிர்த் தாக்குதல் கட்டுக்கோப்பான பந்துப்பரிமாற் றம் என்பன கைகொடுக்க விண்மீன் அணியை வீழ்த்தி கிண்ணம் வென் றது நவஜீவன்ஸ் அணி.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தி லேயே நவஜீவன்ஸ் சார்பாக முதல் கோல் பதிவானது. கோல்க் கொண் டாட்டங்களும் ஆர்ப்பரிப்புக்களும் அடங்குவதற்குள் விண்மீன் சார் பாக பதில்கோல் பதியப்பட்டது. தற்பொழுது 1:1 என்ற நிலைமை. போராட்டம் தீவிரமாக நடைபெற் றுக்கொண்டிருந்தது. 14ஆவது நிமிடத் தில் விண்மீன் சார்பாக மற்று மொரு கோல் பதியப்பட விண் மீனின் ஆதிக்கம் ஆரம்பமாகியது. கோல் கணக்கை ஆரம்பித்து வைத்த நவஜீவன்ஸ் தற்பொழுது கோலுக்காக போராட வேண்டிய நிலைமை. விடாப்பிடியான போராட் டம் நவஜீவன்ஸ் அணிக்கு சிறப் பாக பயனளிக்கவே செய்தது. தொடர்ச்சியாக இரண்டு கோல்கள் சொற்ப நிமிட இடைவேளைக்குள் நவஜீவன்ஸ் சார்பாக பதிவாக 3:2 என்ற நவஜீவன்ஸின் ஆதிக்கத் துடன் ஆட்டத்தின் முதல்பாதி முடி வுக்கு வந்தது.

பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டா யத்தில் விண்மீன். ஆதிக்கத்தை தக்க வைக்க வேண்டிய நிலைமையில் நவஜீவன்ஸ். நவஜீவன்ஸின் அணி யின் சில வீரர்கள் தாக்குதல் விளை யாட்டை கைவிட்டு தற்காப்பு நட வடிக்கையில் ஈடுபட்டனர். சிலர் தாக்குதல்களில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். மொத் தத்தில் பக்கா பிளான். மேலும் ஒரு கோல் நவஜீவன்ஸ் சார்பாக பதியப் பட அந்த அணியின் வெற்றி கிட்டத் தட்ட உறுதியானது. மேற்கொண்டு எந்த அணியாலும் கோலெதுவும் பதியப்படாத நிலையில் முடிவில் 4:2 என்ற கோல்கணக்கில் நவ ஜீவன்ஸ் வெற்றிபெற்று பாரதியின் கிண்ணத்தை தமதாக்கியது.

ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணியின் பின்கள வீரர் சங்கரும் தொடராட்டநாயகனாக அதே அணி யைச் சேர்ந்த உசானந்தும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணி யைச் சேர்ந்த ரஜீவனும் சிறந்த தடுப்பு வீரராக கௌதமனும் தெரிவு செய்யப்பட்டதோடு மக்களைக் கவர்ந்த வீரராக பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக வீரர் டேமி யனும் வளர்ந்துவரும் வீரராக றேஞ்சர்ஸ் அணியின் ரவிவர் மனும் தெரிவுசெய்யப்பட்டனர். சிறந்த நன்னடத்தை அணியாக திக் கம் இளைஞர் அணி தெரிவுசெய் யப்பட்டது. கிண்ணங்களை நிகழ் வில் பிரதம விருந்தினாராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் சு.சுகிர்தன் மற்றும் பிரதேசசபை யின் முன்னாள் தவிசாளர் பூ.சஞ் சீவன் மற்றும் கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் க.பரஞ்சோதி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ம-108)

# வறட்சியான பதக்கப் பட்டியல்

## யாழ். பல்கலைக்கு ஒரேயொரு தங்கம்



வலி வடக்கு, செப். 10

இலங்கை பல்கலைக் கழகங் களுக்கு இடையே நடைபெற்ற தடகளத் தொடரில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை ஒரு தங்கப்பதக்கம் உட்பட மொத்தம் 8 பதக்கங்கள் மட் டுமே பெறப்பட்டுள்ளன.

குறித்த தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை பிரதிநிதித் துவம்செய்துகளமிறங்கியமூன்று வீரர்களும் மூன்று வீராங்கனை களுமே பதக்கங்களை பெற் றுள்ளார்கள். ஆண்கள் பிரிவில் என்.லியனகே ஈட்டி எறிதலில் வெள் ளிப் பதக்கத்தையும் தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தையும் பெற் றுக்கொள்ள எ.பிரசன்னா தட்டெறி தலில் வெள்ளிப் பதக்கத்தையும் கே.கஜிபன் உயரம் பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள் ளார்.

பெண்கள் பிரிவில் எஸ்.தாரணி ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கத்தை யும் (யாழ். பல்கலைக்கு கிடைத்த ஒரேயொரு தங்கப்பதக்கம்) தட் டெறிதலில் வெண்கலப் பதக்கத் தையும் பெற்றுக்கொள்ள ஜீ.துஸ் யந்தி உயரம் பாய்தலில் வெள் ளிப் பதக்கத்தையும் ஆர்.துஸ் யந்தி 800 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற் றுள்ளார்.

கடந்த காலத் தடகளத் தொடர் களுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் குறைந்த பதக்கங்களே இம்முறை யாழ். பல்கலைக்கு கிடைத்துள்ளதாக விளையாட்டு ஆர்வலர்கள் கவலை தெரிவிக் கின்றார்கள். (ம-86-23)

# அம்பாளை வீழ்த்தியது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், செப். 10

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளை ஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித் துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங் களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினைப் பெற்றமையால் ஆட் டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தகர்ப்பு உதைகளில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# மேசைப் பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், செப். 10

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் அனுசரணையுடன் யாழ். மேசைப்பந்தாட்டச்சங்கம் நடத்தும் மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம் எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி யில் காலை 8.30மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெற வுள்ளது. குறித்த பயிற்சி முகாமில் வடமாகாணத்தை சேர்த்த 100இற்கு மேற்பட்ட மேசைப்பந்தாட்ட வீர வீராங்கனைகள் கலந்து கொள்ள வுள்ளனர். (ம-23)



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற [illegible] கான பளு தூக்கல் போட்டியில் ஆண்களுக்கான 105 கிலோ [illegible] பிரிவில் யாழ். பல்கலைக்கழக மாணவன் சித்திக் மெத்தமாக 200 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். (ம-23)

# வாகை சூடியது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், செப்.10

வத்திராய் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரில் சமநிலைத் தகர்ப்பு முறைமூலம் வாகை சூடியது சென்.மேரிஸ் கழகம்.


நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை உதய சூரி யன் வி.கழக மைதானத்தில் இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம் பெற்ற குறித்த இறுதியாட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா இரு கோல்களைப் பெற்றமை யால் ஆட்டம் சமநிலையில் முடி வடைந்து. சமநிலை தவிர்ப்பு உதை களில் கட்டைக்காடு சென்.மேரி ளிஸ் அணி 4:1 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. ஆட்ட நாயகனாக கட்டைக்காடு சென் மேரிஸ் அணியின் சதீஸ் தெரிவான அதேநேரம் தொடராட்ட நாயகனாக அதே அணியின் சுதர் சன் தெரிவானார். சிறந்த நன்னடத்தை அணி யாக சக்கோட்டை சென்.சேவியர் அணி தெரிவானது. சிறந்த கோல் காப்பாளராக கொற றவத்தை றேஞ்சர்ஸ் அணியின் நிரோசன் தெரி வானர். குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாய கன் கலந்து கொண்டார். (ம-23-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பித்தது இங்கிலாந்து

## தொடரை இழக்கும் நிலையில் இருந்து மீட்சி



இங்கிலாந்து–ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் 93 ஓட்டங்களால் ஆஸியை வீழ்த்தித் தொடரை இழக்கும் நிலையில் இருந்து தற்காலிகமாக தப்பித்துக்கொண்டது இங்கிலாந்து. முடிந்த முதல் மூன்று ஆட்டங்களின் அடிப்படையில் ஆஸ்திரேலியா 2–1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் ஹேல்ஸ். டெஸ்ட் பாணியில் நிதானித்தார் ஹேல்ஸ். அதிரடியாக விளையாடி ஹேல்ஸின் மூலம் வீணடிக்கப்பட்ட பந்துகளை சமன்செய்து கொண்டிருந்தார் றோய். 31 பந்துகளில் வெறும் ஒன்பது ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹேல்ஸ். இங்கிலாந்தின் முதல் இலக்கு வீழ்ந்தது. இணைந்தார் ரெய்லர். குறிப்பிட்டுச் சொல்லும் படியான சிறப்பான இணைப்பாட்டம் அரங்கேறியது. அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் றோய். வந்த வேகத்தில் அதிரடி காட்டினார் மோர்கன். சரிவில் இருந்து மீண்டது இங்கிலாந்து. 86 ஓட்டங்களில் வீழ்ந்தது இரண்டாவது இலக்கு. 200 ஓட்டங்களை எட்டியாயிற்று, மூன்றாவது இலக்கு வீழ்ந்தபாடில்லை. இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை 205ஆக இருந்தபோது மூன்றாவது இலக்காக 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மோர்கன். மறுமுனையில் சதம் கடந்தார் ரெய்லர். பின்வரிசை வீரர்களும் சுமாரான பங்களிப்பை வழங்க முடிவில் இங்கிலாந்து 300 ஓட்டங்கள்.

300 பந்துகளில் 301 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் ஆஸியின் ஆரம்ப வீரர்களாக பேர்ண்ஸ் மற்றும் பின்ஞ். இங்கிலாந்தின் ஆரம்பத்தைப் போன்றே ஆஸியின் ஆரம்பமும் சொதப்பியது. ஒன்பது ஓட்டங்களுடன் விடைபெற்றார் பேர்ண்ஸ். பிஞ்ச்–சிமித் இருவரும் சிறிது நேரம் தாக்குப்பிடித்தாலும் 301 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டக்கூடிய விதத்தில் ஆட்டம் இருக்கவில்லை. இலக்குச் சரிவை தடுத்து நிறுத்துவதே இருவரினதும் போராட்டமாக இருந்தது. இருப்பினும் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சிமித். அரைச்சதத்துடன் விடைபெற்றார் பிஞ்ச். மக்ஸ்வெல், மார்ஸ் இரு அதிரடிவீரர்களின் ஆட்டமும் எடுபடவில்லை. வேட் மட்டும் சிறிது போராட்ட குணம் காட்டினார். ஆயினும் 8 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார். பின்வரிசை வீரர்கள் வந்த வேகத்தில் பவிலியன் திரும்ப, முடிவில் ஆஸ்திரேலியா 207 ஓட்டங்களில் சுருண்டு 93 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக சதம் கடந்த ரெய்லர் தெரிவானார். (ம)



# சானியா-கிங்கிஸ் காலிறுதிக்குத் தகுதி

நடப்பு வருடத்தின் இறுதி சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடரான அமெரிக்கன் ரென்னிஸ்தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. குறித்த தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா – சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா கிங்கிஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் ஆட்டங்களில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்த இணை தங்களின் 3ஆவது சுற்றில் 6–3, 6–0 என்ற நேர் செற்களில் நெதர்லாந்தின் மைக்கேலா கிராஜிசெக் – செக் குடியரசின் பர்போரா சுட்ரைகோவா இணையை தோற்கடித்தது. (ம)

# இலங்கைக்கு புதிய பயிற்சியாளர்




இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக ஜேரோம் ஜெயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் இலங்கை – இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்ளைக்கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. இதில் இந்திய அணி 2–1 எனத் தொடரை கைப்பற்றியது. இந்தத் தோல்வியைத் தொடர்ந்து இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த மாவன் அத்தப்பத்து திடீரென்று பதவிவிலகினார். இந்நிலையில் அந்த அணியின் இடைக்காலத் தலைமைப் பயிற்சியாளராக ஜேரோம் ஜெயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# பிரட்மனின் ஆடையும் சாதனை

கிரிக்கெட்டின் பிதாமகன் பிரட்மன். 1936–37ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான ஆசஸ் தொடரில் இவர் பயன்படுத்தி இருந்த மேல்சட்டை ஒரு கோடியே 80 லட்சத்துக்கு விற்பனையாகிச் சாதனை படைத்தது. பிரட்மன் பயன்படுத்திய பொருள்கள் அனைத்தும் அருங்காட்சியகத்தில் பத்திரமாக இருக்கின்றன. இதில் பிரட்மன் பயன்படுத்திய பிசேர் எனப்படும் பச்சைநிற மேற்சட்டைதான் தற்போது இவ்வளவு அதிகமான தொகைக்கு விற்பனையாகி உள்ளது. (ம)





## சச்சினைத் தோற்கடித்த கோக்லி

ருவிட்டரில் பிரபலமாகவுள்ள விளையாட்டு வீரர்கள் பட்டியலில் சச்சினைத் தோற்கடித்துள்ளார் கோக்லி.

இந்திய டெஸ்ட் அணித்தலைவர் விராட் கோக்லியை ருவிட்டரில் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் பின் தொடர்கிறார்கள். சமீபத்தில் முடிந்த இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–1 என விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணி வென்ற பிறகு அவரது ருவிட்டர் ரசிகர்களின் எண்ணிக்கை அதிகளவு உயர்ந்துள்ளது. இதனால் அவர் ருவிட்டரில் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட ரசிகர்களைப் பெற்றுள்ளார். இதன் மூலம் விராட் கோக்லி இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை முந்தியுள்ளார். சச்சினை 77 லட்சம் ரசிகர்கள் பின் தொடர்கிறார்கள். அதேசமயம் ஒருநாள் போட்டி தலைவர் டோனி 45 லட்சம் ரசிகர்களைப் பெற்றுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குள்ளேயே விரோதி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டமொன்றில் வீனஸ் வில்லியம்ஸை வெளியேற்றியுள்ளார் அவரது சகோதரியான செரீனா வில்லியம்ஸ். உலகின் முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் காலிறுதியில் தனது சகோதரியும், 23ஆம் நிலை வீராங் கனையுமான வீனஸ் வில்லியம்சை எதிர்கொண்டார். இதன் முதல்செட்டை செரீனா 6–2 என்ற கணக்கில் எளிதில் வென்றார். ஆனால் 2ஆவது செற்றை வீனஸ் 6–1 என்ற கணக்கில் எளிதில் வென்று பதிலடி கொடுத்தார். இருவரும் தலா ஒரு செற்றை வென்றிருந்ததால் வெற்றி – தோல்வியை நிர்ணயம் செய்யும் கடைசி செற்றில் பரபரப்பு ஏற்பட்டது. இந்த செற்றை செரீனா 6–3 என்ற கணக்கில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

(ம)


இதோ வெளிவந்துவிட்டது...



செப்டெம்பர் மாத ஒளிஅரசி அறிவுப் பயணத்தில்

Top 4 in August

இலவச சுயதொழில் கையேடு

இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள்

O/L – கணிதம், விஞ்ஞானம் (எதிர்பார்க்கை வினாக்கள்)

மாணவர்களுக்கான போட்டிகள் (பக்கம் – 23)

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

0718 628379 / 011 5737592 | 077 6569617 / 077 2772726

**வான் தேவை**

CR42-TOWN ACC, 4 கதவு, Flat Roof

விற்க விரும்புவோர்

தொடர்பு: 077 230 6653

**ஆங்கிலம்** மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி வகுப்பு



புதிய பயிற்சிநெறி ஆரம்பம் : 12.09.2015

SAAMSON Experts in English Training

077 621 4567

021 320 3313

**யாழ். நகரில் வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள்**

பிரிவு I- தி..., செவ்வாய், வெள்ளி (பி.ப.3.45-5.45)

ஆரம்பம்: 11.09.2015

பிரிவு II- சனி, ஞாயிறு, (பி.ப.2.00-5.00)

ஆரம்பம்: 12.09.2015

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிப்பிரிவு, 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

T.P: 021 222 3382, 0772068760, 0774405917

**G.C.E. A/L 2016,2017**

வணிகக்கல்வி: S.ரிஷி

பொருளியல்: E.ஞானேஸ்வரன்

கணக்கீடு: S.கருணைதாஸ்

விசேட கொடுப்பனவு

60%

வரையிலான தள்ளுபடி

செப்டெம்பர் மாதம் 07 - 12 வரை யாழ்ப்பாண K.K.S. தெருவில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தில்

FORMAL WEAR | CASUAL WEAR | EVENING WEAR | ACCESSORIES

Signature The Achiever's Choice

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0772 907 214


## நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 03.12.1939 | இறப்பு 22.08.2014

**அமரர் செல்லையா மகேஸ்வரன்**

(ஸ்தாபகர்-யாழ்.மின்னகம் மகேஸ் & சன்ஸ், மகாநதி ரெக்ஸ்)

திதி: அபரபட்ச திரயோதசி (10.09.2015)

முதலாம் ஆண்டைக் கடந்து செல்லும் எங்கள் குலவிளக்கின்
பொன்னான பாதங்களுக்கு சமர்ப்பணம்!

பாசமிகு தந்தையே! தெய்வமே!
ஆண்டொன்று ஓடியதோ அன்பான முகம்பார்த்து
அன்பான குரல் கேட்டு ஆனதுவோ வருடமொன்று
நம்பத்தான் முடியவில்லை அன்பான மனைவி பிள்ளைகளால்
மாற்றோர் மறந்தாலும் மனைவி பிள்ளைகள் நாங்கள் மறப்போமா?
மறக்க முடிந்தாலும் மறந்திடுமோ உங்கள் பாசம்
அகிலமிருக்குமட்டும் ஆங்கிருக்கும் நம்பாசம்

பொறுமையோடு செயலாற்றிய பொறுப்புமிக்கத் தலைவனாக துணிவுடனும் தூரநோக்குடனும் உழைப்பின் சிகரமென்னும் உன்னத ஆசானாய் எங்கள் அனைவரதும் உயர்வுக்கெல்லாம் வழிகாட்டி வளம் சேர்த்த இதய தெய்வத்தின் பசுமையான பாதச்சுவடுகளை நாம் பாசமுடன் தொடர இன்று மனமுருகி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

மனதும் நினைவுகளுடன்

127/6, கோயில் வீதி, ...

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.